

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
MANGAYAR MALAR
நவம்பர் 2006
262 பக்கங்கள் ரூ.18/-
இலவச இணைப்பு
சேமிப்பு
64
3
த்தகங்கள்
புத்தம் புதிய தொடர்
ஆனந்தம் தரும் ஆசனம்



நெஞ்சில்
நிலைபெற
வேண்டிய
தருணங்களில்...
www.radicaladvertising.com
VBJ
SINCE 1900
Vummidi Bangaru Jewellers
GOLD | DIAMOND | PLATINUM | SILVER
Shop online at www.vummidi.com
Rani Seethai Hall, Parallel to Gemini Flyover, 603, 1st Floor, Anna Salai, Chennai - 600 006
Phone: 044 2829 2004 / 2829 2006 / 2829 2009 | e-mail: vummidi2000@yahoo.com


அழகின்
பராமரிப்பு
இயற்கையான வழியில்
அழகு சாதனப் பொருட்கள்
என்றாலே நம் கண் முன் நிற்பது,
செயற்கையான ரசாயன முறையில்
தயாரிக்கப்பட்டவையே.
ஆனால்.... டீம் ஷாப்பி,
புத்துணர்வுமிக்க மாற்றத்தை
மூலிகை பொருட்களால்
தயாரிக்கப்பட்ட அழகு சாதனப்
பொருட்களின் மூலம் வழங்குகிறது.
அவை சருமத்தின் மென்மை
கெடாமல், உயர்ரக
குணநலன்களுடன்
மேனி அழகை
பராமரிக்கின்றன.
Team Beauty Products
• ALOE CARE MOISTURISING CREAM
• ALOE MULTIPURPOSE GEL
• ALOE CARE FAIRNESS OIL
• ALOE CARE FACIAL GEL
& a wide range of Aloevera based beauty products
Member
Dr. Rao's
For trade enquiries, please contact:
teamhealthshoppe@drraoholdings.com
Team Health Shoppe, Team House,
GST Road, Vandalur, Chennai - 48.
TEAM EUBIO CARE
(Division of Chemfab Alkalis Limited)
VANDALUR Team House - GST Rd. Ch-48. Ph: 2275 0502
ANNA NAGAR Plot 1200, Z Block, 6th Avenue, Ch-40
(Opp. Kokino Karate School)
Ph: 4269 3332
Team Health Shoppe
For Wellness
SHORTLY @ INDIRA NAGAR, ADYAR
E-mail : teamhealthshoppe@drraoholdings.com
Web : www.teamhealthshoppe.com



அதிரடித் தொடர்கள் ஆரம்பம்

ஆனந்தம் தரும் ஆசனம் - 8
இனிக்குதே இளமை - 146

சிறுகதைகள்...

காதல் நாரைகள் - 108

ரூ. 1000 பரிசு பெறும் போட்டிக் கதை - 120

கண் தேடும் தொடர்கள்

தவமாய்த் தவமிருந்து - 28
என்னை விட்டுப் போகாதே - 40
சரணம் ஷீரடி சாயி - 138

அழகு

வீட்டிலேயே அழகு சிகிச்சைகள் - 24
அழகாய் இணைக்க - 154
மணப்பெண் அலங்காரம் - 188

சமையல்

இம்மாத இல்லத்தரசி - 72

முதலில் படிக்க...

ஒரு வார்த்தை - 5
அன்பு வட்டம் - 156

மருத்துவம்

பார்வைத் திருடர்கள் - 88
ஈஸியா எடுக்கலாமே ஈ.ஸி.ஜி. - 98



தரத்திலும் நம்பர்




அனைவருக்கும் திருகார்த்திகை
நல்வாழ்த்துக்கள்!

கார்த்திகை ஸ்பெஷல் நைவேத்தியம் - 132

ஜோதிடம்

இந்த மாதம் எப்படி? - 58

விரும்பிப் படிக்க

சட்டம் - 36
இனிய தம்பதி - 92
கல்பனா ஸ்ரீகாந்த் பதில்கள் - 68

மளிகை மாளிகை - 177

சாதனைப் பெண் - 12

கைவேலை


சிரிக்கும் செடி பூக்கள் - 20
ஆயிரம் இதழ்கள் - 142

குஷி பக்கங்கள்

வாசகர் கடிதங்கள் - 34
செல்லமே - 50
குட்டீஸ் ஜூட்டி - 56

அட்டையில் :
சத்யஷில்பா
படம் : ஸ்ரீஹரி





போட்டி
முடிவுகள்
16, 145

களிர் மாத இதழ்!
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
மலர் : 26 இதழ் : 10 நவம்பர் 2006

ஒரு ஊருல ஒரு ராஜா! அவனுக்கு ஓர் அழகான மனைவி. பெண்டாட்டி மேல ராஜாவுக்குக் கொள்ளைப் பிரியம். ஆனால், அந்த ராணியோ எப்போதும் சோக மாவே இருந்தாள். என்ன வெல்லாமோ செஞ்சு பார்த் தான் ராஜா; அவளைச் சந் தோஷப்படுத்தவே முடியலை.

''என்ன செஞ்சா ராணி சந்தோஷப்படுவான்னு சரியா சொல்றவங்களுக்கு, ஒரு வட்சம் பொற்காசுகள் பரிசு!''ன்னு தண்டோரா போட்டு அறிவித்தான் ராஜா.

யார் யாரோ வந்தாங்க... என்ன எல்லாமோ செஞ் சாங்க. எல்லாமே கொஞ்ச நேரம்தான். மறுபடி அரசி சோகமாயிட்டா!



பக்கத்து நாட்டு இளை ஞன் ஒருத்தனுக்கு இந்த விஷ

ஒரு வார்த்தை!

யம் தெரியவந்தது. உடனே உற்சாகமா கிளம்பிட்டான். வழியில பெரிய காடு. அதுல, ஒரு வயசான சூனியக்காரியைச் சந்திச்சான்.

''ராணியை மட்டுமல்ல; எந்தப் பொண்ணையும் நிரந்தரமா சந்தோஷப் படுத்துற விஷயம் எதுன்னு எனக்குத் தெரியும். அதை நான் உனக்குச் சொல் லித் தருகிறேன். நீ ஜெயிச்சா என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்; சம் மதமா?''ன்னு கேட்டாள்.

இளைஞனும் ஒத்துக்கிட்டு, அந்த ரகசியத்தைத் தெரிஞ்சுக்கிட்டான்.

மறுநாள் - ராஜாவைச் சந்தித்த இளைஞன், ''எந்த ஒரு விஷயத்திலும் இறுதி முடிவை எடுக்கும் நபராக தான் இருக்கும் போதுதான் ஒரு பெண் மகிழ்ச்சி அடைகிறாள்!'' என்ற ரகசி யத்தை உடைக்க ராஜா துள்ளிக் குதித் தான். அதை உடனடியாகப் பரீட்சித் துப் பார்க்கவே, மகாராணியின் முகத்தில் அப்படியொரு சந்தோஷம்.

ஏகக் குஷியாகிப் போன ராஜா, அந்த இளைஞனுக்குப் பரிசுத் தொகையைக் கொடுத்து அனுப்பினான்.

அந்த இளைஞன், சூனியக்காரி யைச் சந்தித்து, ''ரொம்ப நன்றி.. போட்டியில நான் ஜெயிச்சுட்டேன். நம்ப கல்யாணத்தை எப்ப வெச்சுக்க லாம்?''னு கேட்க, உடனே அந்தக் கிழவி, அழகான பெண்ணா உருமாறி

மங்கையர் மலர்
இந்தியாவின் நெ.1 மகளிர் இதழ் :
(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

பொறுப்பாசிரியர் :
அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்,
பி.ஆர். ராஜன்,
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 -22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

மங்கையர் மலர்
இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.225/-
ஆறு மாதம் : ரூ.115/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 39 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

விட்டாள்.

''கிழவியாக இருக்கவும், அழகியா மாறவும் என்கிட்ட மந்திர சக்தி இருக்கு. சரி, உனக்கு நான் இரவு நேரத்துல அழகா இருக்கணுமா? இல்லை... பகல் நேரத்துல அழகா இருக்கணுமா?'' என்று கேட்டாள்.

''எந்த ஒரு விஷயத்துலயும் இறுதி முடி வெடுக்கும் நபராக இருப்பதுதானே ஒரு பெண் ணுக்குப் பிடிக்கும்? நீயே முடிவு செய்''னு புத்தி சாலித்தனமா சொன்னான் இளைஞன்.

எந்தப் பெண்ணாவது, எப்பவாவது கிழவியாக இருக்க விரும்புவாளா?

''நான் 24 மணி நேரமும் அழகாக இருக்கவே விரும்புகிறேன்!'' என்று சொல்லி விடவே... கல்யாணம், சுபம்... சுகம்!

பொன்னோ, புடைவையோ ஏன் கால் கிலோ அல்வாவோ, மூணு முழம் கதம்பமோ கூட ஒரு பெண்ணைச் சந்தோஷப்படுத்தாது.

எந்த ஒரு விஷயத்திலும், பெண்ணின் எண்ணத் தையும் அறிந்து அவளுக்கு முக்கியத்துவம் தந்து நடத்தும் இடங்களில்தான் அவள் சந்தோஷமாக இருப்பாள் என்பதைத்தான் இந்தக் கதை தெரிவிக் கிறது.

ஒரு பெண் சுயநலமாகவோ, முட்டாள்தன மாகவோ முடிவெடுத்தாலும், அதன்படியேதான் நடக்கணுமா என்கிறீர்களா? நிச்சயம் இல்லை!


அதற்குத்தான் 3H வழி இருக்கு! ஹெட், ஹார்ட், ஹேண்ட் அதாவது மூளை, இதயம், கைகள் இம்மூன்றும் இணைந்து ஒரு பெண் எடுக்கும் ஆரோக் கியமான முடிவுக்குத்தான் மதிப்பு தரணும். அவளா லும் அத்தகைய ஆரோக்கியமான முடிவுகளை எடுக்க முடியும். அப்படி அவளால் எடுக்கப்படும் முடிவுகளால், அவள் மட்டுமல்ல, அவளுடைய குடும்பமும், சமுதாயமும் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதுதான் இக் கதையின் நீதி!

சரி, வாசகியரே! இந்தக் கதை சொல்லும் மெஸேஜ் நிஜம்தானா? ஒரு பெண் எப்போது சந்தோஷமாக இருக்கிறாள்? உங்கள் கருத்து என்ன...? அறிய விரும்புகிறேன். சிறந்தவை பிரசுரமாகும்!

அனுராதா சேகர்



Adani Wilmar Limited
மூக்கை பிடிக்க சாப்பிட ரெடியா?
பங்கு கொள்ள தொடர்புகொள்ளுங்கள்
92822 32333
ஃபார்சூன்
டிபன் திருவிழா
கோவை
28 அக்டோபர் 2006
திருநெல்வேலி
18 நவம்பர் 2006
மதுரை
4 நவம்பர் 2006
திருச்சி
2 டிசம்பர் 2006
மூக்கை பிடிக்க சாப்பிடுங்க!
Fortune



* எளிய நிலைகள்

ஆனந்தம் தரும் ஆசனம்

மனிதனின் வாழ்க்கைக்கு அடிப்படையானது ஆரோக்கியமான வாழ்வு. மருத்துவ முன்னேற்றம் கண்ட இந்த இருபதாம் நூற்றாண்டிலும் 'முணுக்' என்றால் வியாதியானது சொல்லாமல் கொள்ளாமல் அழையா விருந்தாளியாக வந்து ஒட்டிக் கொள்கிறது. மாதம் பிறந்தால் மருத்துவ சிகிச்சைக்காக கணிசமான தொகை ஒதுக்க வேண்டிய நிர்ப்பந்தம்!

பூரணமான ஆனந்தமான ஆரோக்கிய வாழ்வு பெற எளிமையான ஒரே வழி யோகாசனம்தான் என்பதை இப்பொழுது எல்லோரும் பரவலாக உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

நமது உடலும், மனமும் தனித்து இயங்குகின்றன. இவை இரண்டையும் ஒன்றுபடுத்தும் நிலையே 'யோகக் கலை' என்பது. இது எல்லோருக்கும் பயன்தரக்கூடியது. தீயபக்க விளைவுகள் இல்லாதது. அதே சமயம், நன்மை தரக்கூடிய பக்கவிளைவுகளை உடலில் தோற்றுவிக்கும். எக்காலத்திலும் பயன்தரவல்ல சர்வரோக நிவாரணி.

ஆதிசேஷனின் அவதாரமாகிய பதஞ்சலி முனிவர் யோக சூத்திரங்களைத் தொகுத்து அளித்திருக்கிறார். 'யோகாவின் தந்தை' என அழைக்கப்படும் இவரது தொகுப்பை புராணங்களிலும், உபநிஷத்துக்களிலும் காணலாம்.

இத்தனை சிறப்புக்கள் நிறைந்த இந்தக் கலையை, எல்லோரும் எளிமையான முறையில், அவரவர் இருக்கும் இடத்திலேயே செய்து பயன்பெறும் வகையில் நமக்கு விளக்குகிறார், ஓய்வுபெற்ற விவேகானந்தா கல்லூரியின் பேராசிரியரும் 'யோகாலயா' கலைக்கூடத்தின் ஸ்தாபகருமான கிருஷ்ண வாஸுதேவன்.

1



பேராசிரியர் கிருஷ்ண வாஸுதேவன்

புத்தம் புதிய தொடர்

''என் தாத்தாவுக்கு இருந்த மாலைக் கண் நோயானது சிறு வயதில் எனக்கும் இருந்தது. படிக்கும் நாட்களில் நான் மிகவும் சிரமப்பட்டிருக்கிறேன். அப்பொழுது 'யோகா'வைப் பற்றி 'கல்கி' இதழில் திரு குமாரசாமி என்பவர் எழுதி வந்தார். என் வேதனையை உணர்ந்த அவர் உடனே எனக்கு குருவாக இருந்து இக்கலையை எனக்குச் சொல்லிக் கொடுத்தார். என்ன ஆச்சரியம்... அதற்குப் பிறகு மாலைக் கண் பிரச்னை என்னை விட்டு முழுமையாக விலக்கப்பட்டு கண்ணாடி





• நிலை 1 (சுகாஸனம்)

அதைப் படித்துவிட்டு, அதைக் கற்கும் ஆவலில் சென்றேன். ஒரு மாத காலம் அவர் ''இப்பவா... அப்பவா...'' என்று அலைக்கழித்ததையும் பொருட்படுத்தாமல் திடமனதோடு சென்றேன். நான் தினமும் வந்து நிற்பதைப் பார்த்துப் பொறுக்க முடியாத அவர் ''என்ன வேணும்?'' என்று கேட்டேவிட்டார்.

''உடனே என் குறைபாட்டை தெரிவித்தேன்.

மட்டும் அணியும் நிலை வந்தது. இன்னிக்கும் பல அலுவல்கள் காரணமாக நான் வெளியே போயிட்டு இரவு பத்து மணிக்கு மேல் தான் வீடு திரும்பறேன். எனக்கு 'யோகா' அளித்த இந்த சுகானுபாவத்தை எல்லோருக்கும் தர விரும்பியே இத் தொடரை எழுதுகிறேன்.



• நிலை 2 (சதுராஸனம்)

"**யோ**கா செய்யத் தொடங்கு வதற்கு முன் இலகுவான அடிப்படை நிலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைச் செய்தபின் யோகா பயிற்சியை மேற்கொண்டால் சரீரம் நாம் நினைக்கின்றவாகில் ஒத்துழைக்கும். காலுக்கு கத்தரிக்காய், முதுகுக்கு முருங்கைக்காய் என்றெல்லாம் யோகா சனங்களைத் தனித்தனியாக, இந்த வியாதிக்கு இந்த ஆசனம் என்று பிரித் தெடுக்க முடியாது. யோகாசனம் செய்தால் உடல் முழுக்க உள்ள கோளாறுகள் நீங்கி முழுமை யான ஆரோக்கியம் கிடைக் கும்.

இனிவரும் இதழ்களில் யதார்த்த வாழ்க்கையில் ஒருவருக்கு ஏற்படும் சுகக் கேடும், அதற்குத் தேவைப் பட்ட ஆசன முறையும் (அதாவது மருந்து என்றும் கொள்ளலாம்) விளக்கப்பட விருக்கிறது.

'முறைப்படி ஆரம்ப நிலை ஆசனங்களிலிருந்து சொல்லப்படவில்லையே; ஒரு குருவைக் கொண்டு ஆரம்பிக்கப்படவில்லையே' என்று நினைக்கலாம். நாமெல்லோருமே தாயின் வயிற்றில் இருந்த பொழுது பல ஆசன முறைகளை மேற்கொண்டுதான் பூமியில் ஜனித்திருக்கிறோம். கருவி லேயே ஆரம்பிக்கப்பட்டதால், பகவானிடம் ஒரு நமஸ்காரத்தை செய்து விட்டு வேண்டிக் கொண்டு செய்யத் தொடங்கலாம். **கர்ப்பிணி களும், நோயாளிகளும் மருத்துவ ஆலோசனைப் பெற்று செய்யலாம்.**

அன்புத் தோழிகளே...
நீங்கள் வெகு நாளாக எதிர்பார்த்திருந்த யோகாசனத் தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மகிழ்ச்சிதானே? இத் தொடர் பற்றிய உங்கள் கருத்துக்களை வரவேற்கிறோம். உடனே எழுதுங்க!



• நிலை 3

கூர்மாஸனம்

செய்முறை விளக்கம் :

நிலை 1

ஸுகாஸனம் :

தரையில் சம்மணமிட்டு உட்காரவும்.

நிலை 2

சதுராஸனம் - இரு கால்களையும் பிரித்து முழங்கால்களிரண்டையும் வெளிப்புறமாக மடித்து உள்ளங்கால்கள் இரண்டும் சேர்ந்தாற்போல் வைக்கவும்.

இடுப்பிலிருந்து இடது முழங்கால், இடது முழங்காலிலிருந்து இடது உள்ளங்கால் - இடுப்பிலிருந்து வலது முழங்கால் வரை, வலது முழங்காலிலிருந்து வலது உள்ளங்கால் வரை பார்த்தால் சதுரமாகத் தெரியும்.

நிலை 3

இடதுகையை இடதுகாலின் கீழே, வலதுகையை வலதுகாலின் கீழே இருக்கும்படி படத்தில் காட்டியபடி வைக்கவும்.

நிலை 4

மெதுவாகக் குனிந்து தலையை உள்ளங்கால்களின் மேல் வைக்கவும்.

20 அல்லது 30 அல்லது அதற்கு மேற்பட்ட விநாடிகள் அதே நிலையில் இருக்கவும்.

எத்தனை விநாடிகள் முடியுமோ, சிரமமில்லாமல் எந்த அளவு வரை முடியுமோ அதுவரை செய்யவும். காலப்போக்கில் படிப்படியாக நிலை 4 சுலபமாகச் செய்ய இயலும். எந்த நிலையையும் ஒரே ஒருமுறை செய்து அடுத்த/கடைசி நிலைக்குச் செல்லவும். (5/10 முறைகள் அல்ல)

நிலை 5

தலையை மெதுவாக மேலே தூக்கவும்.

நிலை 6

இரண்டு கைகளையும் மேலே எடுக்கவும்.

நிலை 7

இரண்டு கால்களையும் பிரித்து உள்பக்கமாக மடிக்கவும்.

நிலை 8

ஸுகாஸனத்தில் நிலை 1 போல் வரவும்.



• நிலை 4

(ஆனந்தம் தொடரும்)

தொகுப்பு : **மாலதி சந்திரசேகரன்**

படத்தில் : **புஷ்ரா**

படம் : **ஸ்ரீஹரி**


Wyeth*
பகட்டான பட்டுப்போன்ற
மிருதுவான, வழவழப்பான சருமம்.
Anne French*
with moisturiser
India's no 1 Hair remover**
*Registered Trade Mark **Source: ACNielsen RSA MAT July 2006



இவை எல்லாமே ஆஹா 50 டிப்ஸ்!

காலை வேளையில் குழந்தைகள் குளிக்கப் போகும் பொழுது, இரண்டு பேராக இருந்தால் ஒன்றுக்கொன்று தண்ணீரை அடித்துக் கொள்ளும். தலைக்கு ஒரு பிளாஸ்டிக் குல்லாயைப் போட்டு விட்டால் தலை நனையாது. சளியும் பிடிக்காது.

- பி. கோமளா,
கல்பாக்கம்.

தோசை வார்க்கும் முன் ஒரு கரண்டி தேங்காய்ப் பால் கலந்து வார்த்தால், மிகவும் ஸாஃப்ட்டாக வரும்; குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

- ஆர். பார்வதி,
அம்பத்தூர்.

வாசகியரே உங்களுக்கு இரத்த சோகை உள்ளதா? கவலைப்படாமல், தேநீருக்குப் பதிலா எலுமிச்சை சாறு குடிங்க. இரத்தத்துல ஹீமோகுளோபின் அளவு அதிகமாகி இரத்த சோகை உங்களை விட்டுப் போயே போய்விடும்.

- சி. கஸ்தூரி,
தாரமங்கலம்.

உங்கள் வீட்டுத் தோட்டத்தில் உங்கள் தேவைக்கு அதிகமாக இருக்கும் மூலிகைச் செடி கன்றுகளை தயவுசெய்து தூக்கி எறிந்து விடாதீர்கள். அதன் அருமையை உணர்ந்த நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அளியுங்கள்.

- சியாமளா ராஜகோபால்,
சிட்லபாக்கம்.

மழைநீரைப் பிடித்து வடிகட்டி சாதம் செய்து பாருங்கள். சாதம் வெண்மையாகவும், சுவையாகவும் இருக்கும். அதே போல் மழைநீரில் பருப்பு வேகவைத்து சாம்பார் செய்து பாருங்கள். பருப்பும் சீக்கிரம் வேகும். சாம்பாரின் சுவையும் கூடும்.

- சு. கண்ணகி,
மிட்டூர்.

பஜ்ஜிக்கு காரம் அதிகம் விரும்பாதவர்கள் உப்பு + ஓமம் அரைத்து விட்டுச் செய்து பாருங்கள்! பிரமாதமாக இருக்கும்.


- ஆர். பிரகாசம்,
மருதாடு.


Angels®
Since 1991 Advanced Clinic (P) Ltd
Hair, Skin & Body Care
Dr. G. Radhika Reddy M.A., Ph.D.,
Doctor of Philosophy in Cosmetology
Good Bye to Bald Head within one hour thru
SILICON SYSTEM
WEIGHT REDUCTION thru
Cellulite Therapy & Body Former
சிலருக்கு வயிறு பகுதி சரியாக இருக்கும். ஆனால் காலின் தொடை பகுதி மிக பருமனாக இருக்கும். இவர்களுக்கு Figure Correction மூலம் அக்குறையை நிவர்த்தி செய்து விடலாம்.
UNWANTED & EXCESS HAIR REMOVAL
thru ND YAG Laser
ND YAG Long Pulsed லேசர் சிகிச்சை Advanced Technology மூலம் பெண்களுக்கு மேல் தாடை - கீழ் தாடை - அக்குள் - வயிறு - மார்பகம் போன்ற பகுதிகளிலும் தேவையற்ற ரோமங்களை குறைந்த சிட்டிங்கில் நிரந்தரமாக நீக்கி விடலாம்.
Colour Improvement -
Pigmentation thru
Imported Inhibitors
இச்சிகிச்சையின் மூலம் உங்கள் சருமத்தில் ஓவர் ஆக்டிவேட் ஆன மெலனின் பிக்மென்டுகளை கட்டுப்படுத்தலாம். இதன் மூலம் நிறத்தை மேம்படுத்தலாம்.
For Hair Fall,
Dandruff & Regrowth
Treatment thru'
Advanced Photo Laser
Therapy
BREAST DEVELOPMENT thru Muscle
Stimulation Therapy
உடலமைப்பிற்கு ஏற்றவாறு மார்பகம் வளர்ச்சி அடையாத பெண்களுக்கு அட்வான்ஸ்ட் மசில் ஸ்டிமுலேஷன் தெரபி என்ற சிகிச்சையின் மூலம் சீரான மார்பக வளர்ச்சி பெற முடியும். இது Non-Surgical சிகிச்சையாகும்.
Chennai: 28, 3rd Avenue, T-53/99, (Opp. 14 Shops) Rajeshwari Mansion, Anna Nagar, Chennai - 40. Cell: 98400 46599. Ph: 044-42176679 / 26212547 / 26213468
Coimbatore: RR Complex, V.O.C. Road, 117/B, West Sambandham Rd, R.S.Puram, Coimbatore. Ph: 0422 - 6547577, 2547889 Cell: 92444 15899
VIJAY TV
● Hyderabad - (040)23222111, 66368999 ● Bangalore - (080)41153995, 41153996, 09845566799
Website: www.angelsadvancedclinic.com

அடிச்சாங்க பரிசு!

'ஆஹா பரிசு' (அக்டோபர்) போட்டியில், ''இட்லித் தட்டு ஸ்டாண்டின் மேற்புறம் கனமான பெரிய வளையத்தைக் கைப்பிடியாக வைத்தால் பெண்களின் சிரமம் பெரிதும் குறையும். இட்லித் தட்டுகளைத் தயாரிப்பவர்கள் கவனிப்பார்களா?'' என்ற டிப்ஸை எழுதி பிரஷர் குக்கர் பரிசு பெறுகிறார் அஸ்வினி ஆனந்த் - அம்பத்தூர்.

அதே டிப்ஸை சிறந்ததாகத் தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் பிரஷர் குக்கர் பரிசு பெறுகிறார் பார்வதி கல்யாணராமன் - சிவகங்கை.



ஆஹா பரிசு!

இந்த இதழில் 'ஆஹா 50!' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச் சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து, எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் பிரஷர் குக்கர் பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல, அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் பிரஷர் குக்கர் பரிசு! 'நவம்பர் - ஆஹா பரிசு!' என்று மறக்காமல் குறிப்பிட்டு, பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசி தேதி : 15.11.2006

பெட்டிக்கதைப் போட்டி! வாசகர் விருப்பம்

பெட்டிக்கதைகளை எழுதிக் குவித்து வரும் வாசகர்களுக்கு நன்றி! இந்த இதழில் மூன்று கதைகள் பிரசுரமாகியுள்ளன.

தொடர்ந்து ஐந்து மாதங்களுக்கு மாதம் மூன்று பெட்டிக் கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரமாகும். பிரசுரமாகும் கதைகள் தலா ரூ. 150/- பரிசு பெறும்.

சிம்பிள் கண்டிஷன்ஸ் : 100 வார்த்தைகளுக்கு மிகாமல், சொந்த கற்பனையில், பெயர், முழு விலாசம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களுடன் *இன்லாண்ட் லெட்டரில்* மட்டுமே எழுதி 'பெட்டிக்கதைப் போட்டி' என்ற குறிப்புடன் அனுப்ப வேண்டும்.

- எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

நம்பிக்கையான வங்கி தரும் நல்லதொரு வட்டி விகிதம்

நாட்கள் வரையறை இல்லை

வருடம் முழுவதும்,
எல்லா டெபாசிட் திட்டங்களிலும்
பெறலாம்

9% வரை வருட வட்டி

உள்நாட்டு டெபாசிட் வட்டி விகிதம் (Rate % p.a.)			
காலம்	ரூ. 25 லட்சத்திற்கு கீழ் உள்ள டெபாசிட்களுக்கு	ரூ. 25 லட்சமும் அதற்கு மேல் உள்ள டெபாசிட்களுக்கு	மூத்த குடிமக்களுக்கு
1 வருடம் முதல் 3 வருடங்களுக்கு குறைவாக	8.25 %	8.25 %	8.75 %
3 வருடங்கள் முதல் 5 வருடங்களுக்கு குறைவாக	8.50 %	8.75 %	9.00 %
5 வருடங்களும் அதற்கு மேலும்	8.00 %	8.25 %	8.50 %

TMB-ன் சாதனை புள்ளி விபரங்கள்

நிகர லாபம்
ரூ. 101.19 கோடி

மூலதனத் தன்னிறைவு விகிதம்
18.33%

பெறுமதி
ரூ. 656.79 கோடி

வருமானத்திற்கும் பெறுமதிக்கும் உள்ள விகிதம்
16.65%

வருமானத்திற்கும் சொத்து மதிப்பிற்கும் உள்ள விகிதம்
1.67%

வட்டி அல்லாத செலவினங்களுக்கும் நிகர மொத்தவருமானத்திற்கும் உள்ள விகிதம்
39.5%

*நிபந்தனைக்கு உட்பட்டது

வருமான வரிச்சலுகைக்கான
திட்டங்களில் சேருங்கள்!
வட்டி 9% வரை!!

மேலும் விபரங்களுக்கு அருகில் உள்ள நமது கிளையை அணுகவும்

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.

Customer Oriented & Committed to Excellence

ESTD. 1921

பதிவு அலுவலகம் : 57, வி.இ. ரோடு, தூத்துக்குடி-628 002 இணையதளம் www.tmb.in

Anywhere Banking • Demat Services • Mutual Funds • Free ATM Card • 100% RTGS enabled branches

அம்மா...! அம்மா...! அம்மா...!



பல நூறு கவிதைகள் எழுதி
பத்திரிகைகளுக்கு
அனுப்பியிருக்கிறேன்
எல்லாம்
கிணற்றில் போட்ட கல்தான்

ஒருநாள்...
அழைப்புமணி ஒலிக்க
அழும் குழந்தையோடு
அவசரமாசீ ஓடினேன் வாசலுக்கு...
அஞ்சல்காரர்
புத்தகமொன்றை
போட்டுவிட்டுப் போனார்.

அதில்
அச்சில் என் கவிதை!
அழகிய வண்ணத்தில் என் பெயர்!

பெயரைத் தடவிப் பார்த்தேன் - பின்
எழுத்துக் கூட்டி உரக்கப்
படித்தேன்.
இனிப்பாய் இருந்தது மனது!

ஆனந்தக் கூத்தாடும் என்னை
அழுவதை நிறுத்திவிட்டு
ஆச்சரியமாய்ப் பார்த்த குழந்தை
"ம்மா!" என்றது முதல் முறையாக!

அந்த நிமிடமே - என்
கவிதை மகிழ்ச்சி
கடுகளவாய்ப் போனது!

காதம்பரி

Preethi

Blue Leaf

750 Watts

Super Extractor

Grind n'Store

தீபாவளி எக்ஸ்சேஞ்ச் சலுகை

ரூ.600/-*
சேமிப்பீர்



Blue Leaf Platinum

*நிபந்தனைகளுக்குட்பட்டது

கண்ணைக் கவரும் அழகு! மனதைக் கவரும் திறன்!

மாயா அப்ளையன்ஸஸ் (பி) லிட்.

சென்னை ☎24363366 (தி.நகர்), ☎65916104 (நங்கநல்லூர்). வேலூர் ☎2215916.
திருச்சி ☎2751288. மாயவரம் ☎241202. சேலம் ☎2250578. ஈரோடு ☎2221200.
திருப்பூர் ☎2240714. கோயம்புத்தூர் ☎2232687. உடுமலை ☎225388.
ஞ்சாவூர் ☎273565. மதுரை ☎2621376. தேனி ☎320603. திருநெல்வேலி ☎2501824.
விழுப்புரம் ☎251004. பாண்டி ☎2346383.

உபயோகிக்க இயலாத சி.டி.க்களைச் சேகரித்தால், அதில் அழகான பூக்கள், டேபிள் கவர், வால்ஹேங்கர், வாழ்த்து அட்டை போன்ற பலவற்றைச் செய்யலாம். இங்கே சி.டி. பூக்களைச் செய்யலாமா?





செய்முறை :

சி.டிக்களைச் சேகரிக்கவும். ஒரு வெள்ளைக் காகிதத்தில் சி.டி.யை வைத்து வட்டமாக வரைந்து வெட்டவும்.

இப்படி வெட்டிய பேப்பரில்



தேவையான பொருள்கள் :

* தேவையான எண்ணிக்கையில் சி.டி.க்கள்
* கனமான பெரிய கத்திரிக்கோல்

சிரிக்கும் சி. டி. பூக்கள்!

* பர்மனென்ட் மார்க்கர் - பல வண்ணங்களில்
* கிளாஸ் பெயின்ட்டிங் செய்ய உபயோகிக்கும் பெயின்ட் பல வண்ணங்களில்
* வெள்ளைக் காகிதம், பேனா

தேவைப்பட்ட வடிவத்தில் பூ இதழ்களை வரைந்து வெட்டவும். பூ இதழ் வெளி வட்டத்திலிருந்து உள்ளே உள்ள பளபளப்பான வட்டத்தைத் தொடுவது போல் இருக்க வேண்டும்.

படம் 3-ல் காட்டியபடி பேப்பரில்

சி.டி. அளவுக்கு வெட்டி இதழ்கள் வரைந்து வெட்டவும். வெட்டிய பேப்பர் பூவை சி.டியின் மேல் வைத்து பர்மனென்ட் மார்க்கரால் வரையவும்.





சி.டியில் விரிசல் விழுந்து உடைந்து விடும்.

வெட்டிய சி.டி. பூவின் பளபளப்



பிறகு கனமான கத்திரிக்கோல் கொண்டு சி.டியைக் கவனமாக வெட்டவும். வெளியிலிருந்து உள் வட்டத்தின் பளபளப்பான பகுதி வரை வெட்டவும். அவசரப்பட்டால்

பஞ்சாமிர்தம்!



பெரிய்ய பாட்டி - குட்டியம்மாள்; பாட்டியின் மகள் - பாப்பம்மாள்
மகளின் மகள் - திருமதி உஷாமந்திரம்
அவர் மகள் - திருமதி உமா சத்யநாராயணன்
குட்டிப் பெண் - ஹரிணி சத்யநாராயணன், சென்னை - 35.

பான பகுதியில் பர்மனெண்ட் மார்க்கர் மூலம் விதவிதமான ஷேட் கொடுத்து சிறிது நேரம் காயவிட வேண்டும். கிளாஸ் பெயின்ட் உபயோகித்தும் பூக்களுக்கு வண்ணம் கொடுக்கலாம்.

பளபளவென கண்ணாடி போல மின்னும் இப் பூக்களை உபயோகிப்பது இனி உங்கள் கற்பனைத்திறன்.

பிறந்த நாள் போன்ற விசேஷங்களுக்கு சுவரில் அல்லது இரண்டு பக்கங்களிலும் ஒட்டும் டேப்கள் மூலம் சுவரில் ஆங்காங்கே ஒட்டினால் மின்விளக்கின் வெளிச்சம் பட்டு பல வண்ணப் பூக்கள் மின்னும். வெட்டிய துகள்களில் இலை, காம்பு செய்து பச்சை நிறம் கொடுத்து ஒவ்வொரு பூவின் கீழும் ஒட்டினால் மேலும் எடுப்பாக இருக்கும்.

கிளைகள் உள்ள சிறு முள்குச்சிகளில் தேவைப்பட்டால் வெள்ளி அல்லது தங்க நிற வர்ணம் பூசி, இப் பூக்களை மாட்டி பூந்தொட்டிகளில் வைக்கலாம். காற்றடிக்கும் போது 'பளபள' என அசைந்தாடும் இப் பூக்கள் நம்மைப் பார்த்துச் சிரிக்கும்.

எஞ்சிய துண்டுகளின் வடிவத்துக்கு ஏற்ப டைமண்ட் (அ) செவ்வக வடிவத்துக்கு வெட்டிக் கண்ணாடித் துண்டுகள் தைத்துச் செய்யும் எந்த வேலைப்பாட்டையும் செய்யலாம். ஃபெவிகாலால் துணியில் ஒட்ட இயலும் கிரீட்டிங் கார்டுகளும் செய்யலாம்.

ஆர்வமும், கற்பனைத் திறனும் இருந்தால் குப்பையும் குறிப்பிடும் பொருளாக மாறிவிடும்.

- மங்களா ராஜசுந்தரம்,
சிடெல்ஸ்

வீட்டிலேயே

அழகுக்கலை நிபுணர் **வசந்தரா**

"சிறு சிறு குறைகளை எப்படி மறைத்து மேக்கப் செய்யலாம் என்பது உட்பட எல்லாவற்றையும் பற்றி கம்ப்யூட்டர் மேக்கப்பில் தெரிந்து கொள்ளலாம்."



கிளென்சிங், மாயிச்சரைசிங், டோனிங் மூன்றும் தினசரி செய்ய வேண்டிய அடிப்படை அழகு சிகிச்சைகள் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். இதையெல்லாம் பணம் கொடுத்து செய்ய முடியாதவர்கள், வீட்டிலேயே எளிய முறையில் செய்து கொள்ள ஏதேனும் வழி உண்டா?

- கீதா ரமேஷ், வண்டலூரர்.

தாராளமாகச் செய்து கொள்ளலாம். வெள்ளரிக்காயைத் துருவி சாறு எடுத்துக் கொள்ளவும். அத்துடன் 3 டேபிள் ஸ்பூன் தயிரை நன்கு அடித் துக் கலந்து, முகம் முழுக்கத் தடவி 10 நிமிடங்கள் அப்படியே ஊறவும். பிறகு குளிர்ந்த தண்ணீரில் கழுவி விடவும். இதனால் சருமத்தில் ஆழத்தில் படிந்த அழுக்குகள், பழைய தழும்புகள் மறையும்.

அடுத்து ஸ்கரப்பிங். அதாவது சருமத்தின் இறந்த செல்களை அகற்ற இது. மிக முக்கியம். பட்டாணியைக் காயவைத்து அரைத்த பொடி 2 டீஸ்பூனுடன், அரிசி மாவு 2 டீஸ்பூன், ஓட்ஸ் 2 டீஸ்பூன், குளிர்ந்த பால் 6 டேபிள் ஸ்பூன் எல்லாம் கலந்து முகத்தில் தடவி அரை மணி நேரம் முதல் 1 மணி நேரம் ஊறவும். காய்ந்ததும் கைகளை நனைத்துக் கொண்டு வட்ட வடிவில் தேய்த்து அதை அகற்றி விட்டு, வெதுவெதுப்பான தண்ணீரில் முகம் கழுவலாம்.

அடுத்ததாக டோனிங். 2 டேபிள் ஸ்பூன் பன்னீருடன், ஒரே ஒரு ஐஸ் கட்டியைச் சேர்த்து உருக விடவும். அதை ஒரு துணியில் தொட்டு, முகம் முழுக்க ஒற்றியெடுக்கவும். அந்தக்

கலவை முழுக்கத் தீரும் வரை இப்படியே ஒற்றியெடுக்கவும். அதைத் துடைக்காமல் அப்படியே விட்டு விடலாம்.

கடைசியாக மாயிச்சரைசிங். பத்து பாதாம் பருப்பை முதல் நாள் இரவே ஊறவைக்கவும். மறுநாள் அதைத் தோல் நீக்கி அரைத்து, கால் கப் பாலில்

களையும், பாக்டீரியாவையும் அகற்றக் கூடியது. இது ஃபுல்லர்ஸ் எர்த் ஃப்ரெஞ்ச் கிளே, கயோலின் பவுடர், பென்டோனைட், டெட் ஸீ கிளே எனப் பலவிதங்களில் கிடைக்கிறது. ஒவ்வொன்றிலும் ஏராளமான தாதுப் பொருள்கள் உள்ளன. வறண்ட சருமம் உள்ளவர்கள் இதை வாரம் 2 முறை களும், எண்ணெய்ப் பசை சருமம் உள்ளவர்கள் 2 நாட்களுக்கொருமுறை

அழகு செய்து கொள்ளலாமா?



கலந்து நெற்றி, கழுத்து, முகம் என எல்லா இடங்களிலும் தடவிக் கழுவவும். இந்த ஒட்டுமொத்த சிகிச்சையையும் வாரத்தில் 2 நாட்கள் செய்யலாம். சருமம் ஆரோக்கியமாக, அழகாக இருப்பதைக் கண்கூடாகப் பார்ப்பீர்கள்.

நிறைய அழகுக் குறிப்புகளில் 'கிளே' உபயோகிக்கச் சொல்வதைப் பார்த்திருக்கிறேன். 'கிளே' என்பது களிமண் தானே? அது அழகுப் பொருளா? விளக்கவும்.

- ப்ரியா, ஸ்ரீரங்கம்.

ஆமாம். நீங்கள் நினைத்தது சரிதான். கிளே என்பது களிமண் தான். ஆனால் அழகுக் குறிப்புகளில் நீங்கள் படித்தது சுத்திகரிக்கப்பட்ட களிமண். அது சுலபமாகக் கிடைக்கும். சருமத்தின் ஆழமான அழுக்கு



கிச்சனில் உள்ள டியூப் லைட் எண்ணெய்ப்பிசுக்குடன் உள்ளதா? சிறிய துணியில் மண்ணெண்ணெய் நனைத்து பல்ப் மீது மெதுவாகத் துடைக்கவும். பின் நல்ல துணியால் துடைக்கவும். பிசுக்குப் போய்விடும்!

- சி. ஷீலாராணி, திருவள்ளூர்.

யும் இதை உபயோகிக்கலாம்.

முல்தானி மிட்டி (இதுவும் ஒருவித கிளேதான்) - 4 டீஸ்பூன், பன்னீர் - 4 டீஸ்பூன், வைட்டமின் ஈ எண்ணெய் - 5 துளிகள், தேன் - 5 துளிகள், கேரட் சாறு - 2 டீஸ்பூன் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து முகத்தில் தடவவும். 15 நிமிடங்கள் கழித்து சாதாரணத் தண்ணீரில் கழுவிடவும். சருமம் புத்துணர்வு பெறும். தொய்வு நீங்கி டைட்டாகும்.

எனக்கு எந்தவிதமான ஹேர்ஸ்டைலும் பொருத்தமாக இல்லாத மாதிரி உணர்கிறேன். மேக்கப்பும் சரியாக இல்லாதபடி தோன்றுகிறது. என்ன செய்வது?

- வள்ளி சுப்ரமணியம், சங்கரன்கோவில்.

கவலையே வேண்டாம். கம்ப்யூட்டர் முறையில் உங்களுக்குப் பொருத்தமான ஹேர்ஸ்டைலை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். உங்கள் முகத்தை கம்ப்யூட்டரில் பதிவுசெய்து, உங்கள் முக அமைப்புக்கேற்ப எந்த ஹேர்ஸ்டைல் பொருத்தமாக இருக்கும் எனக் காட்டும். நெற்றி அகலமாக இருந்தால் அதற்கு எந்த ஸ்டைல் பொருந்தும், ஓவல் வடிவ முகத்துக்கு எது அம்சமாக இருக்கும் என்கிற மாதிரி ஒவ்வொரு அமைப்புக்கும் மிகச் சரியான ஸ்டைலை கம்ப்யூட்டரே தேர்வு செய்து காட்டும்.

அதுமட்டுமின்றி, மேக்கப் பற்றியும் இதில் தெரிந்து கொள்ளலாம். கண்களின் அமைப்புக்கேற்ற ஐ மேக்கப், உதடுகளின் வடிவங்களுக்கேற்ற லிப் மேக்கப், முகத்திலுள்ள சிறு சிறு குறைகளை எப்படி மறைத்து மேக்கப் செய்யலாம் என்பது உட்பட எல்லாவற்றையும் பற்றி கம்ப்யூட்டர் மேக்கப்பில் தெரிந்து கொள்ளலாம். எனவே கவலையைத் தவிர்த்து, கம்ப்யூட்டரைஸ்ட் ஹேர் ஸ்டைல் மற்றும் மேக்கப் வசதியுள்ள பியூட்டி பார்லரை அணுகி, ஆலோசனை பெறுங்கள்.



மூக்கில் ஜலம் வடிகிறதா? சனி தொல்லை ஆரம்பமாகி விட்டது. கொதிக்கும் நீரில் ஒரு ஸ்பூன் காப்பிப் பொடி போட்டு ஆவி பிடிக்கவும். ஒரு நாளைக்கு 4 முறை; 'பட்' என விட்டு விடும் ஜலதோஷம்!

- சியாமளா சீதாராமன், சென்னை.



தவமாய்த் தவமிருந்து -3

மொடக்குறிச்சி மாமியார்

சென்ற இதழில் என் மாமியார் பாவாத்தாளைப் பற்றிச் சொல்லிக்கிட்டிருந்தேன் இல்லையா?

பாராமுகமாக இருந்த அவங்களை, 'மருமவளே'ன்னு பாசமா கூப்பிட வெச்சது எதுன்னு கேட்டு சஸ்பென்ஸா நிறுத்தியிருந்தேன்.

1995ம் வருஷம் டிசம்பர் மாதம் ஒண்ணாந்தேதி எங்க கல்யாணம் நடந்துச்சு. மூணாம் தேதி என்னை, அவங்க ஊருக்குக் கூட்டிக்கிட்டுப் போனாரு என் கணவர் பொன் வண்ணன்.

* படம் : ஓம்



ஈரோடு பக்கத்துல, மொடக்குறிச்சினு ஒரு சின்னக் கிராமம். விவசாயம்தான் முக்கிய தொழில். பெரும்பான்மை ஓட்டு வீடுகள்தாம். எங்களோட காரு, ஊருக்குள்ளே நுழைஞ்சதும், புழுதி பறக்க அந்த மண்ரோடுல, ஊர் பிள்ளைங்கள்ளாம், 'ஓ'ன்னு கத்திக்கிட்டே கூடவே ஓடி வந்தாங்க.

உங்களுக்கே தெரியும்... நம்ம ஊர் கிராமங்கள்ல, புதுசா யாராவது வந்தாலே, கூடி நின்னு வேடிக்கை பார்ப்பாங்க... போறது ஒரு புதுப் பொண்ணு. அதிலும் சினிமா நடிகை... கூட்டத்துக்குக் கேட்கணுமா? தெருவே கூடி நின்னு பார்க்கறாங்க.

எனக்கு வீட்டுல கூட செருப்புப் போட்டு நடந்துதான் பழக்கம். ஆனா அங்கே வாசல்லியே செருப்பைக் கழற்றி விட வேண்டியதா போச்சு. பக்கா கிராமத்து வீடாச்சே! நெல்லும் மண்ணும் 'நறநற'ன்னு கால்லே குத்துது. நான் நடந்த ஸ்டைலைப் பார்த்து, "பொண்ணுக்குக் கால் சரியில்லையோ?''ன்னு கூட ஊர் ஜனங்க சந்தேகப்பட்டிருப்பாங்க. அந்த அளவுக்கு, காலைத் தரையிலேயே ஊனமுடியலை.

என் மாமியார் பம்பரமாகச் சுழன்று, எல்லாரையும் ஏவி ஏதோ வேலை வாங்கிக் கொண்டு இருந்தாரே தவிர, என்னிடம் முகம் கொடுத்து சரியாகப் பேசவில்லை. என்

கணவர் வேறு. அவ்வப்போது என்னை ஜாடையாகப் பார்த்து, "ஆர் யூ கம்ஃபர்டபிள்!" என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அந்த மாதிரி சூழல்ல, நான் ஒரு வேத்து மனுஷி மாதிரியே ஃபீல் பண்ணக் கூடாதுன்னு ரொம்பவே முயற்சி செஞ்சேன்.

"இனிமே இதுதான் என்னோட வாழ்க்கை... இவங்கதான் என்னோட உறவுக்காரங்க. நம்மளோட வாழ்க்கையில முக்கியமான கட்டத்துல இருக்கோம். நம்பளோட முழு அன்பையும் எப்படியெல்லாம் காட்ட முடியுமோ அப்படியெல்லாம் காட்டி, ஜெயிச்சே ஆகணும்"னு ரொம்பவே உறுதியா இருந்தேன். அதைச் செயல்படுத்தவும் செய்தேன்.

எப்படியோ விருந்தும் வினயமுமாக புகுந்த வீட்டில் மூன்று நாட்கள் ஓடியே விட்டன. ஊருக்குக் கிளம்பும் நாள் வந்தது. என் மனசுக்குள் இலேசாக வேதனை மூட்டம்.

"மொடக்குறிச்சிக்கு நான் வந்த காரணம் என்ன? மாமியாரைப் புரிந்து கொண்டு இன்னும் நெருக்கமாவதுதானே? ஆனால் அதற்கு வாய்ப்பே வரலையே!" என்று தவித்துக் கொண்டிருந்தேன். இவரிடமும் மனம்



• படம் : ஸ்ரீஹரி

சரண்யா பொன்வண்ணன்

விட்டுப் பேச முடியவில்லை. ஏதோ ஒரு சங்கடத்தில் நான் ஆழ்ந்திருந்த போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

புடைவை கட்டிக் கொள்வதற்காக, எங்களுடைய அறைக்கு வந்த நான், கதவை இறுக்கி மூடி, தாழ்ப்பாள் போட முயன்றேன். பழைய வீடு. பெரிய கதவு; தாழ்ப்பாளும் ரொம்பவே கனமாக இருந்தது. பலத்தையெல்லாம் சேர்த்து, இழுத்து தாழ்ப்பாள் போட்ட போது, அது சற்று வேகமாக நகர்ந்து, என் வலது கை விரலைப் பதம் பார்த்து விட்டது. சதை அப்படியே பிய்ந்து விட, ரத்தம் 'குபுகுபு' என்று வெளியேறியது.

தாங்க முடியாத வலியில், நான் 'ஆ' என்று அலறி விட்டேன் போலும். அடுத்த விநாடியே, என் மாமனாரும், மாமியாரும் ஓடோடி வந்து விட்டனர்.

"அய்யய்யோ... தாயி! கையில ரத்தமா ஊத்துதே! இந்தப் பாழாய்ப் போன தாழ்ப்பாளை சரி பண்ணுங்கன்னு எத்தனை தடவை தலைப்பாடா அடிச்சுக்கிட்டேன் கேட்டீங்களா? இப்பப் பாருங்க... புள்ளையோட விரலைச் சிவிடுச்சே!" என்று குரல்கொடுத்து, என் தோளைப் பிடித்து, உட்கார வைத்து, விரலில் ரத்தம் கசியாமல் இறுக்கிப் பிடித்துக் கொண்டு, "மஞ்சள் தூளைக் கொண்டாடா! துணியைக் கிழிச்சு... தண்ணியில முக்கிக் கொண்டா" என்று ஏதோ தனக்கே அடிபட்டு விட்டது போல துடித்துப் போனது யார் தெரியுமா? என் மாமியாரேதான்!


"சின்னக் காயம்தான்; சரியாய்ப் போயிடும்மா... நீ எந்திரி, நான் பார்த்துக்கறேன்!" என்று என் கணவர் ஆறுதல் சொன்னாலும், அவர் கேட்கவேயில்லை.

அதற்குள் பேண்டேஜ், பர்னால் என தனக்குத் தெரிந்த மருந்துகளை வாங்கிக் கொண்டு வந்தார் என் மாமனார்.

"ரத்தம் நின்னுடுச்சா பாரு... துணியை ரொம்ப இறுக்கக் கட்டாதே!" என்று அவருக்குப் ஏகப்பட்ட டென்ஷன்!

அந்த அன்புச் சூறாவளியில் நான் சிக்கிக் கொண்டதில், கைவலியையே மறந்து விட்டிருந்தேன்.

எனக்கு ஏதாவது ஒன்று என்றால்,



மழைக்காலத்தில், காலணிகள் நனைந்து சீக்கிரமாக வீணாகி விடும். ஷூஸ்களுக்கு உள்ளே பழைய நியூஸ் பேப்பர்களை அடைத்து வைத்தால், பேப்பர் நீரை உறிஞ்சிவிட, காலணிகள் நாள்பட இருக்கும்.

- விஜயா, கே, சென்னை - 78.

என் தாய் சரோஜினி தான் துடிதுடித்துப் போவார். அந்த அன்புக்குச் சற்றும் குறையாமல் இருந்தது என் மாமனார், மாமியார் காட்டிய அக்கறை! அடடா... வெளியே பாறைகளாகத் தோற்றம் தரும் இவர்களது உள்ளங்களில்தான் எத்தனை ஈரம்!

அதை நினைத்து, நான் உள்ளம் கசிந்து அழ, அவர்கள் நான் வலியில் அழுவதாக நினைத்துக் கொண்டு ரொம்பவே கவலைப்பட்டார்கள்.

பூச்சற்ற, பாசாங்கற்ற அந்த எளிய அன்புள்ளங்களை நான் மிகவும் நெருங்கி விட்டேன். மலை போல மண்டிக் கிடக்கும் அன்பை வெளிச்சம் போட்டுக் காட்டத் தெரியாத அந்தக் கிராமத்துத் தாயின், உண்மையான நிறம் புரிந்து போனதில் அப்படியே நெகிழ்ந்து விட்டேன்.

ஏதோ கொஞ்சம் நஞ்சம் இருந்த, இடைவெளியும் விலகிப் போனதில், நான் அவர்களை என்னுடைய பெற்றோர்களாகவே மதிக்கத் தொடங்கியதும் அந்தச் சமயத்தில்தான்!



மாமனார் பொன்னுசாமி, மாமியார் பாவாத்தாளுடன்...

இன்னொரு சமயம், கிராமத்தில் குலதெய்வப் பூஜைக்கு ஏற்பாடு செய்து எங்களை அழைத்திருந்தனர். நான் சமையல் நடக்கும் இடத்துக்கு தூர இருந்தவாறே... "நான் போய்ச் செய்யலாமா.. இல்லை அவங்கதான் செய்யணுமா...?" என்ற குழப்பத்தில் இருந்தபடியே கவனித்துக் கொண்டிருந்தேன்.

"ஐம்பது பேருக்குக் காய் நறுக்கறதுக்கு நமக்கு எவ்ளோ நேரமாகுது... அங்க, என் மருமக, ஒரு கிலோ வெங்காயத்தை, கத்தியிலே நிமிஷமா நறுக்கிட்டா!" என்று பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தார்.

"ஹைய்யா... நம்மளைப் பத்தி நல்ல அபிப்ராயம்தான் வெச்சுருக்காங்க"ன்னு என் மனசு, மறுபடி குழந்தை போல சந்தோஷப்பட்டுக் கொண்டது.

அப்புறம், என் மாமியார், 'மொளகரைச்ச குழம்பு!'னு ஒரு குழம்பு செய்வாங்க. அது அந்த ஊர் ஸ்பெஷல்!



ஆறு வயதிலே...
ஆசிரியர் ஆக நினைத்தேன்!
பத்து வயதிலே...
பொறியாளர் ஆக நினைத்தேன்!
பதினாறு வயதிலே...
மருத்துவர் ஆக நினைத்தேன்!
ஆனால்...
இன்று...
இப்படியாகி விட்டேன்?
இதோ - பாரும்.

நினைத்ததும் நடந்ததும்!

என் வீட்டின் குழந்தைகளுக்கு - நல்ல
ஆசிரியர் ஆகிவிட்டேன்!
என் வீட்டிலுள்ள பழுதடைந்த
பொருள்களுக்கு,
பொறியாளர் ஆகிவிட்டேன்!
என் வீட்டிலுள்ள நோய்வாய்ப்பட்டவர்களுக்கு,
மருத்துவர் ஆகிவிட்டேன்!
மொத்தத்தில்...
இனிய இல்லத்தரசி ஆகிவிட்டேன்!

- தாரா மணிவண்ணன், கோவை.

அதை எப்படிச் செய்யறதுன்னு அவங்ககிட்டே கத்துக்கிட்டேன். என் கணவருக்கு, ஊர் ஞாபகம் வந்துடுச்சுன்னா, அந்தக் குழம்பை செய்யச் சொல்வார். அதனால அந்தக் குழம்புக்குப் பேரே 'ஊர் குழம்பு'.

சாயங்காலமே இவர் ஃபோன் செஞ்சு "அம்மா, இன்னிக்கு நம்ப வீட்டுல மொளகரைச்ச குழம்பு! உன்னோட ஸ்பெஷல்"னு சொல்வார். அப்பப் பார்க்கணுமே... எங்க மாமியாரோட சந்தோஷத்தை!

இன்றைக்கும், எங்க இரண்டு பேருக்கும் படப்பிடிப்பு இருந்தால், ஒரு ஃபோன் செய்தால் போதும்.. போட்டதைப் போட்டபடி, அப்படியே புறப்பட்டு வந்து எங்க வீட்டுல ஒரு ஆளா இருந்து வீட்டுப் பொறுப்பைக் கவனிச்சுக்க ஆரம்பிச்சுடுவாங்க!

எனவே என் அருமை சகோதரிகளுக்கு நான் சொல்றது என்னன்னா... மாமியார் Vs மருமகள் உறவில், ஏதாவது ஒரு விஷயத்தில் விட்டுக் கொடுத்துப் போகும் அவசியம் ஏற்பட்டால், இளையதலைமுறைதான் விட்டுத் தரணும். ஏன்னா... வளையக்கூடிய வயசும் அதுதான்! படிப்பு, அறிவு, வயசு, உடல் நிலை, பொருளாதாரம்... எக்ஸ்போஷர், என எல்லா நிலையிலும் மாமியாரை விட பக்குவப்பட்ட, உயர்ந்த நிலையில் இருப்பது மருமகள்கள். அவங்க மனசு வெச்சாதான் இல்லங்கள் கோயில்கள் ஆகும்! இல்லையென்றால் அவை வெறும் கான்க்ரீட் வீடுகள்தான்!

(தொடரும்)

சொல்ல விரும்புகிறோம்!

❉ பிருந்தா ஜெயராமனின் தொடர் அம்மாக்களுக்கு திகட்டாத புத்திமதி.

திருவரங்கம்,
சுலோசனா சம்பத்.

❉ நவராத்திரி டிப்ஸ் எழுதி பிரசுரமாகாத வாசகிகளில் ஒருவர் கேட்ட கேள்விக்கு அவரைப் போன்றவர்களின் பெயரையும் குறிப்பிட்டு நீண்டதொரு விளக்கம் கொடுத்து வாசகிகள்பால் தாங்கள் கொண்டுள்ள பாசத்தை வெளிப்படுத்தி விட்டீர்கள். இப்படி ஒரு விளக்கம் கொடுத்தது பத்திரிகை உலகில் இதுதான் முதல் முறை என்று எண்ணுகிறேன்.

அம்மையப்பன், சாந்தி.

❉ "உங்களுக்குள் ஆயிரம் பிரச்னைகள் வந்தாலும் மூன்றாவது ஆளுக்கு இடம் கொடுக்காதீங்க!" என்று சைதை துரைசாமி தம்பதியருக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கூறிய அறிவுரையை ஒவ்வொரு தம்பதியரும் பின்பற்ற வேண்டும்.

திருக்கோவிலூர், ரா. திருபுரசுந்தரி.

❉ பத்து கட்டளைகளைப் போல் பத்து வாக்கியங்களுக்குள் தீபாவளிப் பண்டிகையை அடக்கிட்டீங்களே; அதற்குதாங்க மலர் வந்ததும் ஒரு வார்த்தையைத் தேடுகிறோம். நாடுகிறோம்!

நெய்வேலி, எஸ். இந்துமதி.

❉ 'அதுதாங்க தீபாவளி' அத்தனையும் முத்துக் குறிப்புகள். 'சாலமன் பாப்பையா தீர்ப்பு சொல்லும் சமயமாகப் பார்த்து பவர் கட் ஆகாத அற்புத நாள்' சூப்பர் குறிப்பு!

சென்னை - 59, சுகந்தா ராம்.

❉ பண்டிகை டென்ஷன் குறையச் சொல்லப்பட்ட யோசனைகளில் டி.வி.யின் கேபிள் இணைப்பை எடுத்து விடச் சொன்ன ஐடியா லட்சம் பெறும்!

கோடம்பாக்கம், எம். சேக் அப்துல்லா.

❉ 'காயாத தாம்பூலம்' தலைப்பின் கவர்ச்சி உடனே அதைப் படிக்க வைத்தது.

மடிப்பாக்கம், அய்யாறு வாசுதேவன்.

❉ 'தேடி வந்த திருமகள்' கதையைப் படித்ததும் நெகிழ்ந்தேன். வாழ்வின் யதார்த்தத்தை தாங்க முடியாமல்!

சென்னை, சியாமளா ராஜகோபால்.

❉ 'தேடி வந்த திருமகள்' சிறு கதையைப் படித்ததும் மனம் கனத்தது. கதாநாயகியின் செயலை இப்படியும் நியாயப்படுத்த வேண்டிய கட்டாயம் என்ன?

சென்னை - 4,
வி. ஜானகி.

நீங்கதான் நம்பர் 1!



❉ ஏன்? ஏன்? என அடுக்கடுக்காய் பாலா விஸ்வநாதன் எழுப்பிய கேள்விகள் அனைத்துமே யதார்த்தம். அதே போல், எவ்வளவு ஹைடெக் கிச்சனாக இருந்தாலும் கேனில் 5 லிட்டர் மண்ணெண்ணெய் இருப்பது ஏன்?

ஸ்ரீரங்கம், எஸ். கௌரிலக்ஷ்மி.

❉ 'ஒரு கன்னித்தாயின் கனவுகள்' மனித நேயத்துக்கே மகுடம் சூட்டியது.

சீர்காழி, ஆர். கவிதா.

❉ '64 ஸ்வீட்ஸ்' எங்களை இனிப்புக் கடலில் மூழ்கடித்தது.

திருவொற்றியூர்,
தாராபாய் இராமசாமி.



" தாய்மார்களே, உங்கள் குழந்தைகளின்
ஆங்கில அறிவுத்திறனை
வளர்க்க ஓர் அரிய வாய்ப்பு "

ALOHA

English
Smart
For age 6 - 14

ALOHA Spelling BEE CONTEST 2006

இன்றைய கால கட்டத்தில் ஆங்கில அறிவு என்பது வெற்றியின் ஒரு படிக்கல்லாக இருக்கிறது. முறையான ஆங்கில அறிவு என்பது சிறு வயதிலேயே தொடங்கபட வேண்டிய ஒன்றாகும், இதை ஊக்குவிக்கும் முயற்சியில் அலோஹா இந்தியா கல்வி நிறுவனம் *(ISO 9001-2000)* குழந்தைகளுக்காக ஓர் ஆங்கில அறிவு திறன் போட்டியை நடத்த இருக்கிறது. இதன் முதல் படியாக சென்னையில் ஆங்கிலத்தில் "spelling" மற்றும் "pronunciation" *(உச்சரிப்பு)* போட்டியை நடத்த முடிவு செய்துள்ளது.
இப்போட்டியின் லட்சியம் ஆங்கில அறிவை மேம்படுத்துவது மட்டுமே. மனப்பாட முறையை விட இம்மாதிரி முறைகளின் மூலம் குழந்தைகளின் திறனை மேலும் மேம்படுத்த முடியும் என்பது எங்களின் நம்பிக்கை

சிறப்பம்சம்

- ஆங்கில வார்த்தைகளின் முறையான உபயோகத்தை மேம்படுத்தலாம்.
- புதிய ஆங்கில வார்த்தைகளை அறிய சிறந்த வாய்ப்பாகும்.
- ஆங்கிலத்தில் சரளமாக உரையாட உதவும்.
- ஆங்கிலத்தில் குழந்தைகளின் முழுத்திறமையும் தெளிவான உச்சரிப்பையும் வெளிக்கொண்டுவர உதவும்

இந்த அறியதொரு வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் குழந்தைகளின் ஆங்கில அறிவை மேம்படுத்தி கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் குழந்தைகளின் பெயரை பதிவு செய்யுங்கள்

ALOHA INDIA

(A division of K K Academy (P) Ltd) An ISO 9001 : 2000 Company
'Deccan Heritage', New No. 521, II Floor, Anna Salai, Nandanam,Chennai - 600 035, Tamil Nadu, India.
Ph : 044 - 2436 1144 **Email :** info@alohaindia.com Web : www.alohaindia.com

Date : **Sunday,12th Nov 2006**
Age : **Between 6 -14**
Venue : **Mont fort Indoor Stadium,**
Santhome Hr. Sec. School,
(Near Santhome Church),
Chennai - 600 004.
Reg.Fee.(*பதிவு கட்டணம்*) **Rs. 30** (*சென்னை மட்டும்*)
சென்னை தவிர மற்ற இடங்களுக்கு **Rs. 50/-**

for More Details Contact
Ms. Ranjini @ 99402 99992
Ms. Girija @ 99400 16271

அலோஹா இந்தியாவுடன் இணைந்து பங்காற்ற (Franchisee) விரும்புகிறீர்களா? உடனே தொடர்பு கொள்ளவும்

“என் தங்கை கிடைப்பாளா?”

பெண்களுக்கான சட்ட ஆலோசனைகள்

பெயர் வெளியிட விரும்பாத வாசகி.

எனக்குப் பெற்றோர் கிடையாது. என் அப்பாவின் இரண்டாவது மனைவியின் பாதுகாப்பில் நானும், என் தங்கையும் இருக்கிறோம். நான் பட்டம் பெற்று ஒரு வேலையிலும் இருக்கிறேன். சித்தியின் கொடுமையிலிருந்து வெளியேறலாம் என்றால் என் தங்கையை நினைத்துப் பயப்படுகிறேன். அவளை என் சித்தியிடம் தனியாக விட்டு விட்டுச் செல்ல மனமில்லை. தங்கைக்கு கார்டியனாக சித்தி இருப்பதால் அவளை எப்படி என்னுடன் அழைத்துச் செல்வது?

பெற்ற தாயும், தந்தையும் தான் குழந்தைகளுக்கு கார்டியன். அவர்களுக்குப் பிறகு கூடப் பிறந்தவர்கள் இருந்தால் அவர்கள்தான் நேச்சுரல் கார்டியன். தாய், தந்தை இல்லாத மைனர் குழந்தைகளுக்கு கோர்ட் யாரையாவது கார்டியனாக நியமிக்கலாம். ஆனால், கார்டியனால் பாதுகாப்பு இல்லை என்று நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தால் சோர்ட் நியமித்தவரைக் கூட கார்டியன் ஷிப்பிலிருந்து நீக்கலாம். உங்கள் விஷயத்தில் உங்கள் தந்தைக்குப் பிறகு உங்கள் தந்தையின் இரண்டாவது மனைவிதான் கார்டியன் என்று நீங்களாகவே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் தங்கைக்கு நீங்கள்தான் கார்டியன். உங்கள் தங்கையை உங்களுடன் அழைத்துச் செல்லலாம். தேவைப்பட்டால் காவல் துறையின் உதவியை நாடலாம்.



ஜி. சுகன்யா, மெலட்டூர்.

என் கணவர் என் மீது விவாகரத்து வழக்குத் தொடர்ந்துள்ளார். ஆனால் அவர் ஒன்றிரண்டு வாய்தாக்களுக்குப் பிறகு நீதிமன்றத்துக்கு வரவேயில்லை. ஆரம்பத்தில் விவாகரத்துக்கு விருப்பம் இல்லாமல் இருந்த நான், என்னை விரும்பாத கணவருடன் வாழ்வதில் அர்த்தம் இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டேன். தற்போது எனது கணவரும், வழக்கை நடத்த விருப்பம் இல்லாதவராக இருக்கிறார். எனக்கோ விவாகரத்து கிடைத்து விட்டால் நிம்மதியாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இப்பொழுது இதற்குத் தீர்வு என்ன?

பொதுவாக வழக்கு போட்டவர்கள் தொடர்ந்து பல முறை நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் அவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டு விடும். (இதைத் தெரிந்து கொண்டு நீதிமன்றத்துக்கு வராதது வேண்டுமென்றேயில்லை, முக்கிய காரணத்தினால்தான் என்று உரிய காரணத்தைச் சொல்லி மனுதாக்கல் செய்தால்

அந்த மனு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்). உங்களது கணவர் எத்தனை முறை ஆஜராகவில்லை என்று நீங்கள் குறிப்பிடவில்லை. அடுத்த முறை வழக்கு விசாரணைக்கு வரும்போது நீங்கள் உங்களுக்கும் விவாகரத்துக்குச் சம்மதம் தான் என்றும் ஒரு மனுதாக்கல் செய்யவும். அல்லது புதிதாக நீங்கள் விவாகரத்துக் கோரி மனுதாக்கல் செய்யலாம். உங்கள் கணவர் தொடர்ந்து வழக்குக்கு (விசாரணைக்கு) வரவில்லையென்றால் உங்கள் மனு மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும்.




கே. கவிதா, அண்ணாநகர் மேற்கு.

நாங்கள் 5 வருடங்களுக்கு முன்னால் ஒரு ஃபிளாட் வாங்கினோம். அதில் வழக்கம் போல் பொது உபயோகத்துக்கான இடம் (காமன் ஸ்பேஸ்) என்று மாடிப்படி, லிஃப்ட், மற்றும் சுற்றி இருக்கும் இடங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் மொட்டை மாடியைப் பற்றி எதுவும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பத்திரத்திலும் இதைப் பற்றிய தகவல் இல்லை. தற்போது எல்லோரும் மொட்டை மாடியை உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பின்னால் எதுவும் தகராறு வரக்கூடாதே என்று கவலையாக இருக்கிறது. என்ன செய்யலாம்?

உங்கள் ஸேல் டீடில் மொட்டை மாடியைத் தனக்காக என்று விற்றவரோ அல்லது பில்டரோ வைத்துக் கொள்வதாக எழுதப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவும். (Terrace space is retained/reserved for the vendor/promoter) அப்படி இருந்தால் பின்னாளில் விற்றவர்களோ அல்லது பில்டரோ தங்களது உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ளக்கூடும். அல்லது ஏதாவது டவர் (செல்ஃபோன் கம்பெனிகள்) கட்டுவதற்குக் கொடுக்கக்கூடும். மேலே குறிப்பிட்டபடி எழுதப்பட்டிருந்தால் அவர்களிடம் பேசி மொட்டை மாடியை ஃபிளாட் வாங்கியவர்களின் உபயோகத்துக்கே கொடுப்பதாக எழுதி வாங்கிக்கொண்டு பத்திரத்தைப் பதிவுசெய்து கொள்ளவும். அவர்கள் சம்மதிக்கவில்லையென்றால் நீதிமன்ற உதவியை நாடலாம். மேலே குறிப்பிட்டபடி எதுவும் எழுதியிருக்கவில்லையென்றால் பின்னாளில் எதுவும் பிரச்னை வராது.

எல். ராகவன், திருச்சி.

சென்ற இதழில் மாமியார் மருமகளுக்கு செட்டில்மென்ட் எழுதினால் அது விற்பனையாகக் கருதப்படும் என்றும்,



வழக்கறிஞர் புஷ்பா ரமணி

ஆனால் தாய் மகனுக்கும், கணவர் மனைவிக்கும் எழுதினால் 1%தான் பத்திரக் கட்டணம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது சற்றுக் குழப்பமாக இருக்கிறது. இதைப் பற்றிய மேலும் விளக்க முடியுமா?

பெற்றோர், குழந்தைகளுக்கும் (பிள்ளை மற்றும் பெண்) குழந்தைகள் (பிள்ளை மற்றும் பெண்) பெற்றோருக்கும், கணவர் மனைவிக்கும், மனைவி கணவருக்கும், சகோதரர் (ஆண்கள்) மற்ற சகோதரர்களுக்கும் (ஆண்கள்) செட்டில்மென்ட் செய்யும்போது அது குடும்ப செட்டில்மென்ட் என்று கருதப்படும். அது போலவே தாத்தா, பாட்டி, பேரன், பேத்திகளுக்குச் செய்யும் செட்டில்மென்ட்டும் குடும்ப செட்டில்மென்ட்தான். இதில் பத்திரப் பதிவுக் கட்டணம் மொத்த மதிப்பில் 1% அல்லது ரூ. 10,000/- அதிகபட்சமாக சகோதரர், சகோதரிக்கோ அல்லது சகோதரி, சகோதரருக்கோ செட்டில்மென்ட் எழுதினால் கூட அது விற்பனையாகத்தான் கருதப்படும். மேலே குறிப்பிட்ட உறவுகளைத் தவிர மற்ற உறவுகள் யாராக இருந்தாலும் விற்பனைக்கான பத்திரப் பதிவுக்கட்டணத்தைத்தான் கட்ட வேண்டும்.

இரா. விஜயா, கொளத்தூர்.

நாங்கள் வசிக்கும் ஃபிளாட்டுக்குப் பக்கத்தில் ஒரு மருத்துவமனை உள்ளது. (முன்பு அது வீடாகத்தான் இருந்தது) அங்கு குப்பைகளைச் சரிவர அகற்றுவதில்லை. அந்தக் குப்பைகளால் தொற்றுநோய் பரவும் அபாயமும் இருக்கிறது. எவ்வளவுதான் சொன்னாலும் அவர்கள் கேட்பதில்லை. ஏதோ ஒரு செல்வாக்கினால் மிக தைரியமாக இருக்கிறார்கள். இதற்குச் சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்கலாம்?

இப்பொழுது இதற்காகச் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 'மருத்துவக் கழிவை அகற்றும் விதிமுறைகள்' வரையறுக்கப்பட்டுள்ளன. இதன்படி மருத்துவமனையில் ஏற்படும் மருத்துவக் கழிவுகளை அந்தப் பகுதிக்கு என்று வரையறுக்கப்பட்டுள்ள இடத்திலுள்ள சாம்பலாக்கும் கருவியில் கொட்ட வேண்டும். அதுவும் கழிவுகள் சேர்ந்தவுடனேயே இந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைக் குறிப்பிட்டு உங்கள் பகுதியிலுள்ளவர்கள் அவர்களிடம் எழுத்து மூலமாகத் தெரிவியுங்கள். நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் உங்கள் பகுதிக்கு, அம்பத்தூர் தொழிற்பேட்டையில், முகப்பேர் ரோடில், 'மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்' உள்ளது. அங்கு மனு கொடுக்கவும். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். இது தவிர, உங்கள் பகுதியில் உள்ளவர்கள் அனைவரும் சேர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடரலாம். (மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு மனு கொடுத்து அவர்கள் 60 நாட்கள் வரை நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் இந்த வழக்கைத் தொடரலாம்).



பெண்களில் பலர் தம் கையொப்பத்தை முழுப் பெயரும் தெளிவாகத் தெரியும்படி எழுதுகின்றனர். நான் உட்பட. சில முக்கிய இடங்கள் உ.ம். வங்கி பாஸ் புக், பத்திரங்கள் போன்றவற்றில் மட்டும் முழு கையொப்பத்தையும் எழுதுங்கள். மற்ற சில்லறை இடங்களில் உ.ம். காஸ் பில், கொரியர் பில் போன்றவற்றில் சின்ன, சிக்கலான கையொப்பமே இடலாம். இது என்றுமே நமக்குப் பாதுகாப்பு!

- காவியா, தி. நகர்.

என்னை விட்டுப் போகாதே!

மொட்டை மாடியில் காற்று சில்லிட்டிருந்தது. திலகன் வெறும் தரையில் மல்லாந்து படுத்திருந்தான். நகரத்து செயற்கை வெளிச்சத்தில் நட்சத்திரங்கள் குறைவாகத் தென்பட்டன. கொசுக்கள் ரீங்காரமிட்டன. வீட்டில் குளிரூட்டப்பட்ட படுக்கையறை இருந்தது. அதில் படுத்தால் தேவையில்லாமல் ஒரு குற்ற உணர்வு வந்தது.

மாதங்கி தரையில் காகிதம் விரித்துப் படுத்திருக்கும்போது, அவன் மட்டும் சொகுசாக மெத்தையில் படுப்பதா?

மாதங்கியிடம் இளமையில் அவன் ரசித்த அழகு தேய்ந்து போயிருக்கலாம்; அவனைப் பார்த்தும் முன்பு கிளர்ந்த வேட்கை யுணர்வு காணாமல் போயிருக்கலாம். ஆனால், அவளுடைய அண்மை அவனுள் ஏற்படுத்தும் அன்பான கதகதப்பு மாறவில்லை. அவளை எப்படியாவது சந்தோஷப்படுத்த வேண்டும் என்ற தவிப்பு குறையவில்லை.

'என்னை ஏன் திலக், வீட்டுக்கு வான்னு நீ கூப்புடலை?'

இன்றைக்கு ஏன் திடீரென்று அந்தக் கேள்வியை வீசினாள்?

அவளை அவன் கூப்பிட்டிருக்க வேண்டுமோ? வீட்டு வாசலில் பதிக்கப்பட்டிருக்கும் பளிங்குக் கல்லில் 'மாதங்கி இல்லம்' என்று செதுக்கப்பட்டிருப்பது கண்டு அவள் வேதனை அல்லவா கொள்வாள்? அவனுடைய வீட்டையும், சுற்றியுள்ள தோட்டத்தையும், வசதி மிகுந்த அறைகளையும் பார்த்தால் எவ்வளவு காயப்பட்டுப் போவாள்?

'என்னுடன் வந்து வசிக்காத மகாராணிக்கென நான் கட்டிய அரண்மனை' என்று அவன் துணிவுடன் அவளிடம் சொல்ல முடியுமா?

தலைமாட்டில் செல்போன் சிணுங்கியது. திலகனுடைய தொடர் நினைவுகளுக்குக் கடிவாளம் போட்டது - அந்த அழைப்பு.

"சார், மெட்ரோ பார்க் கேன்ட்டீன் சம்பந்தமா உங்ககிட்ட பேசணும்னு கோபால் சார் சொன்னாரு. நாளைக்கு மாலை உங்களைச் சந்திக்கணுமாம்..."




பழைய கடற்கரைச் சாலையில் புதிதாகத் துவங்கவிருந்த பிரம்மாண்ட நிறுவனத்தின் கேன்ட்டீன் பொறுப்பு அவனுக்குத்தான் என்று அதன் தலைவர் கோபால் ஏற்கெனவே சொல்லியிருந்தார். இப்போது சந்திக்கக் கூப்பிடுகிறார். மற்ற சமயமாக இருந்தால், உடனடியாக சந்தோஷப்பட்டிருப்பான்.

"நாளைக்கா?" என்றான், தயக்கத்துடன்.

மறுநாள் தானே பூபதியை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போகும் வேலை இருக்கிறது?

"நானே அவர்கிட்ட பேசிக்கிறேன்" என்று தொடர்பைத் துண்டித்தான்.

சற்று நேரத்தில் மறுபடி



7

சுபா

செல்போன் சிணுங்கியது.

"திலக்!"

மாதங்கியின் குரல் கேட்டதும் படக்கென்று எழுந்து உட்கார்ந்தான்.

"திலக்... வெளியே வந்து பேசறேன்... ஒண்ணு சொன்னாத் தப்பா நெனைக்க மாட்டியே?"

அவள் குரல் தடுமாறியது.

"சொல்லு, மாதங்கி."

"நாளைக்கு ஆம்புலன்ஸ் அனுப்பி வை போதும்; நீ வர வேண்டாம்."

"துணைக்கு ஒருத்தர் இல்லாம நீ எப்படி?"

"திலக்.. ப்ளீஸ்... நான் வார்டு பாய் யாரையாச்சும் அழைச்சிட்டுப் போறேன்; நீ வேணாம்."

"ஏன் மாதங்கி? பூபதிக்கு என்னைப் பிடிக்கலையா?"

மறுமுனையில் மெலிதாக விசும்பினாள்.

"காரணம் கேக்காதே. திலக்... நீ அப்புறம் ஆஸ்பத்திரில வந்து பாரு..."

அவள் தொடர்பைத் துண்டித்த பின், அவன் இதயம் கனத்து விட்டது.

ஐயோ, மாதங்கியை ஏதாவது இக்கட்டில் மாட்டி வைத்து விட்டேனா? அவளுடைய நிம்மதி என்னால் பறிபோய் விட்டதா? பூபதி அவளை ஏதாவது சொல்லி விட்டானா? இனி அவளாக அழைக்காமல் அங்கே போக முடியாதா?

எழுதி வைத்த கவிதை கையை விட்டு நழுவிய போது தாங்கிக் கொண்ட கவிஞன், பிற்பாடு அதே கவிதையைச் சாக்கடை நீர் அடித்துப் போவதைக் கண்டால் எப்படித் துடித்துப் போவானோ, அந்தத் துடிப்பை திலகன் அன்றிரவு முழுவதும் அனுபவித்தான்.

மறுநாள் மாலை மாதங்கி பேசினாள்.

"திலக்... நேத்து நைட் நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. சின்ன பாரத்தைக் கூடச் சுமக்கத் தெரியாம, உன் மேல அதை ஏத்தியிருக்கக் கூடாது."

"நீ சொல்றது புரியலை, மாதங்கி... என்னால ஏதாவது பிரச்னையா?"

"பிரச்னை நீ இல்ல திலக்; நான்." என்றாள். சிறிய இடைவெளி கொடுத்து, "ஸ்கேன் முடிஞ்சு திரும்பியாச்சு... டாக்டர் ரமணன் உன்னைப் பாக்கணும்னு சொன்னாரு" என்றாள்.

"நீ எப்படி இருக்கே மாதங்கி?"

"எனக்கென்ன குறை?" என்று சொல்லிய வேகத்திலேயே தொடர்பைத் துண்டித்து விட்டாள்.

பூபதி படுக்கையில் உட்கார்ந்திருந்தான்.

மாதங்கி கையில் கேரிபேக் ஒன்றுடன் வார்டுக்குள் நுழைந்தாள். வழக்கமாக மாத்திரைகள் வைக்கும் பிளாஸ்டிக் டப்பாவை எடுத்தாள். வாங்கி வந்த மாத்திரைகளை டப்பாவில் எடுத்து வைத்தாள்.


ஒரு பாட்டிலைப் பிடுங்கினான், பூபதி.

"புதுசா இருக்கு? இதுக்கு முன்னாடி இந்த மருந்தைச் சாப்பிட்டதில்

மழைக் காலத்தில் குழந்தைகளுக்குப் பிடிக்கும் சளி இருமலை விரட்ட இரண்டு லவங்கத்தை தீயில் சுட்டு, இரண்டு மிளகையும் வறுத்து, இரண்டையும் பொடி செய்யவும். அதனுடன் ஒரு சிட்டிகை சுக்குப் பொடியையும் சேர்த்து சிறிது தேனுடன் கலந்து இரவு படுக்குமுன் குழந்தைகளுக்குச் சாப்பிடக் கொடுத்தால் சளியுடன், இருமலும் வந்த வழி ஓடும். இதை வாரத்தில் இரண்டு நாட்களுக்குக் கொடுக்கலாம்.

- ஆர். அனுராதா முரளிதர்,
பெங்களூர்- 32.





மாதவிலக்கு சீக்கிரம் வரவேண்டும் என்றால் நிறைய கடலை மிட்டாய் அல்லது வறுத்த எள்ளுடன் வெல்லம் சேர்த்துச் சாப்பிட்டால் மாதவிலக்கு உடனே வரும். மாதவிலக்கு தள்ளிப் போக வேண்டும் என்றால் மாதவிலக்கிற்கு ஒரு வாரம் முன்பிருந்தே காலையில் வெறும் வயிற்றில் சிறிது வில்வ இலை கொழுந்தினை (எவ்வளவு நாட்கள் தள்ளிப் போக வேண்டுமோ அதுவரை சாப்பிட வேண்டும்) சாப்பிட்டு வர மாதவிலக்கு தள்ளிப் போகும்.

- ஆர். பாரதி மகேஷ், வெளிப்பாளையம்.

லையே..."

"ஸ்கேன் ரிசல்ட் பாத்திட்டு டாக்டர் மருந்தை மாத்தியிருக்கார். இன்னிலேர்ந்து இதை மூணு வேளை சாப்பிடணும். இந்த மஞ்ச மாத்திரையை ரெண்டு வேளை போட்டுக்கணும்..."

"இதெல்லாம் ஆஸ்பத்திரில கொடுத்தாங்களா, இல்ல காசு கொடுத்து வாங்கினியா?"

மாதங்கி களைப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"இதெல்லாம் ஸ்பெஷல் மெடிசின். அரசாங்க ஆஸ்பத்திரில கிடைக்காது. திலகனுக்குத் தெரிஞ்ச பார்மசில வாங்கிட்டு வரேன்."

அவள் குரலில் புதைந்திருந்த தொனி. 'தெரிஞ்சுக்கடா. திலகன் இருக்கற தாலதான உயிர் பிழைச்சுட்டிருக்க' என்று சொல்லாமல் சொல்லியது.

டிபன் கொடுத்து விட்டு அவள் மாத்திரையை எடுத்துக் கொடுத்தபோது, அவன் வாங்க மறுத்தான்.

"இருக்கட்டும், இருக்கட்டும்... ஒரு மாதிரி இருக்கு... கொஞ்ச நேரம் கழிச்சு சாப்பிடறேன். அப்படி வெச்சுடு..."

அவன் பிடிவாதம் தெரிந்திருந்ததால், மாதங்கி மறுத்துப் பேசாமல் மாத்திரைகளை அங்கே வைத்தாள்.

பூபதி மெத்தைக்கடியில் துழாவி, சிகரெட் பாக்கெட்டை எடுத்தான். திறந்து காட்டினான். அது காலியாக இருந்தது.

"மருந்து வாங்கப் போனபோதே, வாங்கிட்டு வந்திருக்கலாமில்ல?"

மாதங்கி அவனைச் சற்றே கோபமாக முறைத்தாள். "டாக்டர்தான் சிகரெட் பிடிக்க வேணாம்னு சொல்றாருல்ல... அதை நிறுத்தித் தொலைச்சா என்ன?"

"மொத்தமா நிறுத்தக் கூடாது; கொஞ்சம் கொஞ்சமா குறைச்சுக்கணும்னு அதே டாக்டர்தானே சொன்னாரு?"

"தம்பி..." பக்கத்துக் கட்டிலிலிருந்து கிழவியின் குரல் வந்தது. "பொம்பிளையை சிகரெட் வாங்க அனுப்பறியே, நல்லா இருக்கா?"

"அடுத்தவங்க விஷயத்துல தலையை நுழைக்கறீங்களே, அது நல்லா இருக்கா?" என்றவன், மாதங்கியைப் பார்த்துத் திரும்பினான்.

"நீ என்ன பாக்கெட் பாக்கெட்டாவா வாங்கித் தரே? வாங்கிட்டு வரதே ஒரு சிகரெட், ஒன்னரை சிகரெட்தானே? அதுக்கு ஊரைக்கூட்டி டமாரம் அடிக்கணுமா?"

கிழவி ஏதோ முணுமுணுக்க, மாதங்கி எதுவும் மறுத்துப் பேசாமல் வார்டை விட்டு வெளியேறினாள்.

அவர் காலடிச் சத்தம் தேய்ந்ததும், புதிய மாத்திரை டப்பாவை எடுத்துக்

குணம் பெற்றவர்கள் கூறும் உண்மைக்கதை



வெள்ளைத் தழும்புகள்

எனக்கு சில வருடங்களாக வெண்குஷ்டம் என்ற தோல் நோயினால் அவதியுற்றேன். டாக்டரின் பேட்டியை ஜெயா டீ.வியில் பார்த்து, இராயப்பேட்டையில் உள்ள ரப்பானி வைத்திய சாலாவிற்கு சென்று, சில மாதங்கள் மருந்து சாப்பிட்டதில் நான் பூரண குணமடைந்தேன் என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார். **- அமீர் பாட்ஷா, தில்லாம்பட்டி**

இடுப்பு வலிக்கு சிறந்த சிகிச்சை



நான் கடந்த சில ஆண்டுகளாக இடுப்பு வலியாலும், கை, கால், மூட்டு, குதிக்கால் வலியாலும் அவதியுற்று இருந்தேன். பல மருத்துவமனைகள் சென்று பார்த்தேன். பலன் கிடைக்கவில்லை. அதன் பிறகு டீ.வி. மூலம் விளம்பரத்தை பார்த்தேன். ரப்பானி வைத்திய சாலாவில் மருந்து சாப்பிட்டு வருகிறேன். இப்போது எந்த வேதனையும் இல்லை. நல்ல முறையில் இருக்கிறேன். **- செல்வராணி, சென்னை**

மூட்டு வலிக்கு சிறந்த சிகிச்சை



கடந்த 3 ஆண்டுகளாக மூட்டு வலியாலும், கைகால், குதிக்கால் வலியாலும் அவதியுற்று இருந்தேன். டீ.வி. மூலம் விளம்பரத்தை பார்த்தேன் ரப்பானி வைத்திய சாலாவில் வந்து 3 மாதம் மருந்து சாப்பிட்டு வருகிறேன். இப்போது எந்த வேதனையும் இல்லை. நல்ல முறையில் இருக்கிறேன். **- லத்தீப்புன்னிஷா, சென்னை - 600 042**

நாள்பட்ட ஆஸ்த்துமா (Asthma)




நான் கடந்த 20 ஆண்டுகளாக ஆஸ்த்துமா (Asthma) என்ற நோயால் அவஸ்த்தைப் பட்டு வந்தேன். தங்களது மருத்துவமனை பற்றி டீ.வி மூலம் தெரிந்து தங்களது விலாசத்திற்கு வந்து என்னுடைய உடம்பை பரிசோதித்து மருந்து கொடுத்து சுமார் 5 மாதம் தொடர்ந்து சாப்பிட்டு வந்துள்ளேன். 3 பாகம் சரியாகிவிட்டது. இப்போது எந்த தொந்தரவும் இல்லாமல் இருக்கிறேன். **- சரோஜா, ஆரணி**

சோரியாஸிஸ்



நான் கடந்த சில ஆண்டுகளாக சோரியாஸிஸ் நோயினால் அவதிப்பட்டு இருந்தேன். உடம்பில் மீன் செதில்கள் போல் கொட்டும். பல டாக்டர்களிடம் பார்த்தும் சரியாகவில்லை. கடைசியில் டாக்டரின் விளம்பரத்தை பார்த்து அவரிடம் சென்றேன். இப்போது மருந்து சாப்பிட்டு குணம் அடைந்து இருக்கிறேன். இப்போது உடம்பில் எந்த வடுகூட இல்லாமல் மிக நன்றாக இருக்கிறேன். **- பத்மநாபன், சென்னை - 56**

நாள் பட்ட பக்கவாதம் (Paralysis)



எனக்கு 2 வருடம் கை, கால் வாதம் (Paralysis) ஏற்பட்டு நடக்க முடியாமல், கை, கால் செயல்படுத்த முடியாமல் பல பெரிய மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்தும் பலன் கிடைக்கவில்லை. டீ.வி. மூலம் விளம்பரத்தை பார்த்து ரப்பானி வைத்திய சாலாவில் சிகிச்சை பெற்று வருகிறேன். இப்போது கை, கால் தூக்க முடிகிறது. நல்ல முறையில் நடக்கிறேன். இப்போது எந்த குறையும் இல்லை. **- ரமேஷ், மதுரை**

கை, கால் வாதம், மூளை வளர்ச்சிக் குறைவு, லிவர் பெயிலியர், மூலம், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற யுனானி மருத்துவமனை



ரப்பானி வைத்யசாலா

பழைய 65 / புதிய 139, டாக்டர் பெசன்ட் ரோடு, மீர்சாகிப்பேட்டை,
மார்க்கெட் அருகில், இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன்: 28476969, 28470874

ராஜ் டீ.வி. காலை 8.30 - 9.00
திங்கள் முதல் சனி வரை தமிழன் டீ.வி. மாலை 6.00 - 6.30,
திங்கள் முதல் வெள்ளி வரை தமிழன் டீ.வி. காலை 9.30 - 10.00

மாதந்தோறும் டாக்டர் சையத் சத்தாரின் யுனானி மருத்துவம் மாத இதழ் கடைகளில் கேட்டு வாங்குங்கள்.

கொண்டு, கட்டிலிலிருந்து மெள்ள இறங்கினான், பூபதி. சுவரைப் பிடித்து அறையை விட்டு வெளியே வந்தான்.

டாக்டர் ரமணன் நோயாளிகளைப் பார்த்து விட்டுத் தன் அறைக்குத் திரும்பிய போது, நர்ஸ் காத்திருந்தாள்.

''சீனியர் டாக்டர் உங்களைக் கூப்பிடறாரு, டாக்டர்.''

எதற்கு என்று புரியாமல், ரமணன் காரிடாரில் நடந்தார்.

'டாக்டர் சகாதேவன்' என்று போர்டு வைத்த அறைக் கதவைத் தட்டி விட்டு நுழைந்தார்.

நரை அடர்ந்த தலையை நிமிர்த்தி சீனியர் டாக்டர் அவரைப் பார்த்தார்.

அவருக்கு எதிரில் அமர்ந்திருந்த பூபதியைப் பார்த்து ரமணனின் புருவங்கள் உயர்ந்தன.

''என்ன பூபதி! இங்க உட்கார்ந்திருக்கீங்க?''

பூபதி தடுமாறினான்.

''ஒண்ணுமில்ல டாக்டர், உங்க கிட்ட ஒரு சந்தேகம் கேக்கறதுக்காக வந்தேன். ரூம் தெரியாம இங்கே வந்துட்டேன்...'' என்று இழுத்தான்.

''நீங்க எழுதிக் கொடுத்திருக்கிற மருந்தைப் பத்தி இவருக்குச் சந்தேகம் வந்திருக்க... என்கிட்ட என்ன கேட்டாரு, தெரியுமா?'' என்று சீனியர் டாக்டர் கேட்டதும் பூபதி சற்றே பதறினான்.

''விஷயத்தைப் பூராக் கேளுங்க, ரமணன்... கொஞ்ச நேரத்துக்கு முன்னால இவர் என்னைத் தேடி வந்தாரு...''

''**வ**ணக்கம் சீனியர் டாக்டர். என் பேர் பூபதி. இங்கதான் ஸ்பெஷல் வார்டுல அட்மிட் ஆகியிருக்கேன். உங்க கிட்ட ஒரு சந்தேகம் கேக்கணும்...''

''சொல்லுங்க'' என்றார், டாக்டர்- கண்ணாடியைத் துடைத்து அணிந்தபடி.

பூபதி கையோடு கொண்டு வந்த மருந்து பாட்டிலை மேஜை மேல் வைத்தான்.

''இதெல்லாம் உயிரைக் காப்பாத்தற மருந்தா, இல்ல உயிரை எடுக்கற மருந்தான்னு கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்க டாக்டர்...'' என்றான்.

சீனியர் டாக்டரின் முகத்தில் ஒரு திடுக்கிடல் வந்தது.

''எதனால உங்களுக்கு இந்த மாதிரியெல்லாம் சந்தேகம் வருது? உக்காருங்க...'' என்றபடி டாக்டர் பெல்லடித்தார்.

எட்டிப் பார்த்த நர்ஸ் பூபதியின்



ரயிலில் பயணம் செய்யும் போது, சிலர் இருக்கையைச் சுற்றி சாப்பிடும் பழத்தோல், கடலை என்று குப்பைகளைப் பார்க்கலாம். சிலர் குப்பைகளை வெளியில் தூக்கி எறிந்து ரயில் பாதை ஓரங்கள் முழுவதும் குப்பைத் தொட்டியாக ஆக்கி விடுகிறார்கள்.

நாம் ஒரு பிளாஸ்டிக் பையை எடுத்துச் சென்று, நாம் உபயோகப்படுத்திய பழத்தோல், பிளாஸ்டிக் தம்ளர் போன்றவைகளை அதில் போட்டு இறங்கியதும், குப்பைத் தொட்டியில் போட்டு விட்டால், ரயில் பெட்டி சுத்தமாக இருப்பதோடு, சுற்றுப்புறம் மாசுபடுவதைத் தவிர்க்கலாம்.

- விஜயா,கே. கே.கே. நகர்.


செயல்திறனின் பல முகங்கள்!
உங்களுக்குப் பிடித்ததை தேர்ந்தெடுங்கள்.
அமிர்தா வழங்குகிறது செயலாற்றல்மிக்க வெட்கிரைண்டர்களின் ஒரு முழுமையான அணிவரிசை. உங்கள் தேவை மற்றும் பட்ஜெட்டுக்கேற்ற ஒன்றை சுலபமாக தேர்ந்தெடுக்கலாம். வாடிக்கையாளர்களின் இதயம் கவர்ந்த அமிர்தாவின் பாரம்பர்யச் சிறப்பான தரம் மற்றும் பல்வேறு சிறப்பம்சங்கள் உங்களுக்கு என்றும் துணையிருக்கும். நீடித்துழைக்கும் மோட்டார். அற்புதமாக அரைக்க உதவும் எடைகுறைவான ஹெவி டியூட்டி கற்கள். எளிதாக கையாள்வதற்கு வசதியாக சுலபமாக சுழற்றக் கூடிய ஸ்டென்லெஸ் ஸ்டீல் டிரம்.
Amirthaa SLX Incorporating the Uni-pressure 3 stone system
Amirthaa Sleek The master performer
Amirthaa ALS The cost effective option
Amirthaa TLT The user friendly tilting grinder
2 litres capacity | High quality ABS plastic body | Space saving design | Low power consumption
2 YEAR WARRANTY ON GRINDER
5 YEAR WARRANTY ON MOTOR
Optional attachments Atta kneader and Coconut scraper
AMIRTHAA™
tabletop wet grinder
Let it assist you
Available at all leading out lets *Conditions apply
For more details: Chennai, Chengalpet, N.Arcot & S. Arcot- Ph: 044-26481013. Pondicherry- Ph: 0413-2234342. Thanjavur- Ph: 0436-2239561. Trichy: Ph: 0431-2700728, 94434 78065. Madurai- Ph.0452 4351636, 9344753718. Tirunelveli, Tuticorin & K.K. Dist.- Ph: 04652 245475. Salem- Ph: 98427 66377. Tirupur- Ph: 0421 4320003, 4320066. Udumal pettai-Ph: 04252-225388 Bangalore-Ph: 080-22224723. Calicut- Ph: 0495-2367333.
Mfd.by: Minit Engineers (I) P.Ltd., Erode-638004, TamilNadu. Ph:0424-2227050, 2214259 E-mail: minit@amirthaa.com



வாயு பிடிக்கும் கிழங்குகளை வேகவிடும் போது, ஒரு சிறு துண்டு இஞ்சியையும் சேர்த்து வேகவிட்டால் வாயு தொல்லை இருக்காது. ஜீரண சக்தியும் எளிதாகும்.

- என். விஜயலெட்சுமி,
திருக்கோவிலூர்.

வார்டுக்கு வந்து போகிறவள்.

''நர்ஸ்! இவரோட கேஸ் ஷீட் கொண்டு வாங்க'' என்று டாக்டர் சொன்ன போது, பூபதியைக் கண்கொட்டாமல் பார்த்தபடி நர்ஸ் வெளியேறினாள்.

போன வேகத்திலேயே அவனுடைய கேஸ் ஷீட்டைக் கட்டிலிலிருந்து பறித்து வந்து நீட்டினாள்.

டாக்டர் தான் தானாகப் புரட்டினார். மருந்துச் சீட்டில் எழுதப்பட்ட பெயரை பூபதியின் முகத்துக்கு நேரே காட்டினார்.

"டாக்டர் ரமணன் கரெக்டாத்தானே எழுதிக் குடுத்திருக்காரு? திடீர்ன்னு என்ன புதுசா உங்களுக்குச் சந்தேகம்?''

பூபதி பதில் சொல்லும் முன், "டாக்டர் ரமணனைக் கூப்பிடுங்க" என்று அவர் உத்தரவிட, பூபதி மெள்ள வியர்த்தான்.

"ஐயோ, அவர் எதுக்கு டாக்டர்?''

"உங்க சந்தேகத்தை அவர்கிட்டயே கேளுங்களேன்.''

நடந்ததை சீனியர் டாக்டர் விவரிக்க விவரிக்க... டாக்டர் ரமணனின் முகம் இறுக்கமானது.

பூபதி தடுமாறினான்.

"உயிரை எடுக்கற மருந்தை உங்களுக்கு நான் ஏன் கொடுக்கணும்? உங்க உடம்புல உயிர் நிக்கணும்கறதுக்காகத்தான் இந்த மருந்தெல்லாம் எழுதிக் கொடுத்தேன்... இது பொதுவா வெளிநாட்டுல மட்டும் தான் கிடைக்கும். விலை எக்கச்சக்கம். நம்ம ஹாஸ்பிடல்ல கிடைக்காதுன்னு சொன்னதால... திலகன் ஸ்பெஷலா ஏற்பாடு பண்ணியிருக்காரு... இதைப் போய் நீங்க ஏன் சந்தேகப்படணும்?''

"இல்ல டாக்டர்.. பொம்பிளைங்களுக்குக் கவனம் குறைவு. என் மனைவிதான் வாங்கிட்டு வந்தா.. கடையில மாத்திக் குடுத்திரலையேன்னு தெரிஞ்சுக்கத்தான் வந்தேன்...''

''பொம்பிளைங்களுக்குக் கவனம் குறைவா? யார் சொன்னது? உங்க மனைவிகிட்ட இருக்கற கவனமும், பொறுப்பும்தான் உங்களைக் காப்பாத்திட்டிருக்கு. மறந்துடாதீங்க...'' டாக்டர் ரமணன் சற்றே அதட்டலாகச் சொன்னார்.

பூபதி களையிழந்தவனாக எழுந்தான்.

"நான் சந்தேகப்பட்டது உங்களை இல்லை, டாக்டர்'' என்றான்.


மருந்து பாட்டிலை எடுத்துக் கொண்டு, வெளியேறினான்.

(தொடரும்)

தேங்காய் மூடியில் உப்பைத் தேய்த்து, ஃப்ரிட்ஜில் வைத்தால் நல்லது.

- பி. சாரதாம்பாள், மடிப்பாக்கம்.




(44) 4222 0077
The timeless COLLECTION
No.12, Nageswaran Road,
(Opp. Panagal Park),
T.Nagar, Chennai 600017
Tel: +91 44 24313611 3727 3757
www.kumaransilks.com
Kumaran Silks
since 1955



தாத்தா : என். பாலசுப்ரமணியன்,
பாட்டி : பி. விசாலி
பேரன் : ஜே. அருணாசலம்



தாத்தா : ஆர். ரங்கநாதன்
பாட்டி : சுதா
பேத்தி : சஹானா



தாத்தா: கே. ராமகிருஷ்ணன்
பாட்டி : பிரபா ராமகிருஷ்ணன்
பேத்தி : ஷ்ரியா விஜய்



என் செல்லமே!



தாத்தா : மைக்கேல்
பாட்டி : சகாயனி
பேத்தி : லேயா

உங்கள்
பிற்காலம் உன்னதமாய்
இருக்கட்டும்



SANTHOSHAM
Retirement Homes
(Extension of Soundaryam Comfort Home)

சந்தோசம்
50 வயதானவர்களுக்கான கம்யூனிட்டி

சந்தோசமான சூழல், ரம்மியமான காற்று, தென்னை மரங்கள் நிறைந்த, அருமையான குரூப் ஹவுசிங் இதுதான் சந்தோசம். முந்தய எங்கள் ப்ராஜக்ட் "சௌந்தர்யத்துக்கு மிக அருகில், அதில் உள்ளதுபோலே அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்டது. 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு என சிறப்பாக அமைக்கப்பட்டது. இது R.S.புரத்திலிருந்து 8 கிமீட்டரும், பேரூர் பட்டீஸ்வரர் கோவிலிருந்து 2கிமீட்டரும் தூரம் கொண்டது. 3 ஏக்கரில், 50,000 சதுர அடி, 36 குடியிருப்புகள் கொண்டது. **Fully Booked**



SHENBHAGAM
ESTATES

செண்பகம் எஸ்டேட்ஸ்
50 வயதானவர்களுக்கான கம்யூனிட்டி

பசுமையான சூழலில், சிறுவாணி ரோடு மாதம்பட்டியில், 5.80 ஏக்கரில், 70 குடியிருப்புகளுடன் அமைக்கப்படவுள்ளது செண்பகம் எஸ்டேட்ஸ். இது தொண்டாமுத்தூரிலிருந்து 2 கிமீட்டரும், சௌந்தர்யம், சந்தோசம் ஆகிய எங்களது குரூப் ஹவுசிங்லிருந்து 4 கி.மீட்டர் தூரம் கொண்டது. இதுவும் "சௌந்தர்யம் போல அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்டது.
Project set for launch in November 2006. **Bookings open.**

வீட்டுக் கடனுதவி வழங்குவோர் :
- HDFC லிட்.
- LIC ஹவுசிங் பைனான்ஸ்
- ஹோம் லோன் கனரா வங்கி
- SBI ஹோம் லோன்
- சுந்தரம் ஹோம் பைனான்ஸ்

OUR REPRESENTATIVES

Chennai	Muscat
Ms. Gita Ramesh	Ms. Latha Natarajan
Ph : 044 - 24463063	Ph : +96895296698

COVAI
PROPERTY CENTRE
(INDIA) PRIVATE LIMITED

C 601, Pioneer Apartments, 1075 Avinashi Road,
Coimbatore - 18. Ph : 91-422-6572625, Telefax : 2216867.
Mobile : 99944 - 51119, 98943 - 17841.
Email : covaiprop@vsnl.net Website : www.covaiprop.com

www.covaiprop.com

An Ex-Serviceman's Enterprise



வாம்மா... மின்னல்!

வீட்டு வேலைக்கு ஆள் வைத்துக் கொள்வது, நமக்கு வழக்கமான சமாசாரம். நம் ஊரிலேயே வாடகை வீட்டுக்குப் போனாலும், சொந்த வீடு கட்டிக்கொண்டு குடிபோனாலும், முதல் கவலையே 'இந்த ஏரியாவில் வேலைக்கு ஆள் கிடைக்குமா' என்பது தான்.

சைனாவில் அந்தக் கவலையே பட வேண்டாம். உடனேயே 'மிடுக்காக' வந்து சேருவார்கள். 'இவளா வேலை செய்யப் போகிறாள்' என்று நாம்தான் வியந்து போய்ப் பார்ப்போம்.

உள்ளே வரும்போது, 'நீ ஷாவ்' (ஹலோ) என்று சொல்லி விட்டு, போட்டு வந்த ஹீல்ஸைக் கழற்றி, கால் தரையிலேயே படாமல், கையோடு கொண்டு வருகின்ற வீட்டுச் செருப்புக்குள் ஒவ்வொரு காலாக நுழைத்தபின், செல் ஃபோன், ஹாண்ட் பேக், தண்ணீர், குடை எல்லாவற்றையும் ஓரமாக வைத்துவிட்டு, பாத்ரூமுக்குள் நுழைந்து டிப்-டாப் துணியிலிருந்து, வேலை செய்கிற துணிக்கு மாறும்வரை கண்கள் விரிய அதிசயமாகப் பார்க்க வேண்டியதுதான் நம் வேலை.

முதலில் இதைச் சொல்லியாக



முறுக்குக்கு மாவு பிசையும் போது ஒரேயடியாக மொத்த மாவையும் சேர்த்துக் கலக்கக் கூடாது. இதனால் முறுக்கு சிவந்து விடும். கொஞ்சமாக மாவு எடுத்து அவ்வப்போது கலந்து செய்தால் முறுக்கு வெண்மையாக இருக்கும்.

- எஸ். விஜயா,
திருச்சி -13.



அயல் நாட்டில்...

வேண்டும். வேலைக்குச் சேரும் போது, எந்த நேரத்தில் வருவேன் என்று ஒப்புக் கொள்கிறார்களோ, அதற்கு ஐந்து நிமிஷம் முன்னாடியாவது வந்து பெல் அடிப்பார்களே தவிர, பின்னால் இல்லை. 'வேலைக்கு மட்டம்' போடுவது என்பது அவர்கள் அகராதியிலேயே இல்லை.

அப்புறம், ரொம்ப முக்கியமானது, நம் ஊரைப் போல வேலைக்குச் சேர்ந்த ஒரு வாரத்திலேயே 'ஒரு 200 ரூபாய் குடும்மா. சம்பளத்தில் புடிச்சிக்கோ' (சம்பளம் 250 ஆகவே இருந்தாலும் கூட) என்று பாங்கில் போட்டு வைத்து எடுப்பது போலக் கேட்கிற பேச்செல்லாம் கிடையாது.

நாமாக சம்பளம் கொடுக்கும் வரை, வாயைத் திறக்க மாட்டார்கள். அப்படியொரு சுயமரியாதை.

காப்பி, டீ கிடையாது; டிபன் கிடையாது. நம்ம சாப்பாடு, நமக்கு மட்டும்தான். இங்கேதான் நமக்குக் கொஞ்சம் உதைக்கும். சாப்பாடு மீந்து விட்டால், நாமே தான் காலி செய்ய வேண்டும். திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள்!

இங்கே அவர்கள் வீடு பெருக் கித் துடைக்கிற அழகும், பாந்த மாகத் துணிகளை உலர்த்தி எடுத்து, இஸ்திரி போடுகிற அழகும், காய்கறிகளை நறுக்கித் தருகிற விதமும், எல்லாமே மின்னல் வேகம்தான்! அதிலும் கீரை நறுக்கி வைத்தால், எடுத்து அர்ச்சனை பண்ணலாம். இதையெல்லாம் உணர, சைனா வந்து அனுபவித்துப் பார்க்க வேண்டும்.

என் பெண், ஆறு மாதக் குழந்தை யுடன் வந்து ஒரு மாதம் இருந்தாள். குழந்தைத் துணிகள் அத்தனையும் துவைத்து (மெஷின்தான் என்றாலும்) உலர்த்தி, உலர்ந்தபின் இஸ்திரி போட்டு... ஆஹா...

பெண் ஊருக்குப் புறப்படும் போது வலுக்கட்டாயமாகப் பணத்தைக் கையில் திணிக்க வேண்டியிருந்தது. அப்படி மறுத்தாள். கம்





'தண்ணி' காட்டுங்க!



'முதுகு வலி, மூட்டுவலி, உடல் சோர்வு முதலியன உண்மையில் எவ்விதமான நோயும் அல்ல. இவை எல்லாம் பல நேரங்களில் உடலில் நீர்ச்சத்து குறைவதால் ஏற்படும் பிரச்னைகள்' என்கிறது மருத்துவம். 'தண்ணி' காட்டினால் போதும், வலிகள் பறந்தோடும்.

- வித்யா சீனிவாசன், முசிறி.

யூனிஸ்ட் நாடாச்சே! 'சரிக்குச் சமம்' மனோபாவம் இருக்குமே!

பாஷை தெரியாத ஊர் என்று பயப்பட வேண்டாம். சாவியைத் தாராள மாகக் கொடுத்து விட்டுப் போகலாம். இது வரை பத்துத் தடவைக்கு மேல் வேலை செய்பவளிடம் சாவியைக் கொடுத்து விட்டு இந்தியா போய் வந்திருக்கிறேன்.

எதிர்த்துப் பேசி, சண்டை போடுகிற சமாசாரமெல்லாம் கிடையாது. பாஷை தெரியாததும், புரியாததும் கூட நல்லது தான். மேலும் நாம் சண்டை பிடிக்கிற மாதிரி அவர்கள் செய்யும் வேலையில் கள்ளம் இருந்தால்தானே! 'நுனிப்புல் மேய்கிற' கெட்டிக்காரத்தனம் தெரியாது.

''ஊருக்குத் திரும்பி வரும்போது, இங்கே கிடைக்கிற எந்தப் பொருளையும் எனக்கு வாங்கிக் கொண்டு வர வேண் டாம். நம் ஊரிலேயே கொள்ளையாகக் கிடைக்கிறது'' என்று கண்டிப்பாகச் சொல்லி விடுகிறார்கள். இப்படியொரு பாந்தமான உதவி நம் ஊரிலும் கிடைத் தால் எப்படியிருக்கும் என்று கற்பனை யில் கூட நினைத்துப் பார்க்க வர மாட் டேன் என்கிறது. அது ஏன்? தெரிய வில்லை!

- ஜெயா ஸ்ரீனிவாஸன்,
கோபாலபுரம்.



பருப்பு ஊறப் போடாமலே, திடீர் வடை செய்ய ஒரு அசத்தல் ஐடியா. ஒரு ஆழாக்கு பொட்டுக் கடலையை மிக்ஸியில் இரண்டு சுற்று சுற்றி அரைக்கவும். அத்துடன் அரை ஆழாக்கு வறுத்த நிலக்கடலையைச் சேர்ந்து, 'கொரகொர' என்று அரைத்துக் கொள்ளவும். இந்தக் கலவையில் உப்பு, காரப் பொடி, தண்ணீர் சேர்த்து பிசைந்து வடை தட்டினால், குறைந்த நேரத்தில் சுவையான 'மொறுமொறு' என்று வாயில் கரையும் வடைகள் தயார்.

- க. வேடியப்பன், கும்மிடிப்பூண்டி.

குட்டீஸ் ஜாட்டி



சமீபத்தில் என் அக்கா மகனைக் கோயிலுக்கு அழைத்துச் சென்றேன். முருகன் சன்னதிக்குப் போனதும் "நீ நிறைய மார்க் வாங்கணும்னு வேண்டிக்க. முருகன் போடுவார்'' என்றேன். அதற்கு அவன், "சித்தி, மார்க் அவர் போட மாட்டார்; எங்க மிஸ் தான் போடுவாங்க'' என்றானே பார்க்கலாம்!

- எஸ். இராதாகிருஷ்ணன்,
கச்சனம்.



எனது மச்சினனின் பெண் அக்ஷயா படுபுத்திசாலி! அவள் எல்.கே.ஜி. படிக்கும் போது ஒருநாள் அவளுடைய தாத்தா ஸ்கூலுக்குக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார். அப்போது குழந்தையின் கையில் இருந்த பென்சில் கீழே விழுந்து விட்டது. குழந்தை எடுப்பதற்குள் தாத்தா முன்னே சென்று விட்டார். உடனே, "தாத்தா, தாத்தா'' என்று கூப்பிட்டு அவர் திரும்பி வந்ததும், "என்னை விட்டு விட்டு ஏன் முன்னாடி ஓடிப் போறீங்க? நீங்களா ஸ்கூல்ல படிக்கிறீங்க?'' என்று சலித்துக் கொண்டாளாம்.

அவர் திரும்பி வந்ததும் எங்கள் அனைவரிடமும் சொல்லிச் சொல்லிச் சிரித்தார்.

- ஆர். லக்ஷ்மி,
மும்பை.

"புல்டோஸரா வெச்சிருக்கே?"



எங்கள் வீட்டில் 5 வயது குட்டிக் குழந்தை ஒன்று உள்ளது. எங்கள் வீட்டு வேலைக்காரி வீடு பெருக்கிக் கொண்டு இருந்தார். எனது அம்மா அவளைக் கூப்பிட்டார்கள். "இரும்மா, வாசலை மட்டும் தள்ளிவிட்டு வருகிறேன்'' என்றாள். உடனே அந்தக் குழந்தை "வாசலை எப்படித் தள்ளுவே? நீ புல்டோசரா வெச்சிருக்கே?'' என்றதே பார்க்கலாம்.

- எஸ். நிரஞ்சனி,
போரூர்.

ராசி பலன்
நவம்பர் - 2006

ரா சந்	1.11.2006 அன்று உள்ள கிரக நிலை		சனி
			கேது
	குரு புதன்	சூரி சுக் செவ்	

சுபஸ்ரீ விய வருஷம்
ஐப்பசி மாதம்
15-ம் தேதி முதல் கார்த்திகை
மாதம் 14ம் தேதி வரை

திருக்கணிதப் பஞ்சாங்கப்படி கிரக
மாற்றங்கள்

1.11.2006 - துலா - புதன்
1.11.2006 - சிம்ம - சனி
12.11.2006 - விருச்சிக - சுக்ரன்
16.11.2006 - விருச்சிக - சூரியன்
27.11.2006 - விருச்சிக - செவ்வாய்

மாலை முதல் 22.11.2006 மாலை வரை சந்திராஷ்டமம். புதிய முயற்சிகளில் மிக மிக கவனம் தேவை.

பரிகாரம் : பிரதி செவ்வாய் மாரியம்மனுக்குத் தீபம் ஏற்றி குங்கும அர்ச்சனை செய்ய, மகிழ்ச்சி கூடும்.

மேஷ ராசி :

அஸ்வினி, பரணி, கார்த்திகை, 1-ம் பாதம்.

எதிலும் முன்னணியில் மிளிர வேண்டும் என எண்ணி அயராது உழைக்கும் மேஷராசி நேயர்களே! உமது இலட்சியங்களில் புது வேகம் பிறந்திருக்கிறது. உமது வாக்குக்கு அபார சக்தி கிடைத்திருக்கிறது. புதிய முயற்சிகளில் உமது செயல் திறனும் புத்திக்கூர்மையும் பலரால் பாராட்டு பெறும். கடன் தீரும். மகன் (அ) மகள் வாழ்வில் புது வசந்தம் வீசும். சேமிப்பு பெருகும். மாமனார், மாமியார் மிகுந்த பரிவு காட்டுவர். புதிய ஏஜென்ஸி, டெண்டர், லைசென்ஸ், ஒர்க் பர்மிட் போன்றவை கிடைக்கும். இறை வழிபாடு மிகுந்த நற்பலனைத் தரும். 20.11.2006

இந்த மாதம்



ரிஷப ராசி :

கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்கள், ரோஹிணி, மிருகசீரிஷம் 1, 2-ம் பாதங்கள்.

கனிவான குணமும் கலையார்வமும் மிகுந்த ரிஷப ராசி நேயர்களே! நீண்ட கால கனவுகள் நனவாகும் நேரமிது. காதல், கல்யாணத்தில் முடியும். தாய், தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. தொழிற்சாலை, உணவகம், விவசாயம், மருத்துவம் தொடர்புடைய தொழில்புரிவோர் மற்றும் அது சம்பந்தமான கல்வி பயில்வோர் ஏற்றம் அடைவர். தொழில அபிவிருத்தி தொடர்பாக சிலர் வெளிநாடு செல்ல

நேரும். குடும்பத்தில் எல்லா நிலைகளிலும் மகிழ்ச்சி நிலவும். சிலருக்குக் கருணை அடிப்படையில் தந்தை (அ) தாயாரின் வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. 22.11.2006 மாலை முதல் 25.11.2006 காலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.



எப்படி?

பரிகாரம் : தினசரி காலை, மாலை இருவேளையும் காயத்ரி மந்திரம் ஜெபிக்கவும். மகாலக்ஷ்மியை வழிபடவும்.

மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4-ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதங்கள்.

புத்திக்கூர்மையும், விஷயஞானமும் கொண்டு அனைவரையும் அனுசரித்துச் செல்லும் மனோபாவம் கொண்ட மிதுனராசி நேயர்களே! செயல் திறன் மேலோங்கும். பரிசும், பாராட்டும் தேடி வரும். எதிரும் புதிருமான ஒரு விஷயத்தில் அனைவரும் உமக்கு அனுசரணையாக நடந்து கொள்வர். விரோதிகள் பணிந்து விடுவர். மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வெளிநாடு செல்ல வங்கிக் கடன் மற்றும் அரசு வழி ஊக்கத் தொகை கிட்டும். குடும்பத்தில் குதூகலம் நிலவும். பணப்புழக்கத்துக்குப் பஞ்சமில்லை. ஏற்றுமதி - இறக்குமதி வாணிபம் சிறக்கும். கொடுக்கல், வாங்கல் செய்வோர் நற்பயன் பெறுவர். திருமணத் தடை விலகும். எதிர்பாராத நன்மைகள் கிட்டும். 25.11.06 காலை முதல் 27.11.2006 மாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : மஹா விஷ்ணுவை மனமுருக வழிபடவும். விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்க.

கடக ராசி :

புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

கலங்காத மனமும் கடமை தவறாத இயல்பும் கொண்ட கடகராசி நேயர்களே! உமது அன்றாட அலுவல்களில் உறுதியும், உற்சாகமும் தெரியும்.



டாக்டர் முருகடிமை துரைராஜ்

புத்திக்கூர்மையுடன் செயல்பட்டு வெற்றிக்கனியைச் சுவைப்பீர்கள். இசை பயில்வதில், வேறு மொழி கற்பதில் ஆர்வம் மிகும். உமது மகன் (அ) மகள் கல்விச் செலவு கூடும். வீடு, மனை வாங்கு வதில் நிலவிய குழப்ப நிலை அகலும். அரசு வழியில் வர வேண்டிய நிலுவை சிலருக்குக் கணிசமாகக் கிடைக்கும். பெண்கள் மகிழ்வார்கள். தனிக்குடித்தனம் செல்ல நேரும். அரசுக்குச் செலுத்த வேண்டியவர் பாக்கிகளைச் செலுத்தி விடுவது நலம். செய்தொழிலில் மேன்மை கிட்டும். 27.11.2006 மாலை முதல் 29.11.2006 மாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. கொடுக்கல், வாங்கலில் எச் சரிக்கை தேவை.

பரிகாரம் : ஸ்ரீலலிதா பரமேஸ்வரியை வழிபடவும். ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் செய்க.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்.

எந்த நிலையிலும் சுயமரியாதையை விட்டுக் கொடுக்காத சிம்மராசி நேயர் களே! எதிரிகளை எளிதில் வெற்றி கொள் வீர்கள். இறையருள் துணை புரியும். கூட்டாளிகள் மூலம் எதிர்பாராத பிரச் னைகள் உண்டாகும். எனினும் அதனை மிகவும் புத்திக்கூர்மையுடன் சமாளித்து விடுவீர்கள். உத்தியோகம் - தொழில், வாணிபம் எதுவானாலும் அது சிறப்பு டன் விளங்கும். காதலர்கள் திடீர்த் திருமணம் புரிவர். குடும்பத்தில் சரள மான பணப்புழக்கமும் சந்தோஷமும் நிலவும். கடன் தீரும். வழக்கில் எதிர் பாராத திருப்புமுனைகள் உண்டாகும். 2.11.2006 காலை முதல் 4.11.2006 நண்பகல் வரை மற்றும் 29.11.2006 மாலை முதல் மாத இறுதி வரையிலும் சந்திராஷ்டமம். கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போட வேண்டாம்.

பரிகாரம் : தினசரி சூரியநமஸ்காரம் செய்க. பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்க. 'சிவாய நம' என்ற மந்திரத்தை சிந்தை கலங்காது ஜெபிக்க வும்.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4-ம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதங்கள்.

அறிவுபூர்வமாகச் சிந்தித்து அனுபவத் தைக் கொண்டு ஆக்கபூர்வமாகச் செயல்படும் கன்னிராசி நேயர்களே! எதிர்பாராத உதவிகள் தேடி வரும். வீடு (அ) மனை விலைக்கு வாங்க அல்லது லீசுக்குப் பெற வாய்ப்பு உள்ளது. கடன் கணிசமாகக் குறையும். வெளிநாட்டுத் தொடர்பு கிட்டும். சிலர் வெளிநாடு செல்லும் வாய்ப்பு உள்ளது. வருவாய் அதிகரிக்கும். எனினும் அது செய்தொழில் மேம்பாட்டுக்குப் பயன்படும். கணினி, நவீன விஞ்ஞான சாதனங்கள், ஏற்றுமதி இறக்குமதி, பதிப்பகம், ஏஜென்சி போன்ற பிரிவுகளில் தொடர்புடையோர் வெற்றிப் பாதையில் பயணம் செய்வர். கண் சம்பந்தமான சிறு சிறு உபாதைகள் வர வாய்ப்பு உள்ளது. கணவன் மனைவி இடையில் கருத்தொற் றுமை தேவை. மாமனார், மாமியார் ஒத்துழைப்பு உண்டு. 4.11.2006 நண்பகல் முதல் 6.11.2006 நண்பகல் வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : மஹாவிஷ்ணுவை வழிபடுதல் நன்று. குருவருளை நாடுக. குறைவற்ற மகிழ்ச்சி கிட்டும்.

துலாம் ராசி :

சித்திரை 3, 4-ம் பாதங்கள், சுவாதி,



கிட்னி பிரச்னை உள்ளவர்கள் கீரை சாப்பிடவே கூடாது. ஏனெனில், கீரை யில் பொட்டாசியம் அதிக அளவில் உள்ளது. அது கிட்னியைப் பாதிக்கும். மாம்பழமும், வாழைப் பழமும் சாப்பிடக் கூடாது.

- கே. கீதா, பெங்களூர்

ஒரே மாதிரியான வாட்டர் பாட்டில்களுடன் ரயில் பயணம் செய்யும் போது நாம் பயன்படுத்தும் பாட்டில்களில் ஓரிரண்டு ஏலக்காய்த் தோலியைப் போட்டு விட்டால், அடையாளம் கண்டுகொண்டு, மற்றவர்களிடம் நம் பாட்டில் போகாமல் பாதுகாக்கலாம்.

- பி.என். நரசிம்ம மூர்த்தி, மேற்கு மாம்பலம்.



விசாகம் 1, 2, 3-ம் பாதங்கள்.

எதுவரினும் அஞ்சாத இயல்பும், தோல்வி கண்டு துவளாத மனமும் கொண்ட துலாம் ராசி நேயர்களே! கலக்கத்திலிருந்து விடுபடுவீர்கள். கணவன், மனைவி இடையில் நிலவிய சஞ்சலம் தீரும்; சந்தோஷம் பெருகும். வீடு கட்டியும், குடியேற முடியாமல் இருந்தவர்கள் புதிய வீட்டில் குடியேறலாம். அடகு வைத்த பொருள்களை மீட்கலாம். ரியல் எஸ்டேட், சிவில் காண்ட்ராக்டர்கள், ஒப்பனை நிலையங்கள், ஜிம்னாஸ்டிக் கிளப், யோகா கல்வி மையங்கள் தொழில்நுட்பப் பயிலகங்கள் தொடர்புடையோர் மிகுந்த நன்மை பெறுவர். முதலீடு பெருகும். புதிய ஒப்பந்தம் உருவாகும். சிலர் வெளிநாடுகளுக்குச் செல்வர். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாயகம் திரும்பவும் இடம் உண்டு. புதிய வாகனம் வாங்க இயலும். 6.11.2006 நண்பகல் முதல் 8.11.2006 மாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. குறிப்பாக கடமையில் பொறுப்பாக இருக்கவும்.

பரிகாரம் : மஹாலக்ஷ்மியை வழிபடவும். தினசரி காலை, மாலை நெய் விளக்கு ஏற்றவும்.

விருச்சிக ராசி :

விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை

வெற்றி என்னும் இலக்கை முன் வைத்து வீரத்துடனும், விவேகத்துடனும் அயராது உழைக்கும் ஆற்றல் கொண்ட விருச்சிக ராசி நேயர்களே! வெற்றி மீது வெற்றி வந்து சேரும். விரோதிகள் ஓடி ஒளிவர். மனைவியின் விருப்பத்தைச் செயல்படுத்துவீர்கள். சிலருக்கு மனைவியின் சேமிப்பு தொழில் முதலீடாக அமைய வாய்ப்பு உள்ளது. உமது மகன் (அ) மகள் திருமணம் இனிதே நடக்கும். வரவேண்டிய பாக்கிகள் வசூல் ஆகும். செய்தொழிலில் திட்டமிட்டு, குழப்பமின்றி புத்திக்கூர்மையுடன் செயல்படுதல் நன்று. பெண்களுக்குத் தாய் வீட்டு உதவியும் ஒத்தாசையும் கிட்டும். 8.11.06 மாலை முதல் 10.11.06 முன்னிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. குறிப்பாக புதிய முதலீடுகள் செய்வதில் முன்னெச்சரிக்கை தேவை.

பரிகாரம் : ஸ்ரீதேவி கருமாரியம்மனை வழிபடவும். செவ்வாய்க் கிழமையில் கனி மாலை சாத்தி, குங்கும அர்ச்சனை செய்க.

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்

தளராத மனமும், தன்மானம் இழக்காத குணமும் கொண்ட தனுசு ராசி நேயர்களே! எதிர்பாராத நற்செய்திகள் கிடைக்கும். பூர்வீகம் விட்டு வெளியூருக்குச் சென்றவர்கள் சொந்த ஊர் திரும்புவர். பூர்வீகச் சொத்து கைவசம் ஆகும். சகோதர வழியில் அல்லல் அகலும். உமது நீண்ட காலக் கனவுகள் நனவாகும். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நலம். வாய்மொழி உத்திரவாதங்களை நிறைவேற்றுவீர்கள். அரசு வழி அனுகூலம் அடைவதில் சற்று அலைக்கழிப்புகள் நிலவும். நேரடியாகக் கவனம் செலுத்துவது நலம். திருமணத் தடை, புத்திர பாக்யத் தடை விலகும். 8.11.2006 மாலை முதல் 10.11.2006 முன்னிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் தர வேண்டாம்.

பரிகாரம் : ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியை மஞ்சள் வண்ண மலர்களால் அர்ச்சித்து



கைகளில் மருதாணி வைத்துக் கொள்வதற்கு முன்பு எலுமிச்சம் பழச் சாற்றை தடவிக் கொண்டு மருதாணியை வைத்துக் கொண்டால் மிக நன்றாகச் சிவக்கும்.

- கே. ராஜேஸ்வரி, மருதாடு.

வணங்கவும். "ஓம் நமோ தக்ஷிணா மூர்த்தியே நம!" என ஜெபிக்கவும்.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4-ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதங்கள்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத குணமுடைய மகர ராசி நேயர்களே! எதிர்பாராத சுபச் செலவுகள் வரும். மகன் (அ) மகள் திருமணம் கூடி வரும். பேத்தி புஷ்பவதி ஆகலாம். வீடு, மனை என ஸ்திர சொத்துக்கள் வாங்க வாய்ப்பு உண்டு. வைத்ததை மறந்து தேடுவீர்கள். பிரயாணத்தில் கவனம் தேவை. உணவு மற்றும் மருந்து போன்றவற்றின் மூலம் அலர்ஜி உண்டாக வாய்ப்புள்ளது. கவனமாகக் கையாளவும். ஷேர் மார்க்கெட், சிட்டு நிறுவனம், ரியல் எஸ்டேட், ஃபார்மஸி, மேன்பவர் கன்ஸல்டன்ஸி போன்ற பிரிவுகளில் தொடர்புடையோர் மிகுந்த அனுகூலம் அடைவர். 10.11.2006 முன்னிரவு முதல் 13.11.2006 காலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : வெங்கடாஜலபதியை வழிபடவும். தினசரி காலையில் வெங்கடேச சுப்ரபாதம் கேட்பது நன்று.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4-ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்கள்.

ஊக்கத்துடன் செயல்படவும். ஆக்கபூர்வமாகச் சிந்திக்கவும் கூடிய கும்பராசி நேயர்களே! உத்தியோக மாற்றம் கிட்டும். முதலீடுகள் பெருகும். சகோதர வழியில் முன்னேற்றம் கிட்டும். வழக்கில் திருப்புமுனை உண்டாகும். கடன் தீரும். கவலைகள் கதிர்முகம் கண்ட பனி போல் விலகும். அடகு வைத்த வீடு, மனை, பூமி மற்றும் ஆபரணங்களை வட்டியும் முதலுமாகக் கட்டித் திருப்புவீர்கள். கணவன், மனைவி இடையில் அவ்வப்போது ஊடலும் கூடலும் வந்தவண்ணம் இருப்பது சகஜமாகி விடும். வாக்கு வன்மையினால் தன சேர்க்கை உண்டாகும். மனசாந்தியும் மகிழ்ச்சியும் பெறுவர். புத்திர பாக்கியம் கிட்டும். 13.11.2006 காலை முதல் 15.11.2006 முன்னிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம்: ஐய்யப்பன் (அ) ஐய்யனாரை வழிபடவும். அன்றாடம் விநாயகப் பெருமானை வணங்கிப் பணிகளைத் துவங்கவும்.

மீன ராசி :

பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

மனதில் பட்டதை அப்படியே செயல்படுத்தும் இயல்புடைய மீன ராசி நேயர்களே! வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் என நிகழும். போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். இறைவழி பிரார்த்தனைகள் கைமேல் பலன் தரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். வழக்கில் எதிர்பாராத திருப்புமுனை உண்டாகும். மாமன் மைத்துனர் உதவி புரிவர். வளமே கூடும். ஷேர் மார்க்கெட், மியூச்சுவல் ஃபண்ட், இன்சூரன்ஸ், கல்வி நிறுவனங்கள், ஏஜென்சி இனங்கள், ரியல் எஸ்டேட், சிவில் கான்ட்ராக்ட் தொடர்புடையோர் மிகுந்த நன்மை அடைவர். 15.11.2006 முன்னிரவு முதல் 18.11.2006 காலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. குறிப்பாக - கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும்.

பரிகாரம் : ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை நெய் தீபம் ஏற்றி மஞ்சள் வண்ண மலர்களால் அர்ச்சித்து வணங்கவும்.



டபுள் ரீஃபைண்ட்
தூய்மையின் சவால்
Parry's
Pure
Refined Sugar
Sugar makers since 1842
நீங்களே பாருங்கள்
100% தெளிவின் ஆதாரம்
100% தூய்மையின் ஆதாரம்
Parry's
Pure



நேர்த்திக்கடன்!

ஒரு வாரமாக குழந்தைக்குக் காய்ச்சல். துவண்டுக் கிடந்தான். எத்தனைபோ டாக்டர்கள்; ஆன்டிபயாடிக்குகள். குணம் காணவில்லை. குலதெய்வத்துக்கு வேண்டிக் கொண்டு மஞ்சள் துணியில் ஒரு ரூபாயை முடிந்து வைத்தாள் சுமதி. இரண்டு நாளில் ஜுரம் தணிந்து குழந்தை பழையபடி விளையாட ஆரம்பித்தான்.

சுமதியும், அவளது கணவனும் குழந்தைக்கு மொட்டை அடித்து நேர்த்திக் கடனை நிறைவேற்ற கோயிலுக்குச் சென்ற போது, அங்கு வந்து போகும் பக்தர்கள் கண்ட இடத்தில் அழுக்கு செய்தும், சோற்றுப் பருக்கைகளை வீசியும், பிளாஸ்டிக் கவர்களைக் காற்றில் பறக்க விட்டும் கோயிலை மாசுபடுத்துவதைப் பார்த்தனர்.

இனிமேல் கடவுளுக்கு நேர்ந்து கொள்வதென்றால், குடும்பத்தோடு வந்து உன் கோயிலை சுத்தம் செய்கிறோம் என்று நேர்ந்து கொள்வதென்று அவர்கள் தீர்மானித்தனர்.


- உமா கண்ணன், ஒசூர்.

படிப்பு தரும் ரத்தினக்கல் இருக்கா?









★ **யா**ர் வேண்டுமானாலும் நவரத்தின மோதிரம் அணியலாமா?

- கு. செல்வகுமார், பொள்ளாச்சி.

நவரத்தினக் கற்கள் பதித்த மோதிரம், அனைவருக்கும் பொருந்தாது. என்னுடைய ஆராய்ச்சியைப் பொறுத்தவரை, 90% மக்களுக்கு நவரத்தின மோதிரம் பயன் தருவதில்லை.

ஒருவருடைய பிறப்பு ஜாதகத்தில் கிரகங்களின் நிலை நன்றாக இருக்குமேயானால், அந்தக் கிரகங்கள் அனைத்துக்கும் நவரத்தினக் கற்கள் போட்டு சக்தி கொடுக்கும்போது, அந்த ஜாதகர் மேலும் உயர்வு பெற்று, பல நன்மைகளை அடைகிறார். இதே, ஒருவருடைய ஜாதகத்தில் 3 கிரகங்கள் மட்டுமே நன்மையான இடத்தில் இருந்து, ஏனைய கிரகங்கள் சரியில்லை என்றால், அந்தந்த நிலைக்குத் தக்கவாறு ரத்தினக் கற்களை ஆராய்ந்து அணிய வேண்டும். இல்லையென்றால், கெடுபலனையே கொடுக்கும்.

நவரத்தின மோதிரம் அணிய விருப்பம் உள்ளவர்கள், தங்களுடைய ஜாதகத்தை முழுமையாக ஆராய்ந்து, எந்தெந்த கிரகத்துக்கு எவ்வளவு டோஸேஜ் தர வேண்டும் என்று துல்லியமாகத் தீர்மானித்து, அதன்படி பதித்து, அணிந்தால் மட்டுமே முழுமையான பலன் கிடைக்கும்.

ரத்தினங்கள் விலை உயர்ந்தவை. அவ்வாறு இருக்கும் போது, உங்களுக்குப் பயன்படாத ரத்தினக் கற்களை அதிக விலை கொடுத்து வாங்கி அவதிப்படுவானேன்? தேவையான ரத்தினங்களை மட்டுமே அணிந்து வளம்பெறுங்கள்.

• பொதுவாக மனநிம்மதிக்கு என ஏதேனும் பிரத்யேக ரத்தினங்கள் உண்டா?

- எஸ். ஜெயலக்ஷ்மி, நாமக்கல்.

இருக்கிறதே! வயலட் நிறத்தில் இருக்கும் அமிதிஸ்ட் மன அமைதியைத் தரும் ரத்தினம். இதை, நமது புனிதப் பெருமகன், போப் ஆண்டவரே அணிந்திருக்கிறார். அவரது கையால் ஆசி வழங்கும்போது, அந்த செவ்வந்தி நிறக் கல் மேலும் சக்தியைத் தூண்டி, மன அமைதியைத் தருகிறது.

ஒருவரது லக்னம், ராசி, தசாபுத்தி, கோச்சாரம் போன்றவற்றை ஆராய்ந்து அதற்கேற்ப 'அமிதிஸ்ட்' இரத்தினத்தை, சுத்திகரிப்பு செய்து அணியும் போது கண்டிப்பாக மன அமைதி கிடைக்கும்.

• குழந்தைகளுக்கு இரத்தினங்களின் உதவியால் நன்றாகப் படிப்பு வர வழிகள் உள்ளனவா?

- கே. சுந்தரம், சென்னை.

ஜாதகத்தில் புதனின் நிலையைப் பார்த்து புதனுக்குரிய இரத்தினமான மரகதப் பச்சையைத் தேவையான அளவில் தங்கம் அல்லது வெள்ளியில் முறைப்படி பதிக்கப் பெற்று சுத்திகரித்த பின் அணியும்பொழுது நிச்சயமான பலன் கிடைக்கும். சிலருக்கு புதன் நன்றாக இருப்பினும் கூட ராகு, கேது போன்ற தடை இருப்பின் அதற்கான இரத்தினங்களை அணிந்து அதனுடைய பூஜைகளைச் செய்தால் கண்டிப்பாகக் கல்வியில் சிறப்பார்கள்.

• எனது மகன் உடல்நலம் சீராகப் பரிகாரம் கூறவும்.

- ரோஷன், நெய்வேலி.

உங்கள் மகன் பூரம் நட்சத்திரம், சிம்ம ராசி. உங்களது மகனுக்கு எட்டு வயதில் நிவர்த்தி கிடைக்கும். ஒருமுறை ராகு, கேது ஸ்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்யவும். ராகு, கேது வழி விட்டால்தான் நன்மை கிடைக்கும். நீலம் மற்றும் பவளத்தைத் தனித் தனியாக டாலர் போன்று வெள்ளியில் பதிக்கப் பெற்று முறைப்படி சுத்திகரிப்பு செய்தபின் சனிக்கிழமை காலை 6.45க்குள் உங்கள் மகனுக்கு அணிவிக்கவும். உடல்ரீதியான முன்னேற்றம் உடனே தெரியும். நன்றாகப் படிப்பான். நல்ல நிலைக்கு வருவான்.

• கால சர்ப்பதோஷம் உள்ள ஜாதகரான என் மகனது விவரங்களை அனுப்பியுள்ளேன். அதற்கான பரிகாரம் சொல்லவும்.

- சகுந்தலா, கர்நாடகா.

பூராடம் நட்சத்திரம், தனுசு ராசி, கடக லக்னம். முழுமையான கால சர்ப்ப ஜாதகம். இதற்கான பரிகாரங்கள் 25 வயதுக்கு முன்னர் செய்திருந்தால் சுலபமான வழி கிடைத்திருக்கும். இப்பொழுது தங்கள் மகனுக்கு வயது 33. உங்களது கடிதத்தில் மூன்று முறை பரிகாரம் செய்ததாகக் கூறியுள்ளீர்கள். இதைச் செய்ய



ஜெம்மாலஜிஸ்ட் கல்பனா ஸ்ரீகாந்த் பதில்கள்...

வேண்டிய முறையைப் பற்றி நான் கூறுகிறேன். அவ்வாறு செய்திருக்கிறீர்களா என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும். ராகு திசைக்கு முன்னதாகச் செய்திருக்கிறீர்களா? ஜென்ம நட்சத்திர நாளில் செய்தீர்களா? செய்த காலம் ராகு காலம்தானா? முறையான தானதர்மங்கள் பரிகாரம் செய்தபின் கொடுக்கப்பட்டுள்ளதா இதெல்லாம் செய்தீர்களா எனத் தெரியவில்லை.

உங்கள் மகன் ஒன்றரை வருடங்களுக்கு ஒருமுறை ராகு-கேது பரிகாரம் செய்து கொண்டே இருத்தல் அவசியம். சூரியன், சந்திரன், செவ்வாய் நன்றாக அமைந்துள்ளது. ஆனால் குரு திருப்திகரமான இடத்தில் இல்லை. இவருக்கு கோமேதகம், வைடூரியம் சேர்த்து இடது கை மோதிர விரலில் தங்கம் அல்லது வெள்ளியில் அணிந்த பின் கனக புஷ்பராகம் வலது கை ஆள்காட்டி விரலில் தங்கத்தில் மட்டுமே அணிய வேண்டும். அனைத்துத் தடைகளும் நீங்கி நன்மையே நடக்கும்.

• நான் வியாழக்கிழமை தோறும் விஜய் டீ.வி.யில் வரும், உங்கள் நிகழ்ச்சியைத் தவறாமல் பார்க்கிறேன். சமீபத்தில் 'டோஸேஜ்' பற்றிக் கூறினீர்கள். அப்படி என்றால் என்ன?

- மீனா ராஜேந்திரன், சேலம் - 5.

ஜாதகத்தில் கிரகங்களின் நிலைகளை ஆராய்ந்து எந்த கிரகத்துக்கு இரத்தினம் கொடுக்கிறோமோ அந்த கிரகத்துக்கு எவ்வளவு பவர் இருக்க வேண்டும் என்பதைக் கணக்கிட்டு அந்தச் சக்திக்கு ஏற்ற அளவுக்கு இரத்தினங்கள் கொடுப்பதைத்தான் 'டோஸேஜ்' என்கிறோம்.

உதாரணமாக ஏழரை சனி மத்திம வயதில் ஒருவருக்கு வரும்பொழுது அந்த சனி தொழில் ஸ்தானத்தில் இருந்தால் அந்தத் தொழில் ஸ்தானம் மேஷத்தில் இருந்தால் அதிக டோஸேஜ் கொடுக்க வேண்டும். ஆனால் இதே துலா இராசியில் இருந்தால் குறைவான டோஸேஜ் எடுத்து அணியும்போதே எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.

• இரத்தினங்களை மோதிரமாகத்தான் அணியணுமா?

- கே. வி. மகேஷ், பெங்களூர்.

எந்த ஆபரணமாகவும் அணியலாம். கம்மலாக அணியும் பொழுது இரண்டு கற்கள் தேவைப்படுகின்றன. மேலும் ஜாதகரீதியாகப் பார்த்து அணியும் பொழுது அந்தக் கம்மலை அடிக்கடி மாற்ற முடியாது. மூக்குத்தி என்பதும் மிகவும் சிறிய கல்லை வைத்தே தயாரிக்க முடியும். அவ்வளவு சிறிய கல்லினால் ஜாதகருக்கு பலன் ஏற்படுமா என்பது கேள்விக்குறிதான். வைரம் மட்டும்தான் எவ்வளவு சிறிய கல்லாக அணிந்தாலும் பலன் தரும். இதையெல்லாம் பார்க்கும் பொழுது சாலச்சிறந்தது மோதிரம் மட்டுமே!

இரத்தினங்கள் இயங்கப் பயன்படும் சூரிய ஒளி, காற்று, நீர், வியர்வை இவை அனைத்தும் முழுமையாக விரல்களுக்கு வந்து அமைவதால் மோதிரமாக அணிவதே சிறந்தது.



ஃப்ரிட்ஜின் உட்புறம் இருக்கும் ரப்பர் லைனிங் பழசாகி விட்டதா என்று சோதிக்க, ஒரு நியூஸ் பேப்பரை கதவுக்கு இடையில் கொடுத்து மூடி விடுங்கள். இப்போது பேப்பரை வெளியில் இழுக்க வேண்டும். சுலபமாக வந்தால் ரப்பரை மாற்றும் நேரம் வந்து விட்டது என்று அர்த்தம்.

- விஜயா ஸ்ரீதரன், சென்னை.



பிடிச்சிருக்கு!

"என் பேரு சங்கர். இன்போசிஸ்ல வேலை. சம்பளம் 25 வரும். என்னைப் பொறுத்தவரை மனைவின்னா எனக்குக் கட்டுப்பட்டு இருக்கணும்னு நினைக்கிறேன். இது என் கேரக்டர். பிடிச்சிருந்தா சொல்லுங்க" என்றான் லதாவைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை.

"உங்ககிட்ட அடிமையாயிருக்க நான் என்ன மெஷினா? எனக்கும் உணர்ச்சிகள் இருக்கு. கிளம்புங்க ப்ளீஸ்" என்றாள் லதா.

அடுத்த நாள், வேறொரு மாப்பிள்ளை, வேறொரு தனியிடம்.

'என் பேரு சுதாகர். இன்போசிஸ்ல வேலை. சம்பளம் 25 வரும். என்னைப் பொறுத்தவரை மனைவின்னா எனக்கு அடங்கித்தான் இருக்கணும். இதுதான் என் கேரக்டர்."

"நீங்க அன்பாயிருந்தா அதுவே போதும்."

லதாவின் அம்மாவுக்குக் குழப்பம். இவள் ஏன் இப்படி நடந்து கொள்கிறாள் என்று.

'அம்மா! இவர் வேலை செய்யறது அமெரிக்கால இருக்குற இன்போசிஸ்லமா. 25 ங்கறது டாலர் கணக்கு' என்றாள் லதா.

- எஸ். கவிதா, திருவண்ணாமலை.

இம்மாத இல்லத்தரசி

பொருள் : சுவையான சூப்

முதல் பரிசு :
டேபிள் டாப் வெட் கிரைண்டர்
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :
ரமா ஜெயராம், திருச்சி - 18.

வடிகஞ்சி சுவை சூப்

தேவையான பொருள்கள் :

சாதம் வடித்த கஞ்சி - 2 தம்ளர்,
நன்கு கடைந்த மோர் - 1 தம்ளர்,
வெள்ளரிக்காய் - 1,
கீரைத் தண்டு - முளைக்கீரைத் தண்டு அல்லது தண்டுக் கீரையில் சிறிது, தோலுரித்துச் சின்னத் துண்டங்களாக்கி, வேகவைத்தது - ¼ கப்,
இஞ்சி - 1 துண்டு பச்சை மிளகாய் - 2,
உப்பு - தேவையான அளவு,
கறிவேப்பிலை, கொத்துமல்லி, மிளகுத் தூள் - விருப்பப்பட்டால்.

செய்முறை :

கீரைத்தண்டுத் துண்டங்களை மைக்ரோவேவ் ஓவனில் அல்லது சாதாரணமாக, வேகவைக்கவும். அந்தத் தண்ணீரை வேஸ்ட் செய்யாமல் சூப்பில் சேர்க்கலாம்.

வெள்ளரிக்காயைத் தோல் சீவி, துண்டங்களாக்கி, இஞ்சி, பச்சை மிளகாய் சேர்த்து வடித்த கஞ்சி, மோருடன், உப்பு சேர்த்துக் கலக்கவும். கீரைத்தண்டு வேக வைத்ததைச் சேர்க்கவும். கறிவேப்பிலை, கொத்துமல்லியைப் பொடியாக அரிந்து போடவும். விரும்பினால், மிளகுத் தூள் சேர்த்துப் பரிமாறவும். கோடையில், ஃப்ரிட்ஜில் வைத்தும் பரிமாறலாம்.

பி.கு : கஞ்சிக்கு எங்கு போவது என்று (இந்நாளில் குக்கர் வைப்பதால்) நினைப்பவர்கள் சாதம் 2 டேபிள் ஸ்பூன் எடுத்து, குட்டி ஜாரில் அரைத்துத் தண்ணீர் விட்டுச் சேர்க்கலாம்.

- ரமா ஜெயராம்,
திருச்சி- 19.

இரண்டாம் பரிசு
ரூ. 300/-

மெமரி மூலிகை சூப்

தேவையான பொருள்கள் :
வல்லாரை அல்லது அகத்திக்கீரை சுத்தம் செய்தது - 1கப்,
கரிசலாங்கண்ணி அல்லது அரைக்கீரை - 1 கப்,
புளிச்சக் கீரை - 1 கப்,
பழுத்த தக்காளி வடிகட்டிய சாறு - 1 கப்,
கண்டத்திப்பிலி, அரிசித் திப்பிலி, சுக்கு, ஏலம், இலவங்கப்பட்டை, பூண்டு, மிளகு, சீரகம் - கொஞ்சம், கொஞ்சம்
மிளகாய்த் தூள் - ½ ஸ்பூன்,
உப்பு கொஞ்சம்,
சர்க்கரை - 4 ஸ்பூன்,
ஆரஞ்சு சாறு அல்லது அன்னாசிப் பழச்சாறு - 1 கப்,
மிகப் பொடியாக நறுக்கிய கொத்துமல்லி - கொஞ்சம்

செய்முறை : கண்டத்திப்பிலி, அரிசி திப்பிலி, சுக்கு, ஏலம், இலவங்கப்பட்டை, பூண்டு, மிளகு, சீரகம் இவற்றைக் கொதிக்கும் வாணலியில் ஒன்றாகப் போட்டு சூடு ஏறியதும் வறுத்து, வாசனை வந்ததும் இறக்கி அம்மி அல்லது மிக்ஸியில் நறநற வென்று பொடிக்கவும்.

மெல்லிய வெள்ளைத் துணியில் சுத்தம் செய்த வல்லாரைக் கீரை, கரிசலாங்கண்ணி, புளிச்சக் கீரையைக் கொட்டி, அதன் மேல் மூலிகைச் சாமான் களைப் (பொடித்தது) போட்டுத் துணியை



'இம்மாத இல்லத்தரசி' போட்டிக்கு நடுவர்களாக இருந்து பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்த சிட்லபாக்கம் 'சர்வமங்களா நகர் மாதர் சங்கம்' தோழியருக்கு நன்றி!



* என். விசாலாட்சி



* கௌரி

நன்கு முடிச்சுக் கட்டவும். வாய் அகலமான பாத்திரத்தில் மூன்று தம்ளர் தண்ணீர் விட்டுக் கொதிக்க விட்டு, கட்டி வைத்த மூலிகை முடிச்சைப் போட்டு நன்கு கொதித்ததும் மத்தால் (துணி கிழியாத அளவு இலேசாக) மூலிகை மூட்டையை இடிப்பது போல் செய்யவும். இதனால் மூலிகைச் சாறு தண்ணீரில் கெட்டியாக இறங்கும். பிறகு மூட்டையை அழுத்தி (கரண்டியால்) வெளியே எடுத்து விடவும். இப்போது வெறும் மூலிகைச் சாறு மட்டும் பாத்திரத்தில் கொதிக்கும். அதில் தக்காளிச் சாறு, உப்பு, சர்க்கரை, மிளகாய்த் தூள் சேர்த்து 5 நிமிடங்கள் கொதித்ததும் கீழே இறக்கி அன்னாசி பழச்சாறு ஊற்றி கொத்துமல்லித் தூவினால் சூப்பர் ருசியில் 'மெம்மரி மூலிகை சூப்' கமகம மணத்துடன் தயார்.

வல்லாரை போன்ற மூலிகை கீரையுடன் மூலிகைப் பொருட்களும் சேர்வதால் சூப்பின் ருசியில் கசப்பு, புளிப்பு, உப்பு, காரம், சர்க்கரை, துவர்ப்பு ருசியில் இது வரை நிச்சயம் குடித்திருக்க முடியாத அருமையான சுவையை அனுபவிப்பீர்கள். வித்தியாசமான 'மெமரி மூலிகை சூப்' மூளையின் ஆற்றலைத் தூண்டுவதுடன் மழைக்காலத்தில் சூடாகவும் எந்த வயதினரும் அருந்தி சுவைக்கும் புதுமை சூப் இதுவே. சர்க்கரை நோயாளியும் அருந்தலாம்.

- சாந்தா நாராயணன், விழுப்புரம்.

மூன்றாம் பரிசு ரூ. 200/-

பார்லி பேபிகார்ன் சூப்

தேவையான பொருள்கள் :

புத்தம் புதிய இளசான சோளம் - 1 கிண்ணம்

ஊறவைத்த பார்லி - 1½ மேஜைக்கரண்டி.

பாசிப் பருப்பு - 1½ மேஜைக்கரண்டி (ஊறவைத்தது)

பூண்டு - 3 பல்,



குழந்தைகளை மடியில் வைத்திருந்தால் உங்கள் நைட்டியிலுள்ள ஜிப், குழந்தைகளின் கண் இமையில் பட்டு ஆபத்து ஏற்படாமல் கவனமுடன் இருக்கவும். மேலும் ஜிப்பின் மேல் ஒரு ஸேப்டி பின்னையும் குத்திக் கொள்ளுங்கள். பேச்சு சுவாரசியத்திலும், டிவி பார்க்கும் போதும் ஜிப்பை இழுத்து விளையாடி விட்டால் மானம் போய் விடும்! எச்சரிக்கையுடன் இருங்கள்.

- ஜே. நாகராஜன், சிதம்பரம்.

**விபூதியைத் தண்ணீரில்
குழைத்து மூக்கில் தடவினால்
தொடர்ந்து வரும் தும்மல்
நின்று விடும்.**
**- எஸ். கண்மணி,
புதுவை - 7.**



கேரட் துண்டுகளாக நறுக்கியது - 1 மேஜைக்கரண்டி,
வெங்காயத் தாள் - ஒன்று,
க்ரீம் - 1 ஸ்பூன்,
தக்காளி பொடியாக அரிந்தது - ½ கப்,
உப்பு, மிளகுத் தூள் - தேவையான அளவு,
எண்ணெய் - 1 தேக்கரண்டி,
கொத்துமல்லி (பொடியாக நறுக்கியது) - ¼ கப்

செய்முறை :

வெங்காயத்தாளை வெள்ளை மற்றும் பச்சைப் பகுதிகளைத் தனித்தனியாக நறுக்கி வைக்க வேண்டும். பூண்டுப் பற்களைப் பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். ஊறவைத்த பார்லியிலிருந்து தண்ணீரை வடித்துக் கொள்ள வேண்டும். பிரஷர் குக்கரில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் பூண்டு மற்றும் வெங்காயத் தாளின் வெளிப்பகுதியைப் போட்டு வதக்குங்கள். இலேசாகப் பழுப்பு நிறமானதும் பார்லி, பாசிப் பருப்பு, பேபிகார்ன், கேரட், உப்பு சேர்த்து 5 கப் தண்ணீர் சேர்த்து 3 விசில் வரும் வரை வேக விடுங்கள். இறக்கி வைத்து சூடு ஆறியதும் வெங்காயத்தாளின் பச்சைப் பகுதி, தக்காளி, கொத்துமல்லி மற்றும் மிளகுத் தூள் சேர்த்து மீண்டும் ஒரு கொதி கொதிக்க விடுங்கள். இறக்கி வைத்து ஒரு ஸ்பூன் க்ரீம் கலந்து சூடாகப் பரிமாறுங்கள். விருப்பப்பட்டால் பச்சையான பேபிகார்ன்களை சூப் மேலாகத் தூவியும் குடிக்கலாம். இதுவே பார்லி பேபிகார்ன் சூப்! குடிக்க சுவையாக இருக்கும்.

**- பி. கௌரி பாலசுப்ரமணியன்,
சென்னை - 99.**

ஆறுதல் பரிசு ரூ. 100/-

எள்ளுப் பொடி சூப்

தேவையான பொருள்கள் :

முருங்கை இலை - 1 கப்,
தக்காளி நன்றாக பழுத்தது - 1,
பூண்டு - 4 பல்,
வறுத்த வேர்க் கடலைப் பொடி - 1 டீஸ்பூன்,
வறுத்த எள் பொடி - 1 டீஸ்பூன்,
பிரட் தூள் - 1 டீஸ்பூன்,
மிளகுத் தூள் - ½ டீஸ்பூன்,
தேவையான அளவு உப்பு.

செய்முறை :

ஒரு பாத்திரத்தில் 2 கப் அளவு தண்ணீர் விட்டுக் கொதிக்க விடவும். கொதி வந்ததும் கீரையைக் கொட்டி

சிறுநீரகக் கல் கரைய தினமும் இரண்டு பேரிக்காயை சாப்பிட்டு வரவும். அல்லது காலை மாலை இரண்டு வேளையும் இரண்டு துண்டு அன்னாசிப்பழம் சாப்பிடவும்.

- கே. கீதா, பெங்களூர்.





நீச்சல் குளத்திலிருக்கும் நீரைச் சுத்தம் செய்ய, குளோரின் எனும் ரசாயனம் சேர்க்கப்படுகிறது. இது சருமத்தை வறண்டு போகச் செய்யும் தன்மை கொண்டது. தண்ணீரில் இறங்கும் முன் உடல் முழுவதும் தேங்காய் எண்ணெயைத் தடவிக் கொண்டால், சருமம் பாதிப்பு அடையாது.

- எச். ரியாஜ் சுல்த்தானா, கீழக்கரை.

மூன்று நிமிடங்கள் கொதிக்க வைக்கவும். அதில் பூண்டைத் தட்டிப் போடவும். அதற்குள் தக்காளியை நன்றாகக் கையால் பிசைந்து எள் பொடி, கடலைப் பொடி, உப்பு, மிளகு கலந்து அதில் கீரை வேக வைத்த தண்ணீரைச் சூடாக வடித்து நன்றாகக் கரண்டியால் கலக்கி கடைசியாக பிரட் தூள் போட்டுப் பரிமாறவும். ஐந்து நிமிடங்களில் தயாரிக்கக்கூடிய எளிமையான சுவையான சூப்.

பின்குறிப்பு : சிறுகீரை, தண்டுக்கீரை, முளைக்கீரை, அரைக்கீரை ஆகியவற்றை மசியலுக்கு வேகவைக்கும்போது அந்த நீரை வீணாக்காமல், தக்காளி, உப்பு, மிளகு கலந்தும் சூப் தயாரிக்கலாம். சில சமயங்களில் கீரைகளில் பூச்சி இருந்தால் கீரைகளின் தண்டுகளைப் பயன்படுத்தியும் தயாரிக்கலாம். எல்லா வயதினருக்கும் ஏற்ற எளிமையான சூப்.

- என். வளர்மதி, தர்மபுரி - 5.

சூடாயிருக்கும் தவாவில் கொஞ்சம் மோர் விட்டு வைத்து விடுங்க. ஆறிய பிறகு தேய்த்தால், பிசுக்குப் போய் விடும்.

- ஹேமப்ரியா, சென்னை - 87.



ஆறுதல் பரிசு ரூ. 100/-

கிரீன் கிராம் சூப்

தேவையான பொருள்கள் :

பச்சைப் பயறு - 100 கிராம்,
கொள்ளு - 50 கிராம்,
சின்ன வெங்காயம் - சிறிது,
இஞ்சி, பூண்டு விழுது - சிறிது,
மிளகு - 10 கிராம்,
நெய் - சிறிது,
உப்பு - தேவைக்கு ஏற்ப.

செய்முறை :

பச்சைப் பயிறையும், கொள்ளையும் முதல் நாள் இரவு ஊறவைக்கவும். தண்ணீர் இல்லாமல் வடிகட்டவும். சிறிது நெய்யை விட்டு 5 நிமிடங்கள் வதக்கவும். வதங்கியபின் குக்கரில் போடவும். அரிந்த வெங்காயம், இஞ்சி, பூண்டு விழுது மிளகை இரண்டாக உடைத்துப் போட்டு தண்ணீர் பாதியளவு விடவும். குக்கரில் 7 அல்லது 8 விசில் விடவும். பிறகு குக்கரைத் திறந்தால் மணம் வீசும். பச்சைப் பயறு, சத்து தரும். கொள்ளு கொழுப்பைக் குறைக்கும்.

- என். விசாலாக்ஷி,
தஞ்சாவூர்.

பென்சில் தயாரிப்பாளர் ஒருவர் "நீ ஐந்து விஷயங்களை ஞாபகம் வைத்துக் கொண்டால் மேன்மையான பென்சிலாக மாறலாம்" என்று பென்சிலிடம் கூறிவிட்டு, அதைப் பெட்டியில் அடுக்கினார்.

கூர்மையான பென்சிலாக இருங்க!

1. பல பயனுள்ள விஷயங்களை எழுதலாம்; ஆனால் பிறர் கையில் இருப்பதற்கு விருப்பத்துடன் அனுமதியுங்கள்.

2. அவ்வப்போது கூர்மைப் படுத்துவார்கள். வலி எடுக்கும். ஆனால் அது மேலும் நல்ல பென்சிலாக மாறுவதற்கு மிகவும் தேவை.


3. சில சமயம் நிகழும் ஒருசில தப்புகளை அழித்து திருத்தி விடலாம்.

4. உனக்குள்ளிருக்கும் உட்பகுதி (காரியம்) மிகவும் முக்கியம்.

5. எந்த இடத்திலும் உன்னுடைய எழுத்தைப் பதியவைக்கலாம். பக்கத்தின் நிலைமை எவ்விதமிருந்தாலும், தொடர்ந்து எழுதிக் கொண்டேயிருக்க வேண்டும்.

பென்சில் மேலே சொன்ன 'அறிவுரை'யை மனதில் ஏற்று, தனது முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டு பெட்டிக்குள் சென்றது.

சரி, இப்போது, உங்களை அந்தப் பென்சிலாக நினைத்துக் கொள்ளுங்களேன்:



1. உங்களை இறைவனின் கருவியாக நினைத்துக் கொண்டு, சக மனிதர்கள் அணுகும்போது, இயன்ற அளவு உதவுங்கள்.

2. அவ்வப்போது தோன்றுகின்ற சில பிரச்னைகளினால் வலி எழக்கூடும். ஆனால் அவற்றை சவாலாகவே ஏற்றுக் கொண்டு, மேலும் வலிமையுள்ள வராக மாறுங்கள்.

3. ஏதாவது தவறு நேர்ந்தால், திருத்திக் கொள்ளுங்கள்.

4. உங்கள் உள்ளிருக்கும் சக்தி எப்படி இருக்கிறதோ அது போலத்தான் நீங்கள் மாறுவீர்கள்; கவனம்!

5. என்ன செய்தாலும் உங்கள் முத்திரையைப் பதித்து விடுங்கள்; எந்த மாற்றம் விளைந்தாலும், கடமையைச் செய்து கொண்டேயிருங்கள்.

(ஒரு சிறப்பு நிபுணர் கிளினிக்கில் பார்த்தது)

- வாதூலன்

உங்களுக்கே சொந்தமான ஒரு தனி வீடு (வில்லா) அல்லது அப்பார்ட்மென்டில் பெருமளவு வசதிகளுடன் பெருமையுடன் வாழ, இதோ இப்போது மற்றொரு மகத்தான வாய்ப்பை வழங்குகிறது ஸ்ரீவத்ஸா.



எட்டு ஏக்கர் நிலப்பரப்பில் அமையவிருக்கும் அருமையான இடம். பின்னணியில் நெஞ்சத்தை அள்ளும் நீலகிரி மலைத்தொடர்களில் எழில்மிகு தோற்றம். மேட்டுப்பாளையம் சாலை வழியாக நகரிலிருந்து ஒரு சில நிமிடங்களில் வந்து விடலாம். கோயம்புத்தூர் வடக்கு மேம்பாலத்திலிருந்து (ஃப்ளை ஓவர்) 4 கிலோமீட்டர் தான். துடியலூர் தொலைபேசி இணைப்பகம் மற்றும் ஸ்ரீவத்ஸா என்கிளேவ் ஆகியவற்றையொட்டி இந்த இடம் அமைந்துள்ளது.

தனி வீடுகள் மற்றும் அப்பார்ட்மென்டுகள் - இங்கே வசிப்பவர்கள் எல்லோருமே இயற்கையுடன் ஒன்றுபட்டு அருமையான சூழ்நிலையில் வசதியாக வாழலாம். அப்பார்ட்மென்டுகள் என்றாலே இடத்திற்கு நெருக்கடி தான் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தால், இங்கே மிகவும் தாராளமாக உள்ள பொது இடம், மேலும் பல்வேறு வசதிகளும் உங்களை பிரமிக்க வைக்கும்.

ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட்ஸ் - நல்ல தரத்திலே முழுமையான ஈடுபாடு கொண்டு மிக நல்ல முறையில் செயல்பட்டு நற்பெயர் பெற்றுத் திகழும் நிறுவனம். இதுவரை உருவாக்கிப் படைத்த கட்டடங்களின் பரப்பளவு 10 லட்சம் சதுர அடிக்கும் அதிகம். ஸ்ரீவத்ஸா ரெசிடென்ஸி இங்கே வாழும் நற்பேறு எல்லோருக்கும் கிடைத்து விடாது. எனவே நீங்கள் முந்திக் கொள்ளுங்கள்.



பதிவு தொடங்கிவிட்டது



எத்தனையோ பல வசதிகள்

அழகுற அமைந்த நிலத் தோற்றத்தில் அருமையான பூங்கா ○ விளையாட்டுக்கான பகுதி ○ சமூக நலக் கூடம் ○ டென்னிஸ் களம் ○ கிளப் ஹவுஸ் ○ ஜிம்னேஷியம் ○ தடங்கலே இல்லாமல் தொடர்ச்சியான தண்ணீர் சப்ளை ○ தெரு விளக்குகளுடன் தார் பூசிய சாலைகள் ○ சுற்றுப்புறச் சுவர் ○ 24 மணி நேரம் பாதுகாப்பு ○ மின்சார ஜெனரேட்டர்கள் முதலியவை

ஆர்க்கிடெக்டுகள் **சங்கர் அண்டு அசோசியேட்ஸ்** கோயம்புத்தூர்

மோடி தந்த பரிசு!

"எங்க வீட்டுல கொலு வெச்சுருக்கோம். கண்டிப்பா நீங்க வரணும்" என்று என்னை பெண்கள்தான் அழைத்துப் பழக்கம். ஆனால் இந்த ஆண்டு நவராத்திரிக்கு ஓர் ஆணிடமிருந்து அழைப்பு வந்தது. அதுவும் கட்டை பிரம்மச்சாரியிடமிருந்து!

''எங்க ஊருல தசரா தாண்டியா ஃபெஸ்டிவலை ரொம்ப அமர்க்களமா கொண்டாடுவோம். அந்த வண்ணத் திருவிழாவுக்கு அவசியம் வரணும்" என்று கேட்டுக் கொண்டது யார் தெரியுமா? குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திரபாய் மோடி!

''தாண்டியா ஆட்டமும் ஆட... தசரா கூட்டமும் கூட!'' என்ற சினிமா பாடலை மியூஸிக் சேனலில் அடிக்கடி பார்த்த முன் அனுபவம் தவிர வேறெதும் இல்லாததால்... கிளம்பியே விட்டேன், 'வைப்ரன்ட் நவ்ராத்ரி உத்ஸவ்'வுக்கு!

ஒட்ட வைத்த புன்னகையுடன் தேவதைகள் நடமாடும் ஜெட் ஏர்வேஸ் விமானத்தில் மூன்று மணி நேரப் பயணம்.

அகமதாபாத்... முஸ்லிம் ராஜாக்கள் ஆண்ட புராதன நகரம். சபர்மதி நதி கிட்டத்தட்ட வருங்கால கூவமாகி விடும் சாத்தியக்கூறுகளுடன் ஓடிக் கொண்டிருக்க, பாலத்தின் மீது ஒட்டக வண்டிகள், ஏர்டெல் விளம்பரங்கள்!

'இந்தர் ரெஸிடென்ஸி' என்ற • • • • • ஹோட்டல்தான் பத்திரிகையாளர்களின் ஜாகை. அங்கிருந்து எங்களைக் கடத்திக் கொண்டு போய், விழா, சைட் சீயிங், ஷாப்பிங் முடிந்ததும் ஹோட்டல் முன்பு இறக்கி விட ஏதுவாக, சில, பல ஏ.ஸி. பஸ்கள் வாசலில் எந்நேரமும் காத்திருந்தன.

குஜராத்தில் ஒட்டுமொத்த மிளகாய் வியாபாரமே ஐந்து கிலோவைத் தாண்டாது போலும்! ஓர் உணவிலாவது உறைப்பில்லை! கடி, தால், ராய்தா, சப்ஜி என எல்லாமே தித்திப்பு. சரி, ஊறுகாயாவது தொட்டுக்கலாம் என்றால் அதுவும் ஸ்வீட் பிக்கிள். ஊர் முழுக்க நெய்யும் சர்க்கரைப் பாகுமாய் ஒரே ஸ்வீட் வாசனை! ஒரு வேளை பிரமையோ?



இரவு டின்னர் முடித்ததும், "கிளம்புங்க... ஷாப்பிங் போகலாம்" என்றார்கள்.



"மணி பத்தரையாச்சே!" என்றால்...

"இங்கே விடிய விடிய பஜார் நிறந்திருக்கும்" என்கிறார்கள்.



* நரேந்திரமோடியுடன் பொறுப்பாசிரியர்

நவராத்திரி காலம் வேறா... சுனியா சோளிகள், கண்ணாடி பதித்த புடைவைகள், வைட் மெட்டல் ஆபரணக் கடைகள், எம்பிராய்டரி உடைகள் என ஒரே மினுக்கா... பினுக்காதான்!

"சாதாரணமாகவே ஒட்டக விலை விற்பார்கள். இப்போது சீஸன் வேறு... நல்லா பேரம் பேசுங்க!" என்று கூட வந்தவர்கள் சொல்லியிருந்தார்கள். நூற்றைம்பது ரூபாய் பொருளை, ஐம்பது ரூபாய்க்குக் கேட்டாலும், "ஐயே! ரேட்டு கேக்குற மூஞ்சைப் பாரு... போம்மே... கஸ்மாலம்!" என்று பிறாண்டாமல், "நஹி சக்தா மாதாஜி!" என்று அன்புடன் விலகிப் போகிறார்கள். அட, பிழைக்கத் தெரியாத பிரஜைகளா!

ஊரே தாண்டியா ஜுரத்தில் அனத்திக் கொண்டிருக்க... லவுட் ஸ்பீக்கரில் பாட்டு, ஆட்டம், உணவு என கேளிக்கைக்குப் பஞ்சமில்லை. 'பத்தே நாளில் கர்பா டான்ஸ் கற்றுக் கொள்ளுங்கள்', 'தசரா மேக்கப் பாதிக் கட்டணத்தில்', 'கர்பா ஆடுங்க; சிறந்த ராதே ஷ்யாம் ஜோடிக்கு கார் பரிசு' என்றெல்லாம் வீதி முழுக்க வசீகர விளம்பரங்கள்.

அது அப்பார்ட்மென்டோ, குடிசைப் பகுதியோ.. ஒவ்வொரு குடியிருப்பின் முன்பும் ஒரு 'கர்பி!', நம்ம ஊரு கும்பம் போல மலர்களாலும் ஜிகினாப் பூக்களாலும் அலங்கரிக்கப்பட்ட அந்த 'கர்பி'க்குள் துர்க்கைப் படமோ விளக்கோ வைத்து பூஜிக்கிறார்கள். மாலை சாய்ந்தால், அதைச் சுற்றிச் சுற்றி வந்து, வயசு வித்தியாசமில்லாமல் ஆடிப் பாடுகிறார்கள். சும்மா கையைத் தட்டி, வட்டமாய் ஆடும் கோலாட்டம்தானே என்றுதான் முதலில் நினைத்தேன். அதிலும் பட்டாம் பூச்சி, திரிகோணம், ஸிம்பிள் 5 என ஏதேதோ நாட்டிய நுணுக்கம் உள்ளதாம்.

மறுநாள் காந்தி நகர் ஹெலிபேட் மைதானத்தில் 'வைப்ரன்ட் நவராத்திரி 2006' விழா தொடங்கியது. ஒரே வார்த்தையில் சொல்வதென்றால் டைரக்டர் ஷங்கர் பாணியில் 'பிரம்மாண்டம்!' லேஸர் பீம் ஷோவுடன் ஆரம்பித்தது! நூற்றுக்கணக்கான வாத்தியங்கள், ஆயிரக்கணக்கான நடனக் கலைஞர்கள், லட்சக்கணக்கான பார்வையாளர்கள்... 'தி லாங்கஸ்ட் டான்ஸ் ஆன் தி வல்ட் பிளானட்' என்ற வர்ணனைக்குரிய ஆட்டம்பாட்டம். விழா இறுதியில் எல்லார் கையிலும் அகல் விளக்குத் தந்து ஆரத்தி எடுக்கச் செய்ய, பக்திப் பரவசம் கரை புரண்டது.



காணாமல் போன காற்று!

சமீபத்தில் நானும் கணவரும் தென்காசி காசி விஸ்வநாதர் கோயிலுக்குப் போனோம்.

கோயில் கோபுரவாயிலில் நுழைந்த போது திடீரென்று பலத்த காற்று வீசியது. கையிலிருந்த பொருள்கள் பறந்தன. காற்று நம்மை இழுத்துக் கொண்டு ஸ்வாமி சன்னிதானத்துக்குள் சேர்த்துவிடும் போலிருந்தது. இது வியப்பை ஊட்டியது. அங்கிருந்த தகவல் பட்டியலில் அதற்கு விளக்கம் கொடுத்திருந்தார்கள்.

பாண்டிய மன்னர் பராக்கிரமன் கட்டிய அந்த விசேஷ கோபுர வாயிலில் வரும் காற்று பொதிகை மலையிலிருந்து ஆர்யங்காவு வழியாக வந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வீசி கோபுர வாயிலில் வந்து பக்தர்களைச் சரியான பாதையில் சீக்கிரம் சன்னிதானத்தில் இழுத் துச் செல்கின்றது. கோபுரத்திலிருந்து வெளியே செல்லும் போது இந்தக் காற்று இருக்குமிடம் தெரிவதில்லை. என்ன அதிசயம்!

இப்படி தமிழ்நாட்டு கோயில்களில் எத்தனை எத்தனையோ அதிசயங்கள் இருக்கின்றன என்பதை நினைக்கும்போது புல்லரித்துப் போகிறது!

- கீதா கோபாலகிருஷ்ணன், புனே.

(நீங்கள் தரிசித்த ஆலய அதிசயங்கள் பற்றி அஞ்சலட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்க. பிரசுரமானால் ரூ. 100/- சன்மானமும் உண்டு!)

முதல்வரும் அவரது சகாக்களும் பயபக்தியுடன் ஆரத்தி காட்டி நின்றது வித்தியாசமான காட்சி!

மறுநாள் காலை முதல்வரின் பங்களாவில் பத்திரிகையாளர்களுக்கு காலை உணவு ஏற்பாடு செய்திருந்தார்கள்... இசட் பிளஸ் பாதுகாப்பையும் மீறி சகஜமாக வலம் வந்து உபசரித்தார் மோடி!

"எங்கள் மாநிலத்தில் கர்பாவும் தசராவும் மிகப் பெரிய கலாசார வசீகரங்கள். அதை மையப்படுத்தி, சர்வதேச அளவில் பயணிகளை ஈர்க்கவே குஜராத் சுற்றுலா துறையுடன் இணைந்து இந்த விழாவை நடத்தினோம்" - எங்கள் ஊரின் விழாக் கால உற்சாகத்தை எழுதுங்கள்" என்று கேட்டுக் கொண்டார் மோடி.

'மங்கையர் மலர்... பெண்கள் பத்திரிகை' என்று அறிமுகப்படுத்திக் கொண்டதும், "வணக்கம்" என்று தமிழில் சொல்லிவிட்டுப் பேசினார்.

"குஜராத்தில் பெண் சிசுக் கொலை மிக மிக அதிகமிருந்தது. இப்போது முற்றிலுமாகத் தடுத்து விட்டோம். மகளிர் கல்வி, உடல்நலம் இரண்டுக்கும் முக்கியத்துவம் தந்து பல திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறோம். பெண்தான் சக்தி... வீட்டின், நாட்டின் ஜீவசக்தி.. இந்த நவராத்திரி விழாவே தேவி உபாசனைதானே! நான் துர்க்கைக்கு விரதமிருக்கிறேன். முன்பெல்லாம் எலுமிச்சை சாறாவது குடிப்பேன். இப்போது வெறும் தண்ணீர் மட்டும்தான்..." என்றார்.

தசரா விழாவுக்கு வந்த பெண் பத்திரிகையாளர்களுக்கு குஜராத் அரசு சார்பாக, மோடி ஒரு பரிசு கொடுத்து அனுப்பினார்.

கண்ணாடியும், முத்துக்களும் பதிக்கப்பட்ட அழகான கனியா சோளி!

அதை ஜாக்பாட் புகழ் குஷ்புவுக்கு இலவசமாகத் தர விரும்புகிறேன். அம்மணி ஏற்பாரா?

- அனுராதா சேகர்



NEW
Playful
+
Powerful
Swift + Striking
Stun. Flirt. Tease. Scooty Pep+, now more attractive. More stunning
Glide + Find
No more fumbling in the dark. Find things easily in the lit storage space.
Cool riding + Cool parking
No huffing. No puffing. Park effortlessly with the Easy Center Stand.
Keep riding + Keep charging
Charge your cell on the move. Just plug in your mobile charger into the easy Mobile Charging Socket.
Zip + See
Scooty Pep+
மேலும் விபரங்களுக்கு அருகிலுள்ள டிவிஎஸ் டீலரை அணுகவும்



வாசல் மிதிக்காதே!

என் உறவுக்காரப் பெண் ஒருத்தி, சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்டாள். அவள் படிப்புக்கு நான் நிறைய உதவி செய்திருக்கிறேன். மும்பையில் இருக்கும் அவள், தன் வீட்டுக்கு வரும்படி என்னை வற்புறுத்தவே, நானும் என் குழந்தைகளும் மத்தியானம் இரண்டு மணிக்கு அவர்கள் வீட்டுக்குச் சென்றோம். பசி வயிற்றைக் கிள்ளியது. அந்தப் பெண்ணும் அவள் ஓர்ப்படியும், ''நீங்கள் விமானத்திலேயே சாப்பிட்டிருப்பீர்கள் அல்லவா? அதனால் நாங்கள் அப்பவே சாப்பிட்டு விட்டோம்'' என்றார்கள், கூலாக. அந்தப் பெண்ணின் மைத்துனர் மிகவும் முன் கோபக்காரராம். அவர் எழுந்து, குளித்து, பூஜை முடித்து சாப்பிட்டு ஆபீஸ் கிளம்ப கிட்டத்தட்ட ஒன்பது மணியாகி விடும். வீட்டில் இருப்பதோ ஒரே பாத்ரூம். அவர் கிளம்பிப் போகும் வரை நானும் குழந்தைகளும் ரூமை விட்டு வெளியே வரக்கூடாது. வெளியே தாழ் போட்டு விடுவார்கள். மிகவும் அவதியுற்றோம்.

தெரியாத ஊரில் லாட்ஜில் தங்கவும் பயமாக இருந்ததால் அந்த அவஸ்தையை நான்கு நாட்கள் பொறுத்துக் கொண்டேன். அந்த மனிதர் என்னிடமோ என் குழந்தைகளிடமோ ஒரு வார்த்தை கூட பேசவோ சிரிக்கவோ இல்லை. ஒருநாள் நாங்கள் ஷாப்பிங் போன போது அந்தப் பெண்தான் பர்ஸை எடுத்துவர மறந்ததாகக் கூறி, என் பணத்திலேயே தன் வீட்டிலுள்ள அனைவருக்கும் உடைகள், பரிசுப் பொருள்களை வாங்கிக் குவித்தாள். வீட்டுக்குப் போய்ப் பணம் தருகிறேன் என்றவள் இன்றளவும் தந்தபாடில்லை.

ஆஹா 50!

நான் எடுத்துக் கொஞ்சி வளர்த்த மற்றுமோர் உறவுக்காரப் பெண்ணுக்கு சேலத்தில் சீமந்தம் நடந்தது. அவள் மச்சினரும் அவர் மனைவியும் எங்கள் வீட்டில் மிகவும் உரிமையாகப் பழகினார்

மனிதர்கள் பலவிதம்!



கள். சீமந்தத்துக்கு நிச்சயம் ஒரு வாரம் வர வேண்டும் என்றும், அவர்களும் லீவு போட்டு ஏற்காடு உள்பட எல்லா இடங்களுக்கும் எங்களை அழைத்துச் செல்வதாகவும் அன்புடன் வற்புறுத்தவே, நானும் அதை நம்பி லீவு போட்டுக் குழந்தைகளுடன் சேலம் சென்றேன். வளைகாப்பன்று காலை என்னை, "பிறகு குளிக்கலாம்" என்று நிறுத்தி வைத்தார்கள். நான் குளித்து வருவதற்குள் வளை அடுக்கி விட்டார்கள். பிறகுதான் தெரிந்தது, நான் விதவை என்பதால் அந்தச் சமயம் அங்கிருப்பதை அவள் மாமியார் விரும்பவில்லை என்று. அது மட்டுமல்லாமல் அவர்கள் சொன்னபடி லீவு போடவும் இல்லை; எங்களை எங்கும் அழைத்துப் போகவும் இல்லை.

இன்னுமொரு நெகிழ்ச்சியான நிகழ்வையும் நான் சொல்லியே ஆக வேண்டும். என் கணவரின் சித்தி ஜாம்ஷெட்பூரில் இருக்கிறார். அங்கு போனபோது எங்களை மிகவும் அன்புடன் கவனித்துக் கொண்டார்கள். அவர்கள் வீட்டுக்கு நிறைய ஆட்கள் வந்து 'குசுகுசு' என்று பேசிச் சென்றார்கள். நான் சித்தியிடம் அதுபற்றி விசாரிக்கவே, குமுறி அழுதபடியே அவர் சொன்னதைக் கேட்டதும் நான் கல்லாகச் சமைந்து விட்டேன்.

சித்தியின் பெண், அவளது கணவன் வீட்டில் மர்மமான முறையில் இறந்து நான்கு நாட்களே ஆகியிருந்தன. அதைத் தட்டிக் கேட்கச் சென்ற அவள் தம்பியைப் போலீஸ் பிடித்து போகவே, ஜாமீனில் வெளியே அழைத்து வந்திருக்கிறார்கள்.

'எப்பவோ வரும் விருந்தாளிகளிடம் நம் சோகத்தைக் காண்பிக்க வேண்டாம்' என்று எண்ணி அவர்கள் என்னிடம் சகஜமாக இருந்திருக்கிறார்கள். இந்தப் பண்பை என்னவென்பது! கடவுளே!!


- ஆர். எஸ். கனகம்,
மேடவாக்கம்.

பெயிண்ட் அடித்து விட்டு மீதி வர்ணத்தை அப்படியே வைத்து விட்டால் உலர்ந்து வீணாகிவிடும். மீதி பெயிண்ட் உள்ள டப்பாவை இறுக மூடிக் கவிழ்த்து வைக்கவும். பெயிண்ட் எத்தனை நாட்களானாலும் காய்ந்து போகாமல் இருக்கும்.


- லக்ஷ்மி, மைசூர்.



'கண்ணும் கண்ணும் கொள்ளை அடித்தால் காதல் என்றே அர்த்தம்' என்பார் கவிஞர் வைரமுத்து. அந்தப் பார்வையையே கொள்ளையடிக்கும் பலே திருடர்கள் பற்றி இந்த வாரம் பார்ப்போம்.



• இயல்பான விழி



• நீரிழிவால் பாதிக்கப்பட்ட விழி[ி]

பார்வைத் திருடர்கள்!

'எந்த ஒரு அறிகுறியும் இருக்காது. வலியோ, உறுத்தலோ இருக்காது. ஆனால் ஓசையின்றி, மெள்ள மெள்ள பார்வையைப் பறித்துக் கொண்டு விடுவார்கள், அதுவும் நிரந்தரமாக! அந்த பலே திருடர்கள் வேறு யாருமல்ல... டயபெடிக் ரெடினோபதியும், க்ளோகோமாவும்தான்!

நீரிழிவின் தலைநகரமாக இந்தியா விளங்குகிறது என்பது நிச்சயம் ஸ்வீட் நியூஸ் அல்லதான்! ஆனால் நம்முடைய ஜெனடிக் மேக்கப்பைப் பொறுத்தவரை, பாரம்பரியமாகவே, நமது உடலமைப்பானது மிதமான உணவுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் நடப்பு வாழ்க்கையில் உள்ள பரபரப்பு, தவறான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி இன்மை போன்றவற்றால், நீரிழிவு நோய்க்கு வெகு எளிதாக இலக்காகி விடுகிறோம்.

சர்க்கரை நோய்க்கும் கண்ணுக்கும் என்ன சம்பந்தம் என்பீர்களே... நிறையவே இருக்குங்க!

உடலில் உள்ள அதிகப்படியான சர்க்கரையை எரிக்க முடியாத சூழலில், நீரிழிவு நோய் உண்டாகிறது.

அது இரத்த நாளங்களில் ரசாயன மாற்றங்களை ஏற்படுத்தி, ரத்த நாளங்களையே உருமாற்றி விடுகிறது. அதன் விளைவாக, கண், மூளை, இதயம், சிறுநீரகம் போன்ற முக்கியமான இடங்களில் ரத்த ஓட்டம் தடைபடுவதால், அந்தப் பகுதிகள் பாதிக்கப்படுகின்றன.

கண்ணிலிருக்கும் 'ரெடினா' என்னும் விழித்திரை, முழுக்க முழுக்க மெல்லிய நரம்புகளால் ஆனது. நரம்புகளுக்கு எப்போதும் நிறைய ஆக்ஸிஜன் தேவைப்படும். அதனால் அவற்றில் ரத்த ஓட்டமும் அதிகமாக இருக்கும். ஏதாவது ஒரு நரம்பு சிதைந்து போனாலும், ரத்த ஓட்டம் தடுக்கப்பட்டு, அதனுடைய வேலைத்திறன் உடனடியாகப் பாதிக்கப்படும்.

பலரும் நினைத்துக் கொண்டிருப்பது போல, கண்கள் தனிப்பட்ட உறுப்பல்ல! அது மூளையின் ஒரு பகுதி. விழித்திரையும், மூளைக்குப் போகிற ஆப்டிக் நரம்பும் வடிவமைப்பிலும், செயல்பாட்டிலும் மூளையின் ஒரு பாகம்தான்.



டாக்டர். அருள்மொழிவர்மன்

கண்நலம் -2



சர்க்கரை நோய் பாதிப்பால், விழித் திரைக்குச் செல்லும் ரத்தநாளங்களில் சிறு தடைகள் ஏற்பட்டு ரத்த ஓட்டமே மந்தமாகி விடுகிறது. இதனால் விழித் திரைக்கு ஆக்ஸிஜன் விநியோகம் குறைகிறது. அதன் விளைவாக விழித் திரை ரத்த நாளங்கள், சிதைந்து, அவற்றில் வீக்கம் உண்டாகும். ரத்தம் கசியும். ஆனால் நோயாளிக்கு வலியோ, உறுத்தலோ இருக்காது. பார்வையிலும் பெரிய அளவில் மாற்றம் தெரியாது என்பதால், அபாய கட்டம் வரை, நோயாளி ஹாயாகவே இருப்பார்.

அந்த நிலையில் விழித்திரை, சட்டென விழித்துக் கொண்டு, "அடடா... நம்ம ரத்த நாளங்களை எல்லாம் சர்க்கரை வந்து சேரழிச்சுக்கிட்டு இருக்கே! நாம்ப புதுசா உருவாக்கிட வேண்டியதுதான்" என்று திடீர் இட்லி, திடீர் புளியோதரை போல, திடீர் ரத்தநாளங்களை உருவாக்கும். ஆனால் அவை பயனற்றவையாக, தொட்டாலே உதிர்ந்து விடும்படி, தக்கையாக இருக்கும். இன்னும் ஒரு படி மேலே போய், ரத்தம் கசிய ஆரம்பிக்கும்.

கண் நரம்புக்கு தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ளும் திறமை இல்லை என்பதால், டயபடிக் ரெடினோபதியைப் பொறுத்த வரை, பார்வை போனால் போனதுதான்! எந்தக் கட்டத்தில் பார்வையின் பாதிப்பு உள்ளதோ, அதைத் தான் தக்கவைத்துக் கொள்ள முடியுமே தவிர, மீண்டும் பெற முடியாது.



எனவே...

• முதலில் சர்க்கரை நோய் நம்மைத் தாக்காத வகையில் முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது.


• வருடா வருடம் சர்க்கரை நோய்க்கான முழு பரிசோதனையை செய்து கொள்ள வேண்டும்.

• ஒருவேளை, நீரிழிவு நோய் தாக்கியிருந்தால், அதற்கான சிகிச்சையோடு, கண்டிப்பாக ஆண்டுதோறும் கண் பரிசோதனையும் செய்தல் வேண்டும்.

சிகிச்சை முறைகள் :

F.F.A. என்கிற (ஃபண்டஸ் ஃப்ளூரோஸின் ஆன்ஜியோகிராபி) என்கிற பரிசோதனை மூலம், கண்ணில் உள்ள ரத்தநாளங்களின் முழு அவுட்லைனையும் கம்ப்யூட்டரில் மானிட்டர் செய்துவிட்டு, ஆன் தி ஸ்பாட் பாதிப்பின் தீவிரத்தைக் கணித்து விட முடியும்.

பாதிப்பு ஆரம்ப நிலையில் இருந்தால், ஐந்தே நிமிடங்களில், அப்போதே ஆர்கான் லேஸர் சிகிச்சை தந்து,



அந்தி சாயும்போதே திருவிளக்கு ஏற்ற வேண்டும். குத்துவிளக்கு பித்தளையில் இருக்க வேண்டும். இரும்பு, உலோகத்திலான விளக்குகளைப் பயன்படுத்தக் கூடாது. விளக்கின் எல்லா முகங்களிலும் ஏற்ற வேண்டும் என்பதில்லை. கிழக்குத் திசையை நோக்கி அமையும் வகையில் ஏதேனும் ஒரு முகத்தில் தீபமேற்றினால் போதும். எக்காரணம் கொண்டும் தெற்குத் திசை நோக்கி தீபம் ஏற்றக் கூடாது.

- என். விஜயலெட்சுமி,
திருக்கோவிலூர்.

பார்வையைத் தக்கவைக்க முடியும். இந்த முறையில், நோயாளிகள் மருத்துவமனையில் தங்க வேண்டியதில்லை. மூன்றே சிட்டிங்குகளில் நேராக்கி விடலாம். வலி அறவே இருக்காது. அனஸ்தீஷியா தேவையில்லை. சும்மா டார்ச் அடிச்ச உணர்வு மட்டுமே இருக்கும்.

ரத்தம் கட்டி, உறைந்து போய், தழும்பு விழுந்து அதிகமான பாதிப்பு இருந்தால், 'விட்ரெக்டமி' என்கிற அறுவை சிகிச்சை மூலம் பார்வையைத் தக்கவைக்கவோ, திரும்பப் பெறவோ முயற்சி செய்யலாம்.

இனி, அடுத்த பார்வைத் திருடன் பற்றிப் பார்ப்போம்.

'க்ளாக்கோமா' எனப்படும் கண் அழுத்த நோயால், பார்வை இழந்து விடுபவர்களின் எண்ணிக்கை, இந்தியாவில் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

கண் அழுத்த நோய் என்பது பார்வை நரம்பைப் பாதிக்கும் நோய். நாம் பார்க்கும் உருவத்தின் பிம்பம், பார்வை நரம்பு வழியாக விழித்திரையிலிருந்து மூளைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. கண் அழுத்த நோயால், பார்வை நரம்பு சேதமடைந்து பக்கப் பார்வையில் பாதிப்பு ஏற்படுகிறது.

இக் குறைபாட்டை, நம் பார்வை நரம்பு கணிசமாகச் சேதமடையும் வரை, நம்மால் கவனிக்க இயலாது. ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை எடுத்து கொண்டால் பாதிப்பைக் குறைக்கலாம்.

'ஆகுயஸ் ஹியூமர்' எனப்படும் தெளிந்த திரவம் நம் கண்ணில் தொடர்ந்து உற்பத்தியாகிக் கொண்டேயிருக்கிறது. இந்தத் திரவம் வெளியேறும் பாதையில் அடைப்பு ஏற்பட்டால், கண்ணில் உள்ள திரவத்தின் அழுத்தம் அதிகமாகி, பார்வை நரம்புக்குச் சேதம் விளைவிக்கிறது.

இந் நோயை பெரும்பாலும், சொட்டு மருந்து போட்டே, கட்டுப்படுத்தி விடலாம். ஆனால் வாழ்நாள் முழுவதும் சொட்டு மருந்து போட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதால், பலருக்கு இச் சிகிச்சை முறை அசௌகரியமாக இருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு, எஸ்.எல்.டி. லேசர் சிகிச்சை மூலம் க்ளாக்கோமாவை முற்றிலும் குணப்படுத்தி விடலாம். ஒருசிலருக்கு அறுவை சிகிச்சை தேவைப்படும்! எனினும், க்ளாகோமா தாக்கி விட்டால், வாழ்நாள் முழுவதும் கண்பரிசோதனை செய்து கொண்டே ஆக வேண்டும்.

பெரும்பாலும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களைத் தாக்கும் இந் நோய் பரம்பரைக் காரணமாக வருகிறது. இருப்பினும் யாரைத் தாக்கும் என்பது இன்னும் திட்டவட்டமாகக் கண்டறியப்படாத நிலையில் நாற்பதைத் தாண்டும்போதே, முழுமையான கண் பரிசோதனை செய்து கொள்வது சிறந்தது.

கண் கெட்ட பின்னே தவிக்காமல் இருக்கலாமே!

(அடுத்த இதழில்... கம்ப்யூட்டரால் வரும் கண் பாதிப்புகள்)

சக்திவாய்ந்த சக்திகள்!

• ஆண்களை விட பெண்களுக்கு உடல் வலிமையும், மன வலிமையும் இயற்கையிலேயே அதிகம்.

• குளிரும் வெப்பமும் கூட பெண்களை அதிகம்



பாதிப்பதில்லை.

• மனநலம் பாதிக்கப்படுவது பெண்களை விட ஆண்களுக்கே அதிகம் நிகழ்கிறது.

• ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்கின்றன.

• அறுவை சிகிச்சை செய்யப்படும்போது மனதைரியத்துடன் இருப்பது பெண்களே.

• நோய் எதிர்ப்பு சக்தியும் ஆண்களை விட பெண்களுக்கு இயற்கையிலேயே அதிகமாக அமைந்துள்ளது.

• பார்வைக் கோளாறுகள், தலை வழுக்கை போன்றவை பெண்களுக்கு மிகவும் குறைவு.

• விபத்துகள், திருட்டு, கொலை போன்ற குற்றங்களில் சம்பந்தப்படும் பெண்கள் மிகவும் குறைவு.

• பெண் குழந்தைகள் ஆண் குழந்தைகளை விட சீக்கிரம் நடக்கப் பழகி விடுகின்றன. அதுபோல் பல் முளைப்பதும் சீக்கிரமே. பேசுவதற்குக் கற்றுக் கொள்வது, பேசுவதைப் புரிந்து கொள்வது, வார்த்தைகளைச் சரியாக உச்சரிப்பது எல்லாவற்றிலும் பெண் குழந்தைகளே முன்னணியில் இருக்கின்றன. சிரித்து நம்மை மகிழ்விப்பதும் அதிகம் பெண் குழந்தைகளே!

• எடுத்துக் கொண்ட பணியைச் சரியாகச் செய்து முடிக்கும் திறமை, அறிவுக்கூர்மை, படிப்பதில் அக்கறை (அதுதான் பள்ளித் தேர்வு முடிவுகள் நிரூபிக்கின்றனவே!) என்று எல்லாவற்றிலும் பெண்ணே முதன்மை ஸ்தானத்தில் இருக்கிறாள். அதனால் அவளை 'சக்தி' என்பது பொருத்தம்தான்.

- பாரதி மகள்,
கரூர்.

"மனசார

"சென்னை அண்ணா நகரில் எங்கள் அலுவலகத்திலேயே எங்களைச் சந்திக்கலாமே..."

"உங்கள் மனைவியையும் சேர்த்தல்லவா சந்திக்க வேண்டும்...?"

"அதுதான் சொல்கிறேன்... என் மனைவி சிறந்த இல்லத்தரசி மட்டுமல்ல... என் வியாபாரத்திலும் உறுதுணையாக இருப்பவர்!" - சொன்னவர் பத்மசிங் ஐசக்... இன்று மசாலா உலகில் கொடிகட்டிப் பறக்கும் 'ஆச்சி மசாலா' தயாரிப்புகளின் நிறுவனர்.

"ஒரே ஆச்சி குழம்பு மசாலாத் தூளுல எட்டு வகைக் குழம்பு தயார் செய்யலாமே..." என்கிற, தேவயானி மெஹந்தி போட்ட விரல்களை மடக்கிப் பேசும் புகழ்பெற்ற விளம்பரத்தை உருவாக்கியவரே தெல்மா ஐசக் தானாம்!

அழகாக அமைதியாகச் சிரித்தபடி அதை அங்கீகரிக்கும் தெல்மா, சமையலில் நிபுணராம்!

"புதுப்புது ரெசிபிகளை எங்கே பார்த்தாலும் கேட்டாலும், ருசிச்சாலும் உடனே செய்து பார்த்துடுவாங்க. அற்புதமா இருக்கும்..." என்று ஐசக் ஆரம்பிக்க,

"சரி... இத்தனை திறமையானவளா இருக்கியே... இதையே வெளியே கொண்டு வந்து நாலு பேர் பாராட்டும்படி ஏதாவது செய்யேன்..." என்று என்னை ஊக்கப்படுத்தினார்" என்று தொடர்கிறார் தெல்மா.

"இப்படி ஏழு வருடத்துக்கு முன்னாலே ஆரம்பிச்சது தான் மணமான ஆச்சி மசாலா தயாரிப்புகள்..." என்கிறார் ஐசக்.

"என் சமையல் திறமை மட்டும்தான் இல்ல, இவரோட மேனேஜ்மெண்ட் படிப்பு அறிவும் சேர்ந்திருக்கு இதிலே..." என்று சிரிக்கிறார் தெல்மா...



"சரி, இன்னிக்கு மார்க்கெட்லே பதினஞ்சு வகையான மசாலா பொடிகளை விற்பனைக்குத் தயார் பண்றீங்க... வீட்டிலே இதே மசாலாதானே... யார் சமைப்பீங்க...?" என்று சீண்டிப் பார்த்தால்...

"நான் நல்லா சாப்பிடுவேன்... ஆனா சமைக்கத் தெரியாது" என்கிறார் ஐசக்.

"நான் சமைக்கிற பிரியாணியும், மீன் குழம்பும் இவருக்கு ரொம்பப் பிடிக்கும்"- தெல்மா.

மணமும் மசாலாவுமாக இணைந்து பேசும் இவர்களின் திருமணம் காதல் திருமணமா?

"முறைப்படி காதல் திருமணம்" என்று சிரிக்கிறார் ஐசக்...

தொழில்நுட்பம்.

''சரி, வியாபாரத்தில் மனைவி ஆலோசனைகள் என்று கூற வந்தால்...

ஒத்துழைக்கணும்!"

''நான் நெல்லையைச் சேர்ந்தவன். தெல்மாவோ தஞ்சாவூர். ஓர் உறவினர் மூலம் தெல்மாவுக்கு வரன் பார்த்துக் கொண்டிருக்கிற விஷயம் தெரிந்தது. என் பெற்றோரிடம் கூடச் சொல்லாமல் நான் போய் பெண் பார்த்து விட்டு வந்தேன்.. எனக்கு அவங்களை ரொம்பப் பிடித்து விட்டது. ஆனால் என் வீட்டில் செமக் கடுப்பு... சொல்லாமல் கொள்ளாமல் நீயாவே பார்த்தாயா என்று... அப்புறம் நான் பிடிவாதமாக அவுங்களையே கல்யாணம் செஞ்சேன். இன்று என் வீட்டாருக்கு என்னை விட தெல்மாவைத்தான் ரொம்பப் பிடிக்கும்..."

"எல்லாம் நாம அனுசரிச்சுப் பழகற விதத்துலதானே இருக்கு... உலகமே ஒரு கண்ணாடி போலத்தானே? அன்பா, பண்பா நாம்ப பழகறதத்தானே அதுவும் பிரதி பலிக்கும்..." மென்மையாகச் சொல்கிறார் தெல்மா.

திருமணமான உடனேயே மனைவியின் திறமை அறிந்து மசாலா தயாரிப்பைத் துவங்கி விட்டீர்களா...? அதாவது ஏழு வருடமாக..." என்று கேட்டால்,

"இல்லையே... திருமணம் ஆன போது இவர் காத்ரேஜ் கம்பெனியில் இருந்தார். இன்று எங்களுக்கு வளர்ந்த இரு மகன்கள் இருக்கிறார்கள். பெரியவன் மெக்கானிகல் இன்ஜினியரிங் மூன்றாவது வருடம் படிக்கிறான். அடுத்தவன் உணவுத்

நிச்சயமாக வாக்குவாதங்கள் இருக்குமே... எதை ஏற்றீர்கள்? எதை நிராகரிச்சீங்க...?''

''நிச்சயமாக வாக்குவாதம் வருவதுண்டு.. உதாரணத்துக்கு 'ஆச்சி மசாலா' என்ற பெயருக்குப் பதிலா வேறு ஏதாவது புதுமையாக வைக்க தெல்மா விரும்பினாங்க. ஆனா திருநெல்வேலி சைவக் குடும்பங்கள்ல வயசான பெண்களை 'ஆச்சி'னு அன்பா கூப்பிடுவாங்க. அதனால மனசுக்கு ஒட்டினாப்போல இந்தப் பெயரே இருக்கட்டும்னு நான் சொன்ன



• தெல்மா - பத்மசிங் ஐசக்

பிறகு அவங்களும் ஒத்துக்கிட்டாங்க...'' என்கிறார் ஐசக்

"அதே போல இப்ப 'ரெடி டு ஈட்' தயாரிப்புகளை அதாவது உடனே சூடுபண்ணி சாப்பிடறது... இந்தப் பொருள்களைத் தயாரிக்க யோசனை சொன்னதும் தெல்மாதான். நான் தயங்கினேன். அவங்க ஊக்கப்படுத்தி னாங்க..." என்று தொடர்கிறார்.

"சரி வியாபாரத்தை விடுங்க... நீங்க சேர்ந்து போன முதல் சினிமா எது...?"

" 'உன்னால் முடியும் தம்பி' என்ற சினிமாவுக்குத்தான் போனோம்..." என்ற தெல்மா தொடர்ந்து,

"இப்பல்லாம் சினிமாவுக்குப் போக நேரமே இருக்கிறதில்ல.... இருந்தாலும் டி.வியில பட்டிமன்றம், அரட்டை அரங்கம் போன்ற நிகழ்ச்சிகளை சேர்ந்து பார்க்கிறதுண்டு..."

"சீரியல்...?"

"நானாச்சும் ஏதாவது சீரியல் பார்ப் பேன்.. அவருக்கு நேரம் கிடைக்கறப்ப எல்லாம் எங்க தொழிலாளிகளுக்கு என்ன நன்மை செய்யலாம்னு திட்டம் போட் டுக்கிட்டு இருப்பாரு...'' என்கிறார் தெல்மா.

"அவுங்களுக்குச் சமைக்க மட்டும்தான் தெரியும்னு நினைக்காதீங்க.. அருமையாப் பாடுவாங்க...'' என்று மனைவியின் மற்றோர் திறமையைச் சுட்டிக்காட்டு கிறார் ஐசக்.

''எனக்கு அவர்கிட்ட ரொம்பப் பிடிச்ச விஷயம் என்ன தெரியுமா...?'' கேட்டு விட்டுத் தொடர்கிறார் தெல்மா.

"சமூக அக்கறை... அதாவது தரமான உணவுப் பொருள்கள் எல்லாம் வசதி யானவங்களுக்கு மட்டும்தான் கிடைக் கணுமா... சாதாரண ஏழை எளிய மக் களும் அதையெல்லாம் வாங்கிச் சாப் பிடணும்னு நினைக்கிறவர்.. அதனால தான் தரமான பொருள்களை, குறைந்த விலையில் கிடைக்குமாறு செய்கிறோம்..."

"அதே போல, பார்வை இல்லாதவங்க, ஆதரவற்ற பெண்கள், இவங்களுக்கெல் லாம் வேலை வாய்ப்புத் தந்திருக்கிறது தெல்மாவின் நல்லெண்ணம்தான்..."

"ஒருவருக்கொருவர் எந்த விஷயத்தில் விட்டுக் கொடுத்திருக்கீங்க...?"

''நான் தூய வெள்ளை வேட்டி, சட்டையில் இருப்பதுதான் தெல்மாவுக்கு மிகவும் பிடிக்கும்...''

"பகட்டான உடைகளை அணியாமல், எளிமையான பருத்திப் புடைவைகளை நான் அணிவதுதான் அவருக்குப் பிடிக்கும்..."

''தொழில்ல கணவர் முன்னேற ணும்னா, அவருக்கு வீடு, அலுவலகம் இரண்டிலும் அமைதியான சூழல் வேணும். மனைவி கணக்கு வழக்கு பார்க் கிற விஷயங்கள் போன்றவற்றில் மட்டும் உதவியா இருந்தால் போதாதுங்க... கூட மனசார முழு ஒத்துழைப்புத் தந்தாக ணும். மாரல் சப்போர்ட்டா இருக்கணும்.. அப்பத்தானே கணவன் மனைவி ரெண்டு பேருக்குமே நிம்மதியான வாழ்க்கை... இப்படி ஒவ்வொரு குடும்பமும் இருந் துட்டா சமூகத்துக்கே நன்மைதானே...?''

தெல்மா ஐசக்கின் உண்மை நிறைந்த வார்த்தைகள் இவை... அனுபவ பூர்வமானவையும் கூட...!

- பத்மினி பட்டாபிராமன்
படங்கள் : ஸ்ரீஹரி



தூள் உப்பில் திரியைப் புரட்டி எண்ணெய் ஊற்றி கார்த்திகை தீபம் ஏற்றினால் இலேசில் காற்றில் அணையாது.
- ஜெயகுமாரி செல்வராஜ், சேலம்.

ஒரு சிலரை மட்டும் சார்ந்த பொருளாதாரம் நம் அனைவரின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை உறுதி செய்யுமா? அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்? யோசிப்போமா...?

எங்கே போகும் இந்தப் பாதை?



- இன்றைக்கு கொடி கட்டிப் பறக்கும் மென்பொருளாளர்கள் 50 அல்லது 60 இலட்சம் என்று எடுத்துக்கொண்டாலும், மீதமுள்ள 99 கோடியே 40 இலட்சம் மக்களுக்கு கம்ப்யூட்டர் சார்ந்த தொழில்கள் கிடைப்பதில்லை.
- இப்பொழுது நடக்கும் கால்சென்டர், பிபிஓ, போன்ற தொழில்களுக்கு இன்னும் 50 ஆண்டுகளுக்கு நல்ல எதிர்காலம் இருந்தாலும், இவர்கள் மட்டுமே நமது நாட்டைச் சார்ந்தவர்கள் அல்ல.
- நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய தங்க நாற்கர சாலைக்காக செலவிடப்பட்டத் தொகை சுமார் 10000 கோடி ரூபாய். இந்த ரூபாயில் மூலப் பொருள் களாகிய தார், சிறு கற்கள், சிமெண்ட், சுண்ணாம்பு வாங்குவதற்கு செலவிடப்பட்டத் தொகை சுமார் 5000 கோடி ரூபாய் என்றாலும், மீதமுள்ள 5000 கோடி எங்கே போனது? அடிதட்டு மக்களுக்கா என்றால் 'இல்லை' என்ற வேதனையான பதிலே வெளிவருகிறது.
- முன்பெல்லாம் சாலை இடுகிறார்கள் என்றால் கூட்டங் கூட்டமாக உழைப்பாளிகளைப் பார்த்திருப்போம். ஒரு நாளைக்கு ஒரு கிலோ மீட்டர் சாலை அமைக்க 250 ஆட்கள் வேலை செய்வார்கள். இப்போது வந்துள்ள நவீன இயந்திரங்களின் உதவியால் ஒரு நாளைக்கு 8 மணி நேரத்தில் 25 மனிதர்களுடன் தரமான சாலை அமைக்க முடியும்.
- இன்று சாலை அமைக்கும் பணியின் கதாநாயகன், மனிதன் அல்ல. சாலை போடும் இயந்திரம்தான் நாயகன். இதன் விலையோ சுமார் 50 இலட்சம். இந்த இயந் திரம் ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இம்மாதிரி இயந்திரங்கள் கிட்டத்தட்ட 5000 வரை



பொரி உருண்டையை, வெல்லத்திற்குப் பதிலாக சீனியை பாகு வைத்தும் செய்யலாம். அதில் ஏலப்பொடி, டூட்டி ஃப்ரூட்டி கலந்து பிடித்தால், வெள்ளைப் பின்னணியில் நவரத்தினக்கற்கள் பதித்தது போல, பார்க்கக் கொள்ளை அழகாக இருக்கும்.

- ஹம்ஸா, கீழக்கரை.

இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

● சேலம், நாமக்கல், ஆட்டையாம்பட்டி, பெரம்பலூர் மக்களுக்குப் போய் சேர வேண்டிய பணம் மற்ற நாட்டுக்காரர்களுக்குப் போய்விடுகிறது. இது தேவையா? இதற்காக பழைய முறையை நாம் எந்நேரத்திலும் கையாள வேண்டும் என்று சொல்லவில்லை. முக்கியமான சாலைகளில் இயந்திரப்பணி நடக்கட்டும். குறுக்குச் சாலைகளிலும் சந்துகளிலும் பழைய முறையை கையாளக்கூடாதா?

மக்களாட்சி என்பது அதிகமான மக்களுக்கு நன்மை செய்வதாக இருக்க வேண்டும்.

மக்களின் வரிப்பணம் மக்களுக்கே திரும்பிச் சென்றால் ஒழிய நாம் ஒட்டு மொத்தமாக முன்னேறுவது எப்பொழுது?

அரசுக்கு யோசனை கூறும் நிலையில் உள்ளவர்கள் சிந்திக்க வேண்டும்.

● அடையாறு மேம்பாலத்தில் பாதசாரிகளுக்கு விடப்பட்டுள்ள இடம் இருபுறத்தையும் சேர்த்தாலே 3 அடிக்கும் குறைவு தான். நமது நாட்டில் பாதசாரிகளின் எண்ணிக்கை அதிகமா? அல்லது ஊர்தியில் செல்லும் மனிதர்கள் அதிகமா?

● முன்பெல்லாம் லாரி கொண்டு செல்லும் மணலைக் கீழே இறக்குவதற்கு குறைந்தது 4 பேர் வேலை செய்வார்கள். இவர்களது அனைவரின் வேலையும் தொலைந்தது. ஆட்கள் இல்லாமலே பின்பக்கம் சாய்த்து மணலைச் சரியச் செய்து விட்டு அடுத்த நடைக்குச் சென்று விடுகிறது அந்த இயந்திரம்.

● அதேபோல் வீட்டில் மேல்தளம் இடுவதற்கு கான்க்ரிட் கலவை எடுத்துச் செல்ல சுமார் 200 முதல் 300 வரை ஆட்கள் தேவைப்பட்டனர். இப்பொழுதோ கலவை செய்யப்பட்ட கான்க்ரிட் வீட்டிற்கே தருவிக்கப்படுகிறது.

● சைனாவிலிருந்தும், கொரியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட கட்டில், நாற்காலி, மேஜை, பீரோ போன்றவை எத்தனை தச்சர்களின் வேலையைத் தொலைத்துவிட்டன.

- எஸ். சிவகுமார்,
சென்னை - 20



புது அகல் விளக்குகளை தண்ணீரில் ஊறவைத்து, பின் எடுத்து காயவைத்து எண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்றவும். அகல் விளக்கு புதுசாக இருந்தால் எண்ணெய்யை உறிஞ்சும்.

- என். விஜயலெட்சுமி, திருக்கோவிலூர்.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் **"ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்"** தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் **ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர்** ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

ஈஸியாக எடுக்கலாம் ஈ.ஸி.ஜி!

சமீபத்தில்தான் சென்னையில் அறிமுகமாகியிருக்கிறது இந்த வசதி. கேள்விப்பட்டதும் அட, இப்படிப்பட்ட வசதிகள் கூட உண்டா என்ற வியப்பு எழுகிறது.




"**எ**ங்க வீட்டிலேயே ரத்த அழுத்தத்தைச் சோதித்துக் கொள்ளும் கருவி இருக்கு" என்று சிலர் பெருமையாகக் கூறக் கேட்டிருக்கலாம். இப்போது ஈ.ஸி.ஜி. கருவியையும் அவர்கள் சேர்த்துக் கொள்ளலாம்.

ரத்த அழுத்தத்தைத் தெரிந்து கொண்டால் நம்மாலேயே ஓரளவு உடல்நிலையைக் கணிக்க முடியும். மிகவும் அதிக ரத்த அழுத்தமென்றால் டாக்டரை அணுகுவோம். அல்லது மாத்திரையை விழுங்குவோம். ஆனால் ஈ.ஸி.ஜி. கருவி வெளிப்படுத்தும் கோணல் மாணலான கோடுகளை வைத்துக் கொண்டு நம்மால் என்ன புரிந்து கொள்ள முடியும்? அதைக் கொண்டு இதய பாதிப்பு உள்ளதா என்பதைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு நாம் மருத்துவர்கள் இல்லையே!

விவரங்களை அறிய இந்த வசதியை அறிமுகப்படுத்திய 'ஹார்ட்லைன் டெலி மெடிகல் சர்வீஸ்' என்ற அமைப்பை அணுகினோம். சென்னை பெருங்குடியில் உள்ள லைஃப் லைன் மருத்துவமனை வளாகத்தில் உள்ள இதன் சென்னை நிர்வாகியான டாக்டர் கரோலின் கூறிய தகவல்கள்.

"**இ**ந்தக் கருவியை வாங்கிக் கொண்டவர்கள் இதயத்தில் ஏதோ அசௌகரியம் என்று உணரும்போது அதைப் பயன்படுத்தலாம். பொதுவாக ஈ.ஸி.ஜி. எடுக்கும் போது உடலில் எட்டு மின்கடத்திகளைப் பொருத்துவார்கள். இந்தக் கருவியில் மூன்றுதான் உள்ளன.. அவற்றை உங்கள் இதயப் பகுதியின் மீது சருமத்தில் பொருத்திக் கொள்ள வேண்டும். பிறகு கருவியிலுள்ள ஒரு பட்டனை அழுத்த வேண்டும். தொலைபேசியில் எங்கள் தொலைபேசி எண்ணை அழுத்திவிட்டு, உங்களிடமுள்ள ஈ.ஸி.ஜி. கருவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தொலைபேசியில் ரிசீவரில் பொருத்தினால் போதுமானது. உங்கள் இதயத் துடிப்புகளும் அப்போது இதயத்தின் பல்வேறு இடங்களில் நடைபெறும் மாறுதல்களும் எங்கள் தரப்பில் உள்ள கணினியில் பதிவாகிவிடும்.

எங்கள் அமைப்பில் 24 மணி நேரமும் இரண்டு மருத்துவர்கள் இருப்பார்கள். அவர்கள் கணினியில் பதிவாகும் விவரங்களைக் கவனித்து விட்டு உங்களுக்கு ஏற்பட்டுள்ளது உடனடியாகக் கவனிக்க வேண்டிய பிரச்னையா அல்லது பயப்பட ஒன்றுமில்லையா என்பதைக் கூறுவார்கள்." இதுவரை 300 பேர் இந்த வசதி




யைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களாம். கருவியின் விலை சுமார் 16,000 ரூபாய்.''

இதய சிகிச்சை மருத்துவர் டாக்டர் ரவிகுமாரை இதுகுறித்து மேலும் விவரங்கள் கேட்டோம்.

"மார்பில் ஏதோ அசௌகரியமோ, சங்கடமோ இருக்கிறதா... ஏதாவது இதய நோயோ? மாரடைப்போ? அல்லது வெறும் வாயுத் தொல்லைதானா? தெரியவில்லை. உடனடியாக டாக்டரிடம் போக வேண்டுமா? வேண்டாமா? என்ற கேள்வி தோன்றிக் குழப்பக்கூடும். அதுவும் மாரடைப்பாக இருந்தால் தொடக்க நிமிடங்களிலேயே கவனிக்கப்பட்டால்தான் குணமாக வாய்ப்பு உண்டு.

பைபாஸ் அறுவை சிகிச்சை நடந்திருக்கலாம். பேஸ்மேக்கர் பொருத்தப்பட்டிருக்கலாம். அப்படியானால் இதுபோன்ற குழப்பங்கள் அதிகமாகவே எழலாம். அவர்களுக்கு இந்த நவீன வசதி சிறப்பானதுதான். ஆஞ்சியோகிராம், ஆஞ்சியோபிளாஸ்டி நடந்திருக்கலாம். முன்னதாக மைல்டாக ஒரு ஹார்ட் அட்டாக் வந்திருக்கலாம். இந்தப் பிரிவில் நீங்கள் இருந்தாலும் உங்களுக்கு இந்தக் கருவி பயன்படும். அருகில் மருத்துவ வசதி இல்லாதவர்களுக்கு இது ஒருவிதத்தில் அவசியமும் கூட.



* டாக்டர் ரவிகுமார்

அமெரிக்காவை எதற்காக விமர்சனம் செய்தாலும் அங்கு நடத்தப்படும் மருத்துவ ஆராய்ச்சிகள் உலகுக்குப் பெருமளவில் பயன்படுவதை மறுக்க முடியாது. அப்படி ஒரு தொழில்நுட்பம்தான் 'ட்ரான்ஸ் டெலிஃபோனிக் மானிட்டரிங்' என்ற மேற்படி வசதி. இது ஓர் ஆராய்ச்சிக் கருவி அல்ல; அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளில் பத்து வருடங்களுக்கு மேலாகப் பிரபலமாக உள்ள நவீன வசதி! 'யு.எஸ்.எஃப்.டி.ஏ.' என்கிற மருத்துவ அமைப்பாலும், ஐரோப்பிய மருத்துவக் கழகத்தாலும், அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

- ஜி.எஸ்.எஸ்.

ஒட்டடை அடிக்கும் போது ஒட்டடைக் குச்சி அல்லது துடைப்பத்தின் நுனியை மண்ணெண்ணெயில் நனைத்து, பிறகு ஒட்டடை அடித்தால் சிலந்தி வலை விரிக்காது. வீடும் சுத்தமாக இருக்கும்.

- டி. ஜோதிபாய், காஞ்சிபுரம்.



5 S செயல்முறைகள் என்பது வீடு, கல்விக் கூடம், தொழிலகம் ஆகியன உன்னதமான நிலையை அடைவதற்கு உதவும் 5 அடிப்படைச் செய்கைகளை உள்ளடக்கிய வழிமுறை.

நாம் வேலை செய்யும் வீடு தூய்மையாகவும், நேர்த்தியாகவும் இருக்க வேண்டும். தூய்மையில்லை என்றால் செயலிலும் தெளிவிருக்காது. இதனால் நம் இல்வாழ்க்கையில் பிழைகள் ஏற்படுகின்றன. அவற்றைத் தவிர்ப்பதற்கு 5 S செயல்முறைகள் மிகவும் அவசியம்.

இந்தச் செயல்முறைகள் 'S' என்னும் எழுத்தில் தொடங்கும் 5 ஜப்பானியச் சொற்களால் விவரிக்கப்படுகின்றன.

5 S செயல்முறைகளை இனி பார்ப்போம்.

1. SEIRI - Clearing up - தேவையற்றவற்றை அகற்றுதல்
2. SEITON - Organising - அமைத்தல்.
3. SEISO - Cleaning - சுத்தப்படுத்துதல்
4. SEIKETSU - Standardising - சீர் அமைப்பு
5. SHITSUKE - Training and Discipline பயிற்சியும் ஒழுங்குமுறையும்

1 S - தேவையற்றவற்றை அகற்றுதல்

1. பொருள்களைத் தேவையுள்ளவை, தேவையற்றவை என வகைப்படுத்த வேண்டும். தேவையுள்ளவற்றில் அதிகமாக உள்ளதென்றாலும் அவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.

உதாரணமாக, உப்பைத் தேவைக்கு அதிகமாக வைத்திருக்கக் கூடாது. இதனால் இடம் அடைக்கப்படுவதோடு பல சிரமங்களையும் ஏற்படுத்தும்.

பயன்கள் :

1. இப்படிச் செய்வதால் நமக்கு இடம் கிடைக்கிறது.

2. இருப்பில் இருக்கும் பொருள்கள் சிறந்த முறையில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

2 S- Organising அமைத்தல்

1. தேவையுள்ள பொருள்களைச் சீராக வைக்க வேண்டும்.

2. அப் பொருள்களை அதற்குரிய இடத்திலேயே வைத்தல்.

3. ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பிரத்யேக இடம் ஒதுக்குதல். உதாரணமாக காஸ் சிலிண்டர்களுக்குத் தனியாக, பாதுகாப்பான ஓர் இடம் அமைத்தல்.



பயன்கள்

1. பொருள்களை எளிதாக எடுக்க முடியும்.

2. தேடும் நேரம் மிச்சம்; மன உளைச்சல் இன்றி செய்யும் வேலையைச் சிறப்பாகச் செய்ய

முடிகிறது.

3. புழங்கும் இடம் அதிகரிக்கும்.

3S சுத்தப்படுத்துதல்

1. எல்லாப் பொருள்களையும் தூசு நீங்க சுத்தப்படுத்துதல்.

2. தூசு படியும் காரணம் அறிந்து அவற்றை வேரறுத்தல்

பயன்கள் :

1. குறைகள் உடனடியாக



நிவர்த்தி செய்யப்படுகிறது.

2. பொருள்கள் கெட்டுப் போகாமல் உடனடியாக அவற்றை உபயோகப்படுத்த முடிகிறது.

4S - சீர் அமைப்பு

1. வேலை செய்யும் இடத்தில் மிக உயர்தரமான கோட்பாடுகளைக் கடைப்பிடித்தல்.

2. சீரற்றவற்றைச் சரிசெய்தல்.

3. சீரமைப்பைத் தினமும் பராமரித்தல்.

4. எல்லோரும் எளிதில் ஏற்றுக் கொள்ளுமாறு விதி முறைகளை ஏற்படுத்துதல்.

5. ஆங்காங்கே படங்கள் மூலம் இருப்பிடத்தைத் தெளிவுபடுத்துதல்.

பயன்கள் :

1. நேர்த்தியான வேலை செய்யும் சூழ்நிலையை ஏற்படுத்தும்

2. குழப்பங்கள் ஏதுமின்றி, அவரவர்கள் தன்னிச்சையாகச் செயல்பட வழிவகுக்கிறது.

5S - பயிற்சியும் ஒழுங்குமுறையும்

1. விதிமுறைகளைப் பின்பற்ற குடும்பத்திலுள்ள அனைவருக்கும் பயிற்சி அளித்தல்.

2. சரியான விதிமுறைகளை உருவாக்குதல்.

3. அனைவரும் புரிந்து கொள்ளும்படியான விதிமுறைகளை ஏற்படுத்துதல்.

பயன்கள் :

1. இதனால் வீட்டில் உள்ள அனைவரும் தெரிந்து கொள்ளும்படி சூழ்நிலை ஏற்படுகிறது.

2. விதிமுறைகள் அனைவருக்கும் பொது என அறிய முடிகிறது.

இப்படி 5S செயல்முறைகளைக் கடைப்பிடித்தால் வீடு சுத்தமாக இருப்பதுடன் வீட்டுக்குள் ஏற்படும் விபத்துகளும் தடுக்கப்படும். தொழிற்சாலைகளில் பயன்படும் 5S செயல்முறைகளை வீடுகளிலும் செயல்படுத்த முன்வருவோமே!

- வே. சித்ரா,
கும்மிடிப்பூண்டி.

திருமலையில்....

திருமலையில் மலரும் புஷ்பங்கள் அனைத்தும் வேங்கடாஜலபதிக்காகவே மலர்கின்றன என்பது தொன்றுதொட்டு இருந்து வரும் ஒரு நம்பிக்கை. எனவே, அங்கு மலரும் மலர்கள் அனைத்தும் அன்று முதல் இன்று வரை சுவாமிக்கே சமர்ப்பிக்கப்படுகின்றன. 'சுவாமிக்கான மலர்களை மனிதர்கள் சூடக்கூடாது' என்பதால்தான் திருமலையில் இருக்கும்போது பெண்கள் பூச்சூடிக் கொள்ளக் கூடாது என்று சொல்லப்படுகிறது.



மேலும், திருமலையில் பெருமாளுக்கு அர்ப்பணித்த மலர்கள், துளசி ஆகியவற்றைப் பிரசாதமாக வழங்குவதில்லை.

பெருமாளுக்கு புஷ்பம் சாத்தும் போது மார்க்கண்டேயர், பிருகு, பிரம்மன், சங்கரன் ஆகிய மற்றைய கடவுளருக்கும் புஷ்பாஞ்சலி செய்ய வேண்டும் என்பது ஆகம விதி.

திருமலையில் வேங்கடாஜலபதி மட்டுமே குடிகொண்டுள்ளார். மற்ற தெய்வங்களுக்கு உரித்தான புஷ்பங்கள் அனைத்தும் அவர்களுக்கு சாத்தப்படும் பாவனையுடன் வேங்கடாஜலபதியின் பாதகமலங்களிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றன. மற்ற தெய்வங்களுக்கும் சேர்ந்து சமர்ப்பிக்கப்பட்ட புஷ்பங்களைத் தனது பிரசாதமாக வேங்கடாஜலபதி வழங்குவது முறையல்ல என்பதால் அவர் சந்நிதியில் இருக்கும் புஷ்பங்களைப் பக்தர்களுக்கு வழங்குவதில்லை. அவையனைத்தும் கோயிலை ஒட்டியிருக்கும் பூக் கிணற்றில் சேர்க்கப்படுகின்றன.

- க. வளர்மதி கணேஷ், தேனி.



• குழந்தை பிறந்தவுடன் முனிசிபாலிடியில் வாங்கும் பிறப்புச் சான்றிதழை லாமினேட் செய்து வைத்துக் கொண்டால், கிழிந்து போகாமல் பத்திரமாக இருக்கும்.

- லக்ஷ்மி சுந்தரம், தாணே.

ஆஹா 50!

தயங்காமல் சேர்க்கலாம்!

கொலஸ்ட்ரால் பிரச்னை உள்ளவர்கள் தேங்காய் அதிகம் சேர்த்துக் கொள்ளத் தயங்குவார்கள். கொழுப்பும் சேராமல் தேங்காயும் அதிகம் சேர்த்து கொள்ள ஒரு வழி.



தேங்காயை உடைத்து ஒரு முழு தேங்காயையும் துருவலாக்கிக் கொள்ள வேண்டும். எல்லாத் துருவலையும் ஒரு பாத்திரத்தில் போட்டு சூடாக 1 அல்லது 1½ தம்ளர் (துருவலின் அளவைப் பொறுத்து) தண்ணீர் ஊற்றி 2 நிமிடங்கள் கழித்து அந்தத் துருவலில் இருந்து பாலைப் பிழிய வேண்டும். ஒரு முறை பிழிந்தால் போதுமானது. அந்தத் துருவலை நன்றாக வெயிலில் உலர்த்தி ஒரு பாட்டிலில் போட்டு ஃப்ரீஸரில் வைத்து விட்டால் நமக்கு தேங்காய் வேண்டும் பொழுது எடுத்து உபயோகித்துக் கொள்ளலாம்.

பிழிந்த பாலை ஒரு வாணலியில் ஊற்றி இளந்தீயில் அடுப்பில் வைத்து காய்ச்ச வேண்டும். அடியில் கசண்டு பழுப்பு நிறமாக மாற மாற, தேங்காய் எண்ணெய் மேலே மிதந்து வரும். இறக்கி வைத்து நன்கு தெளிந்தபின் எடுத்து பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொள்ளலாம்.

சுத்தமான தேங்காய் எண்ணெயுமாச்சு! தேங்காயில் கொலஸ்ட்ராலும் குறைச்சாச்சு!

- லலிதா பாலசுப்ரமணியன், கோயமுத்தூர்.

குழந்தைகளின் வெள்ளைச் சட்டைகளில் இங்க் கறை பட்டு விட்டால் அந்த இடத்தில் சிறிது டூத் பேஸ்ட்டை தடவி அரை மணி கழித்து, சோப் போட்டுத் தேய்த்தால் இங்க் கறை நீங்கிவிடும்.

- அதிரை நாகராஜன், சிதம்பரம்.



நம்மில் பலருக்கு உணவு வகைகளைப் பதப்படுத்தும் முறை தெரிவதில்லை. குளிர்சாதனப் பெட்டி வாங்குவதில் செலுத்தும் கவனத்தை, அதனால் அடையும் பலன்களிலும் செலுத்தினோம் என்றால் காய்கறிகள், பழங்கள் நெடுநாளைக்கு உங்களுடன் சிரித்து விளையாடும்.




பழசா ரெடியா...

1. ஐஸ் ட்ரேயில் ஊற்றிப் பதப்படுத்துவது.
2. டப்பாக்களில் வைத்துப் பதப்படுத்துவது.
3. பாலிதீன் பைகளில் வைத்துப் பதப்படுத்துவது.
4. க்ளிங்-ஃபிலிம் என்று சொல்லப்படும் கண்ணாடித்தாள் வைத்து மூடி சீல் செய்வது.
5. என்ன வகை உணவைப் பதப்படுத்துகிறோம் என்று பெயரிட்டு வைப்பது.
6. ஃபாயில் பேப்பர் கொண்டு மூடி வைப்பது.



இன்னொரு முக்கியமான விஷயம் காய்கறிகளை ப்ளாஞ்ச் செய்த பின்புதான் பதப்படுத்த வேண்டும். ஃப்ளாஞ்ச் என்றால் சுடுதண்ணீரில் குறித்த நேரத்துக்கு காய்கறிகளைப் போட்டு வைப்பது.

இப்படிச் செய்வதால் அதனுடைய கிருமிகள் அழிவதோடு வைட்டமின் சத்தும் பாது



காக்கப்படுகிறது. கூடவே, சுவையும் குறையாமல் பாதுகாக்க முடியும். முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய விஷயம் என்ன தெரியுமா? ஒவ்வொரு வகையான காய்கறியையும் குறிப்பிட்ட நேரத்துக்கு மட்டுமே ப்ளாஞ்ச் செய்ய வேண்டும் என்பதே!

இப்பொழுது நாம் எப்படி பல வகையான காய்கறிகளைப் பதப்படுத்துவது என்பதைப் பார்ப்போம்.

• **பீன்ஸ் :** இளசாகப் பார்த்து வாங்கி நுனிகளை வெட்டி எடுக்கவும். பின்பு ப்ளாஞ்ச் செய்ய வேண்டும். வடிகட்டி, குளிர்ந்த நீரில் போட்டு ஆறவைத்து நன்கு துடைத்து உலர்த்தி ஃப்ரீஸர் பேகில் போட்டு ஃப்ரீஸ் செய்யவும். ப்ளாஞ்ச்



நீங்கள் நிறைய மாத்திரைகளை, (பி.பி. டயாபடீஸ் போன்று) ரெகுலராகச் சாப்பிடுபவராக இருந்தால், வெளியூர் செல்லும் போது, ஒவ்வொரு வகை மாத்திரையையும் முழு அட்டையாக எடுத்துச் செல்லுங்கள். வெளியூர் போயிருக்கும் போது, 'சரியாக எல்லா வேளையும் சாப்பிட்டோமா, எல்லா நாளும் சாப்பிட்டோமா' என்ற குழப்பத்திற்கு இடமில்லாமல், கணக்கு வைத்துக் கொள்ள உதவும்!

- விஜயா ராஜன், பெங்களூர்.

செய்ய வேண்டிய நேரம் : 2 நிமிடங்கள்.

• **குடை மிளகாய் :** நன்கு கழுவி விதைகள் நீக்கி, துண்டுகளாக்கி ப்ளாஞ்ச் செய்யவும். ஆறவைத்து துடைத்து ஃப்ரீஸ் செய்யவும். நேரம் 3 நிமிடங்கள்.

• **காலிஃப்ளவர் :** நன்கு கழுவி சிறு சிறு பூக்களாகப் பிரித்தெடுத்து ப்ளாஞ்ச் செய்யவும். சிறிது எலுமிச்சைச் சாறு சேர்த்து பின்பு வடிகட்டி குளிரவைத்து ஈரம் போகத் துடைத்து ப்ரீஸ் செய்யவும்.

ப்ளாஞ்ச் செய்யும் நேரம் : 3 நிமிடங்கள்.

• **பச்சைப் பட்டாணி :** நல்ல பிஞ்சாகப் பார்த்து வாங்கி தோல் நீக்கி, ப்ளாஞ்ச் செய்யவும். அவ்வாறு செய்யும் பொழுது பாத்திரத்தை அசைத்து விடவும், சூடு பரவலாகப் படும்படி பார்த்துக் கொள்ளவும். பாலிதீன் பைகளில் போட்டு ஃப்ரீஸ் செய்யவும்.

ப்ளாஞ்ச் செய்யும் நேரம் : 1 நிமிடம்.

• **வெந்தயக் கீரை :** உப்பு சேர்த்து ஒரு நிமிடம் வைத்து குளிர்ந்த நீரில் சுத்தம் செய்யவும். ஈரம் போக நன்றாகப் பிழிந்து எடுத்து பாலிதீன் பைகளில் போட்டு ஃப்ரீஸ் செய்யவும்.

ப்ளாஞ்ச் செய்யத் தேவையில்லை.

• **காளான் :** பட்டன் காளான்களை வெண்ணெயில் ஒரு நிமிடம் வதக்கி ஒரு டப்பாவில் போட்டு ஃப்ரீஸ் செய்யவும்.

ப்ளாஞ்ச் செய்யத் தேவையில்லை

• **வெங்காயம் :** தோலுரித்து, நறுக்கி ப்ளாஞ்ச் செய்து பிளாஸ்டிக் டப்பாக்களில் வைத்து ஒரு துணியில் வைத்து ரோல் செய்து பின்பு ஃப்ரீஸ் செய்யவும்.

ப்ளாஞ்ச் செய்ய வேண்டிய நேரம் : 2 நிமிடம்.

• **தக்காளி :** கொதிக்கும் நீரில் போட்டு ப்ளாஞ்ச் செய்து தோலுரிக்கவும். பிறகு 5 - 10 நிமிடங்களுக்கு ஒரு பாத்திரத்தில் நீர் போக வதக்கிக் கொள்ளவும். ஆற வைத்து சிறிய சிறிய பாலிதீன் பைகளில் ஃப்ரீஸ் செய்ய வேண்டும்.

இந்த முறையில் நாம் பல வகையான காய்கறிகளைப் பதப்படுத்தி மாதக்கணக்கில் பயன்படுத்தலாம்.

- ஜீனத் சஹிதா, கீழக்கரை.

படங்கள் : **ஸ்ரீஹரி**

நன்றி :

பழமுதிர் நிலையம் (தி. நகர்)

பட்டு முதல் பொட்டு வரை!



நாங்கள் ரசித்த சில விளம்பர வாசகங்கள்!

1. கோவைக்கு அருகில் உள்ள தடாகம் என்ற சிற்றூரில் ஒரு கடையின் விளம்பரம்.

'பட்டு முதல் பொட்டு வரை' ஒரே இடத்தில் கிடைக்கும்.

(துட்டு இருக்கிறவங்களுக்குத்தானே?)



2. திருக்கடையூர் கோவில் வாசலில் உள்ள ஒரு விளம்பரப் பலகை

'ஸ்ரீ அனுமார் தங்கும் விடுதி' -

(அடிக்கடி வருவார் போலிருக்கிறது!)

3. சின்னார் வனத்துறையினர் அறிவிப்பு :-

'யானைகளைச் சீண்டாதீர்கள். தப்பிப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.'

(தப்பிப்பது தவறு போலிருக்கிறது!)



4. குற்றால அருவிக்கரையில் ஓர் அறிவிப்பு

'ஜட்டி மட்டும் அணிந்து குளிக்கத் தடை.'

(ஐயோ!)

- லலிதா ராம்ஜி,
கோவை - 18.

காதல் நாரைகள்!

சிறுகதை

கடற்கரையையொட்டி மிக வேகமாகத் தன் நடையைத் தொடர்ந்து கொண்டிருந்தான் சங்கர். கதிரவன் தன் ஆரஞ்சு நிறக் கைகளை வீசித் தங்கப் பந்தாகக் கடலில் இருந்து மேலே ஏறிக் கொண்டு இருந்தான். சங்கரின் மனத்திலும் எண்ண அலைகள் ஓடிக் கொண்டிருந்தன.

'எனக்கும் திவ்யாவுக்கும் மணமாகி ஐந்து வருடங்கள் ஆனந்தமாக ஓடிவிட்டன. இன்னும் எங்கள் அன்பின் பூ மலரவில்லையே! இன்று அம்மாவும் திவ்யாவும் மருத்துவப் பரிசோதனை செய்யலாம்... என்கின்றனர். மருத்துவப் பரிசோதனை செய்தால் என்னைப் பற்றிய உண்மை வெளியே தெரிந்துவிடுமே! பிறகு உறவினர் வட்டமும், ஊரும் என்னைக் கண்டு எள்ளி நகைக்குமே. டாக்டர் நண்பன் சரத் தொடர்ந்து மாத்திரை சாப்பிடச் சொன்னானே நான் அதைச் சரியாக செய்யவில்லை! இந்த இக்கட்டில் இருந்து எப்படி விடுபடுவது?

'சே! ஏன்தான் இந்த அம்மா குழந்தை குழந்தை என நச்சரிக்கிறாளோ... தெரியவில்லை. குலம் விளங்க வேண்டுமாம்! தங்கள் குலப் பெருமையை உலகுக்குப் பறைசாற்ற ஒரு பள்ளிக்கூடம் அல்லது மருத்துவமனை என ஏதாவது கட்டலாமே' எனச் சிந்தித்தபடியே நடந்தவன் எதிரில் வந்தவரின் மீது மோதிவிட்டான்.

''ப்ளீஸ், ஸாரி சார்'' என்றபடியே நிமிர்ந்தவன், ''அட, சரத் நீயா? எப்படா சென்னைக்கு வந்த?''

''நேத்துதாண்டா வந்தேன்'' என்றவன் அவனை சற்றே பின்னோக்கி நகர்ந்து உற்றுப் பார்த்து ''என்னடா ஆச்சு? ஏன் காலையிலேயே உன் முகம் முகாரி பாடுது? என்ன பிரச்னை?''

''ப்ச்... என் மனசுல நீ வைச்ச புள்ளி, பெரிய்ய கரும்புள்ளியாகி என்னை மிரட்டுது சரத்.''

''என்னடா சொல்ற? நான் தந்த மாத்திரைகளையெல்லாம் சரியா சாப்பிடுறதானே!''

''போடா, எனக்கு அதைப்பத்தி நினைத்தாலே வெறுப்பாக இருக்கு. இன்



னிக்கு திவ்யாவும் அம்மாவும் மெடிக்கல் டெஸ்ட்டுக்குப் போயே ஆகணும்னு கட்டாயப்படுத்துறாங்க."

"இதுக்குப் போய் ஏண்டா முகாரி ராகம் பாடுறே? நம்ம டாக்டர் தேவி கிளினிக்குக் கூட்டிட்டு வா. நானே பார்த்து விடுகிறேன்" என நண்பனின் தோளை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தான்.

"டேய், உண்மை தெரிஞ்சா திவ்யா என்னைப் பத்தித் தவறா நினைக்க மாட்டாளா?"

"நிச்சயமா நினைக்க மாட்டாங்க. நம் பாரதப் பண்பாட்டின் ஆணிவேர்களில் பாயும் அளவுக்கு இன்னும் மேலை நாட்டு நாகரிகம் என்கிற பூஞ்சைக் காளான்கள் இன்னும் படரவில்லை" என்றார் டாக்டர் சரத் உறுதியாக.

"அன்று இரவு சற்றே முகம் வாடி சோர்ந்து இருந்த திவ்யாவிடம் "ஏன் திவ்யா இவ்வளவு கவலைப்படறே? நமக்குக் குழந்தையே பிறக்காதுன்னா டாக்டரம்மா சொன்னாங்க! ஒரு ஆறு மாசம் மருந்து, மாத்திரைச் சாப்பிட்டுச்

மதிசரண்



சத்தான ஆகாரமாகச் சாப்பிடச் சொன் னாங்க. அவ்வளவுதானே!''

"இல்லைங்க! இதுக்காக என்னைக் கோபித்துக் கொள்ள மாட்டீங்களே! உங்களுக்கு எந்தப் பொருளும் முழுமையா இருந்தாதானே பிடிக்கும்னு சொல்வீங்க?"

"சரிம்மா, அதைப் பற்றி இப்ப என்ன?"

"வந்துங்க... என் கர்ப்பப்பை ரொம்ப வீக்கா இருக்குன்னு சொல்லிட்டாங்க. குறைந்தது ஒரு வருடமாவது சிகிச்சை செய்யணும்னு சொல்றாங்க."

"திவ்வி, நீ இதைப் பெரிய்ய விஷயமா நினைத்துக் கவலைப்படாதே! அப்பப்பா... என்ன பெண் நீ!" அணைத்துக் கொஞ்சி னான்.

"வீணா கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்காதே! நாளைக்குக் காலையில நாம் ஏற்கெனவே திட்டமிட்டபடியே வண்டலூர் போறோம்," என்றவன் நன் றாக சாய்ந்து படுத்து அடுத்த சில நிமிடங் களில் தன்னை நித்திராதேவியிடம் ஒப் படைத்துவிட்டான்.

திவ்யாவுக்குச் சுத்தமாகத் தூக்கம் வரவில்லை.

அன்று காலை மருத்துவமனையில் டாக்டர் சரத்தும், டாக்டர் தேவியும் சொன்னவையே மனத்திரையில் மீண்டும் மீண்டும் ஓடின.

"மிஸஸ் திவ்யா, உங்களிடம் எந்தக் குறையும் இல்லை. ஆனால் மிஸ்டர் சங்கருக்குத்தான் விந்து அணுக்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருக் கிறது. அதற்குத் தேவையான மருந்து, மாத்திரைகள் தருகின்றோம். அதனுடன் நார்ச்சத்து மிகுந்த காய்கறிகள், கீரைகள், எள் முதலியன கொடுங்கள். அத்துடன் நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்யுங் கள்."

"சரிங்க", என்றபடி எழுந்தவளிடம் "ஒரு நிமிஷம் மிஸஸ் திவ்யா! சங்கர், என்னுயிர் நண்பன். அவன் தனது குறையை உங்களிடம் கூட பகிர்ந்து கொள்ளத் தயங்குகிறான் என்பது உண்மை. அவனைப் புரிந்து கொள்ளுங் கள். இன்று விஞ்ஞானம் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்திருக்கிறது. நம்பிக் கையுடன் இருங்கள்" என ஆறுதலாகப் பேசினார்.

டாக்டர் சரத் எவ்வளவு உயர்வான வர்! தன் நண்பன் நினைப்பது தவறு என்றபோதும் அதை மென்மையாகவே சுட்டிக்காட்டினார்.

"இந்த சங்கர்தான் ஆகட்டும், நாள என்னைப் பற்றித் தாழ்வாகப் பேசிய போதும் தன் குறையை வெளிக்காட்டவே இல்லையே. தன் மனம் திறந்து பேசி தன் மனக்காயங்களுக்கு மருந்திட்டு இருக்க லாமே!"

மின்னலாகப் பளிச்சிட்டது ஓர் எண்ணம்! ஒருவேளை தன்னுடைய ஆண்மைக்கு அடையாளச் சின்னமாகக் குழந்தையை மட்டுமே நினைக்கிறாரோ? வேறு அடையாளமே இல்லையா? எந்தச



உடம்பு எடை போட்டு விட்டதா?

உடம்பு எடை போட்டு விட்டதே என்று கவலையில் உட்கார்ந்திருந்தீர்கள் என்றால் இன்னும் வெயிட் போடும். கவலை வேண்டாம். வாரம் ஒருமுறை முற்றியப் பப்பாளிக் காய்களைத் துண்டுகளாக்கிக் குழம்பு வைத்தோ, கூட்டு வைத்தோ பகல் உணவில் சாப்பிட்டு வந்தால் உடலிலுள்ள துர்நீர் வெளியேறி, ஊளைச்சதை கரையும்!

- ஜெகா, கும்பகோணம்.

சூழ்நிலையிலும் நேர்மையாக இருப்பது, தன்னம்பிக்கையுடன் எதையும் எதிர்கொள்வது, செய்யும் செயலை மிக உயர்வாகச் செய்து, திறமையுடன் பணி புரிவது போன்றவையும் ஆண்மைக்கு அழகுதானே; அடையாளம்தானே!


இன்றைய தலைமுறையினர் நற்சிந்தனைகளும், நல்லவையும் எவை எனத் தெரியாமல் தடுமாறி தவிக்கின்றனர். இன்றைய மீடியாக்களும் செய்தித்தாள்களும் தவறான கருத்துகளை இளம் பருவத்திலேயே விதைத்து விடுகின்றனவோ! இல்லாவிடில் என் சங்கர் நான் அவ்வளவு தூரம் இறங்கி பேசிய பின், சாரி திவ்வி, 'குறை என்னிடம்தான்' எனப் பேசி ஒரே நொடியில் ஆறுதல் தேடி ஓடி வந்து இருப்பாரே!'

ஒரு நீண்ட பெருமூச்சுடன் போய்ப் படுத்தாள்.

அதிகாலை மென்இருளில் இருவரும் காரில் கிளம்பினர். முந்தைய நாள் இரவு, தன் பனி நீரால் இலைகளைக் குளிப்பாட்டிப் 'பளிச்' என்று ஒளிரச் செய்தன.

வண்டலூரை அடைந்ததும் ஒவ்வோர் இடமாகப் பார்க்க... அங்கிருந்த பணியாளர்கள் ஒவ்வொரு மிருகங்களைப் பற்றியும், அவற்றின் விசேஷ குணங்களைப் பற்றியும் சொன்ன விஷயங்கள் வியக்க வைத்தன. உலகம் உள்ளவரை அவற்றின் பண்புகளும் இயல்புகளும் மாறாது. ஆனால் மனிதன் தன் சுயநலத்திற்காக, தனது தேவைக்காக, தனது குணங்களைப் பச்சோந்தித்தனமாக மாற்றிக் கொள்கிறான். கடவுள் மனிதனுக்காகத் தந்த நேர்மை, உண்மை, பாசம், நேசம், அன்பு போன்றவற்றை இன்று தேடித்தானே கண்டுபிடிக்க வேண்டியுள்ளது என்கிற எண்ணமே திவ்யாவின் மனத்தில் ஓடியது.

என் சங்கர் மட்டுமல்ல, எத்தனை ஆண்கள் தங்கள் குறையை வெளிப்படையாக ஒத்துக்கொண்டு சிகிச்சைக்குச் சம்மதிக்கின்றனர்? இதில் பலரது குறைபாட்டுக்குக் காரணமே அவர்கள் செய்யும்



ரசத்துக்குப் பச்சைக் கொத்துமல்லித் தழை இல்லாவிட்டால் தனியாவை நெய்யில் வறுத்துப் பொடி செய்து ரசத்தை இறக்கும் சமயத்தில் போட்டு விடுங்கள். ரசம் சுவையாக இருப்பதோடு ரசத்தின் வாசனை அடுத்த தெரு வரை மணக்கும்!

- டி. சாந்தா, ஹைதராபாத்.

வேலையும் சுற்றுப்புறச் சூழலும்தான்! அதை விவரமாகப் பேசியறிந்து மருத்துவரிடமும் தன் மனைவியிடமும் கலந்து பேசித் தங்களை ஒரு மாற்றுச் சூழ்நிலைக்குத் தயார் படுத்திக் கொண்டாலே நல்ல பலன் கிடைத்துவிடும். மீதியை உணவும், மருத்துவமும் முழுமையாகத் தந்துவிடும்.

அப்போது "திவ்வி, இங்க பாரேன்- இந்த நாரைகளை! எவ்வளவு உயரமா இருக்கு!" என்றான் ஆச்சரியக் குரலில் சங்கர்.

அப்போது அங்கிருந்தவர் "சார், இது குணத்திலேயும் உயர்வானது. இவை எப்போதுமே ஜோடியாகத்தான் வானத்தில் மிதக்கும். ரொம்ப அன்பா நெருங்கிப் பழகும். ஒருதடவை ஜோடி சேர்ந்தா கடைசி வரை பிரியவே பிரியாது. இணையைப் பிரிந்து விட்டால் பட்டினியாகவே இருந்து தன் உயிரையும் விட்டு விடும். இதன் பெயர் சாரஸ் ஸ்கிரீன். இது இராஜஸ்தான் காடுகளில் அதிகமாக இருக்கும்," என்றார்.

"ரொம்ப உயர்ந்த காதல் பறவைகள் தான் திவ்யா" என்றான்.

"ஆமாங்க. மனிதர்களில் கூட இத்



சாம்பிராணிப் புகை போட ஓர் அருமையான வழி என்று மே மாத மலரிலும், ஜூன் 26ஆம் தேதி மலரிலும் இரண்டு சகோதரிகள் தங்கள் குறிப்பில் எழுதியிருந்தார்கள். எங்கள் பூனே நகரில் எலெக்ட்ரிக் சாம்பிராணி காண்டி கிடைக்கிறது. ஸ்விட்ச் போட்டால் இரண்டே நிமிடத்தில் நறுமணமுள்ள வாசனை. பயம் ஏதும் இல்லை. விலை ரூ. 100/- மட்டும். கிடைச்சா வாங்கிடுங்க!

- விசாலாக்ஷிமூர்த்தி, பூனே - 38.

தனை உயர்வான குணம் மிக்கவர்கள் குறைவுதாங்க. எத்தனைபேர் தங்கள் மனைவியிடம் உண்மையே பேசுறாங்க. தன் தவறை ஒப்புக்கறாங்க?"

சட்டென சங்கரின் மனத்தில் முள் தைத்தது. "ரொம்ப நேரமாச்சு திவ்வி. சாப்பிட என்ன கொண்டு வந்தே?" என்று பேச்சை மாற்றினான்.

"இடியாப்பமும், கொத்தமல்லிச் சட்டினியும். வாங்க அப்படி உட்கார்ந்து சாப்பிடலாம்" என எடுத்து வைத்தாள்.

இனியும் உண்மையை மறைத்தால், தன் வாழ்க்கையும் இந்த இடியாப்பத்தைப் போல சிக்கல் ஆகிவிடும் என எண்ணிய சங்கர் தன்னைப் பற்றி டாக்டர் சரத் கூறியதை திவ்யாவிடம் மெல்லிய குரலில் வருத்தத்துடன் சொல்ல,

அதைக் கேட்ட திவ்யா "இதுக்குப் போய் ஏன் கலங்கித் தவிக்கிறீங்க? முடிஞ்ச அளவு முயற்சி செய்வோம். முயற்சி நம் கையில்; முடிவு கடவுளின் கைகளில். நமக்கென குழந்தை பிறந்தால் மகிழ்ச்சியுடன் வரவேற்போம். இல்லாவிட்டால் ஒரு குழந்தையைத் தத்து எடுத்து மகிழ்ச்சியுடன் வளர்ப்போம்" என்றாள் திடமான குரலில்!

அது பொது இடம் என்பதையும் மறந்து திவ்யாவின் கையைப் பிடித்து மென்மையாகக் கன்னத்தில் பொருத்தினான்.

கடந்த ஓராண்டாக அவன் மனத்தில் ஊவா முள்ளாய் உறுத்திய துன்டம், கண்ணீராய் வெளிப்பட்டது. கண்கள் மகிழ்ச்சியில் மின்னலாய் ஒளிர, "ரொம்ப ரொம்ப தாங்க்ஸ், திவ்வி" என்றான்.

திவ்யா மனத்தில் "நாங்களும் சாரஸ் ஸ்கிரீன் ஜோடிதான்" என நினைத்துப் பெருமிதம் கொண்டாள்.

லட்டு பிடிக்கும்போது ஏதாவது பழ எஸென்ஸை சிறிது விட்டுக் கலந்து பிடித்தால் லட்டின் சுவையும், மணமும், குறிப்பாக குழந்தைகளை மிகவும் கவரும்!

- ஆர். லட்சுமி, மதுரை -



அன்புள்ள மங்கையர் மலர் வாசகியரே...

வணக்கம்.

நமது குடும்பத்திலிருந்து மங்கையர் மலர் தவிர, குழந்தைகளுக்காக கோகுலம் ஆங்கிலம் மற்றும் கோகுலம் தமிழ் மாத இதழும், 65 வருட பாரம்பரியப் பத்திரிகையான கல்கி வார இதழும் வெளிவருகின்றன.

வார இதழாக வெளிவரும் கல்கி, குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் படித்துப் பாதுகாக்க வேண்டிய காலப் பெட்டகம். அரசியல், ஆன்மிகம், ஆரோக்கியம், அறிவு மற்றும் கலை என்னும் ஐந்து பிரிவுகளின் கீழ், ஆக்கபூர்வ வளர்ச்சிக்குத் தேவையான விஷயங்களை, ஆபாச கலப்பின்றி, அக்கறையோடு வழங்கி, வாசகர்களை அடுத்த கட்டத்துக்கு அழைத்துச் செல்கிறோம். படித்துத்தான் பாருங்களேன்!

உங்கள் அனைவரது குடும்பத்திலும் கல்கி ஓர் அங்கமாக இருக்க வேண்டும், மங்கையர் மலர் போலவே....

கல்கி

குடும்பத்துடன் படிக்க...

படிக்குமுன் பாருங்க...

வாரந்தோறும் நெஞ்சை அள்ளும்
உன்னத பக்கங்கள்...



டாக்டர் **சுதா சேஷய்யன்** வழங்கும்

ஸ்ரீ லலிதா

(லலிதா சகஸ்ரநாம விளக்கம்)

அழகு தமிழில் ஆன்மிக அற்புதம்!

துள்ளித் திரிந்த காலம்



—வாழ்வின் மறக்க முடியாத நாட்கள்
பற்றி பிரபலங்கள் பேசும் பகுதி



சுஜாதா எழுதும்

வாரம் ஒரு பாசுரம்!

பக்தி மணம் கமழும் இலக்கியப் பெட்டகம்

டாக்டர் **எல். மகாதேவன்** விளக்கும்...



தேவ மருந்து-II


ஆயுள் வளர்க்கும் ஆயுர்வேதம்

ம!



பட்டுக்கோட்டை பிரபாகர்
மிரட்டும்
மர்மம் கலந்த குடும்பத் தொடர்

என்
கடவுள்...
என்
தோழன்...



-சுவாமி சுத்தானந்தாவின்
உள்ளத்துக்கு வளம் சேர்க்கும்
உற்சாகப் பயணம்!

இன்னும்....

* வாரம் ரூ. 2000 பரிசுப் போட்டி
* அருள்வாக்கு
* அமரர் கல்கியின் படைப்புகள்
* ராசிபலன்
* சிறுகதைகள்
* தொடர்கதைகள்
* வெற்றிக் கதைகள்
* மருத்துவக் கட்டுரைகள்
* தன்னம்பிக்கைப் பக்கங்கள்
* வாசகர் பக்கங்கள்

அத்தனையும்
எட்டே ரூபாயில்...
அள்ளிக்கோங்க....!

புதுசா சந்தா கட்டுங்க!

*"வாரா வாரம் வித்தியாசம்
ஞாயிறுதோறும் அட்டகாசம்" -
அதாங்க கல்கி!*

மங்கையர் மலர் வாசகர்களுக்கு
பிரத்யேகமாக கல்கி வழங்கும்
சிறப்பு சந்தா சலுகை!!

ஓராண்டு சந்தா (52 இதழ்கள்)

~~ரூ 440/-~~ ரூ. 330/-

6 மாத சந்தா (26 இதழ்கள்)

~~ரூ 220/-~~ ரூ. 165/-

☐ எனக்கு ஒரு புது சந்தா ப்ளீஸ்!
☐ என் நண்பருக்காக ஒரு சந்தா செலுத்துகிறேன்
☐ எனக்கும் என் நண்பருக்குமாக சந்தா வேணுங்க!

இத்துடன்

☐ ரூ. 165/- ☐ 330/- ☐ 660/-

அனுப்பியிருக்கிறேன்.

என் முகவரி :

....
....
....
....

நண்பரின் முகவரி :

....
....
....
....

* இந்தச் சலுகை 2 மாதங்களுக்கு - டிசம்பர் 31, 2006 வரை மட்டுமே.
* சந்தாவுக்கான தொகையை காசோலை, டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக 'கல்கி' என்ற பெயருக்கு எடுத்து அனுப்புங்கள்.
* வெளியூர் காசோலை அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக அனுப்ப வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
சர்க்குலேஷன் மேனேஜர்,
பரதன் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,
கல்கி பில்டிங்ஸ், 47-NP ஜவாஹர்லால் நேரு
சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

23.11.2006 ஸ்ரீ சத்யசாயி ஜயந்தி

ஸ்ரீ சாயி அமுதம்!



'ஸ்த்ரீ' என்ற சொல் ஸ-த-ர என்ற மூன்று அக்ஷரங்களைக் கொண்டது. 'ஸ' என்பது ஸத்வ குணத்தையும், 'த' என்பது தாமஸ குணத்தையும் 'ர' என்பது ராஜஸ குணத்தையும் குறிக்கும். ஆக, இந்த முக்குணங்களின் சேர்க்கைதான் ஸ்த்ரீ.

ஸத்வ குணத்தின் காரணமாக, பெண்ணானவள், பொறுமையும், சமதிருஷ்டியும், சகிப்புத்தன்மையும், நற்குணங்களும் நிரம்பியவளாகத் திகழ்கிறாள்.

தாமஸ குணத்தின் காரணமாக, அவள் அடக்கத்தையும், எதைச் செய்வதிலும் சற்று தயக்க சுபாவத்தையும் பெறுகிறாள்.

அவளில் உள்ள ராஜஸ்குணம், அவளுக்குத் தைரியத்தையும், தேவையான சமயங்களில் துணிச்சலையும், மனோதிடத்தையும் தருகிறது.

இம் மூன்று குணங்களில் பெண்ணில் அதிக அளவில் காணப்படுவது ஸத்வ குணமே. ஆனால் மற்ற இரண்டு குணங்களின் பாதிப்புகளினால் இந்த ஸத்வ சுபாவம் அடக்கப்பட்டு ராஜஸம் மேலோங்கிக் காணப்படுகிறது.

பெண்ணுக்குப் பெருமை அவள் செய்யும் செயல்களால்.

ஆணுக்குப் பெருமை அவன் செய்ய அஞ்சித் தவிக்கும் செயல்களால்.

ஒரு நாட்டின் பெண்கள் ஆனந்தமாக, ஆரோக்கியமாக, பவித்திரமாக இருப்பார்களேயானால் அந்தத் தேசத்து ஆண்கள் பலவான்களாக, நேர்மையாளர்களாக, ஆனந்தமாக இருப்பார்கள்.

அன்பைப் பொழிந்து நாளைத் தொடங்குங்கள். அன்பை நிறைத்து நாளை நடத்திச் செல்லுங்கள். அன்பைப் பகிர்ந்து நாளைக் கழியுங்கள். அன்பின் சங்கமத்தில் நாளை முடியுங்கள்.

- பகவான் சத்யசாயிபாபா.

தொகுப்பு : **குமாரி குப்புசாமி,**
பாண்டிச்சேரி.

மனபலம், தன்னாற்றல், ஆரோக்கியத்திற்கு உகந்த சக்தி ருத்ராட்சம்!

சகல சுகங்களையும், வளங்களையும் தரும்



திருஅண்ணாமலையில்
கார்த்திகை தீபத் திருநாளில்




நடமாடும் தெய்வங்களாக இருக்கின்ற சாதுக்களுக்கு
நடைபெறும் மகேஸ்வர பூஜையிலும் (3-12-2006)

கிரிவலம் வரும் பக்தர்களுக்கு நடைபெறும் அன்னதானத்திலும் நேரில் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம்

ஸ்ரீஅன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட் சிவமடத்தில் நடத்தும் 9ம் ஆண்டு அன்னதான சேவை

பஞ்சபூத ஸ்தலங்களும் இறைவன் அக்னிரூபத்தில் காட்சியளிக்கும் புண்ணிய க்ஷேத்ரம் திருஅண்ணாமலை. பாவமும் தாளமும் செய்யின் அளவற்ற நன்மை அளிக்கும் தென் கயிலாயமான திருஅண்ணாமலையின் மத்திய பாகத்திலும், அடிவாரத்திலும் குகைகள், தீர்த்தங்கள் நிறைய உள்ளன. அவைகளில் சாதுக்கள் இன்றும் வாசம் செய்து வருகின்றனர். சித்தர்கள் நிறைந்திருக்கும் சிறப்பு வாய்ந்த திருஅண்ணாமலையில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரமங்கள் உள்ளன. இங்கு சாதுக்கள்



துறவறத்திலிருந்துகொண்டு பூஜை, தவம், ஜெபம், மந்திர உபதேசம் முதலிய நற்காரியங்களைச் செய்து உலக நலனுக்காக தொண்டாற்றி வருகிறார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த சாதுக்களை திருஅண்ணாமலையில் உள்ள அனைத்து ஆசிரமங்களிலிருந்தும் அழைத்து விருந்தோம்பல் செய்து, ருத்ராட்சமாலை அணிவித்து அவர்களுக்கு கார்த்திகை தீபத் திருநாளில் திருஅண்ணாமலையில் உள்ள சிவ மடத்தில் மகேஸ்வர பூஜை செய்து 'சாது பண்டாரா' நடத்த திட்டமிட்டுள்ளோம். இதில் எல்லா சாதுக்களும் ஒன்றாக அமர்ந்து பசியாறுகின்ற அரிய காட்சிக்கு நிகரானது வேறு ஏதுமில்லை. இந்த சாதுபண்டாரா இறைபணிக்கு தங்களால் இயன்ற நன்கொடை வழங்கி சாதுக்களின் ஆசியைப் பெற்று சகல ஐஸ்வரியமும் ஸ்ரீலக்ஷ்மி கடாட்சமும் பெற்று நலமுடன் வாழ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சாதுக்களுக்கும் கிரிவலம் வரும் பக்தர்களுக்கும் கார்த்திகை தீபத் திருநாளில் நடைபெறும் அன்னதானத்திற்கு தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்

★ ரூ. 500 - அனுப்பும் அன்பர்களுக்கு, 5 முகம் (ருத்ர சிவம்) கொண்ட ருத்ராட்சம் 10 அனுப்பி வைக்கப்படும்.
(5 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு தோஷங்கள் நிவர்த்தியாகும். ரத்த அழுத்தம், இதய கோளாறுகளை சீர் செய்யும்).

★ ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு, 3 முகம் (மஹா சரஸ்வதி) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
(3 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு அறிவு வளர்ச்சி, கல்வி மேம்பாட்டிற்கும் உதவும். குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் பொருத்தமானது).

★ ரூ. 2000 - அனுப்பும் அன்பர்களுக்கு, 7 முகம் (சப்த ரிஷி) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
(7 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு தடைபட்ட திருமணம் நடக்கும். அனைத்து தடைகளையும் தகர்த்து வெற்றி ஒன்றையே அளிக்கும்).

★ ரூ. 3000 - அனுப்பும் அன்பர்களுக்கு, 11 முகம் (வீர ஹனுமான்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
(11 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு கவலைகள் தீரும். மகிழ்ச்சி பொங்கும். குழந்தை இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் தரும்).

★ ரூ. 5000 - அனுப்பும் அன்பர்களுக்கு, கவுரி சங்கர் (சிவ-பார்வதி) ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
(கவுரி சங்கர் ருத்ராட்சத்தை அணிபவர்கள் கணவன் - மனைவி ஒற்றுமையுடன் வாழ்வார்கள். நீண்ட ஆயுளையும் மன அமைதியையும் தரும்).


★ ரூ. 10000 - அனுப்பும் அன்பர்களுக்கு, **ருத்ராட்ச மரம்** ஒன்று அனுப்பி வைக்கப்படும்.
(சகல ஆன்மீக சக்திகளையும், ஆத்ம பலத்தையும், ஆரோக்கியத்தையும் வழங்கும் ருத்ராட்ச மரத்தை தாங்கள் விரும்பும் இடத்தில் நட்டு சிவனருள் பெற வேண்டுகிறோம்).

சிவனடியார்களுக்கும், சிவ அன்பர்களுக்கும் ருத்ராட்சத்தை தானமாக அளிப்பது பெரும் சிவ புண்ணியம். தானங்களில் இதற்கு இணையானது வேறு இல்லை

சிவபெருமானின் கண்களில் இருந்து தோன்றியது ருத்ராட்சம். அதை அணிபவர்களை அவர் கண்போல காப்பாற்றுவார். மேலும் கயிலாயத்துக்கே சென்ற பயனை அடைவலாம். 'நீராடும் போது ருத்ராட்சம் அணிந்திருந்தால் கங்கையில் குளித்த புண்ணியம் கிடைக்கும்.' நம் வாழ்வில் ஏற்படும் துன்பங்களும் படிப்படியாக குறைந்துவிடும். 'ருத்ராட்சம் அணிபவருக்கு லட்சுமி கடாட்சம் ஏற்பட்டு பணவசதி பெருகி அனைத்து நலனும் கிடைக்கும்.' சர்க்கரை நோய், இதய நோய், ரத்த அழுத்தம் போன்றவை தீரும்.

அன்னதானத்திற்கு நன்கொடை அனுப்பும் அன்பர்கள் சார்பாக, தங்களுடைய பிரார்த்தனைகளுக்கு ஏற்ப சிவ மடத்தில் தீபத் திருநாளில் தீபம் ஏற்றுவதும், ஸ்ரீசிவபஞ்சாட்சர மகா வில்வ ஹோமமும் நடைபெறும்.

சாதுக்களுக்கும் கிரிவலம் வரும் பக்தர்களுக்கும் தீபத் திருநாளில் நடைபெறும் அன்னதானத்திற்கு தாங்கள் அனுப்பும் நன்கொடையை Sri Annapoorani Annadhana Seva Trust என்ற பெயரில் Cheque / D.D / M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்



நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு
Cheque / DD / MO கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:


சிவ மடம்

கிரிவல சாலை, அடி அண்ணாமலை (P.O.) திருஅண்ணாமலை - 606 601
Tel : 044-2495 9302 Fax:044-4206 6525



ருத்ராட்சத்தை ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் அனைவரும் அணியலாம்
ருத்ராட்சம் பற்றிய விரிவான விவரம் அறிய: 93400 22233

சம்பத்தில் ஒரு மருத்துவமனையில் டாக்டருக்காகக் காத்திருந்த நேரத்தில் பக்கத்தில் இருந்த ஒரு பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்தேன். அந்தப் பெண்ணுக்கு சுமார் 40 வயது இருக்கலாம். ஃபிளாட் ஃபுட்,



முடிச்சுப் போடாதீங்க!

மற்றும் முட்டி வலி காரணமாக ஆர்த்தோ டாக்டரிடம் சிகிச்சை பெற வந்திருந்தார். பேசிக் கொண்டிருக்கும் போது புலம்பித் தள்ளி விட்டார், தனது வேதனையை.

அவள் வீட்டிலிருக்கும் போதும் ஃபிளாட் ஃபுட்டுக்காக பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட செருப்பை அணிந்து கொண்டு நடக்கச் சொல்லியிருக்கிறார் டாக்டர். அவளும் வீட்டுக்கு ஒரு ஜோடி, வெளியில் போக ஒரு ஜோடி என்று இரண்டு ஜோடி செருப்பு தைத்துக் கொண்டாள். அதில்தான் ஆரம்பித்தது பிரச்னையே. அவளுக்கும் முறையே 8வது, 6வது படிக்கும் இரண்டு குழந்தைகள், ஆபீஸ் செல்லும் கணவர், வயதான மாமனார், மாமியார் என்று கூட்டுக் குடும்பம். காலை வேளையில் சமையலறையில் வேலை நெட்டி முறிக்கும். இதில் செருப்புப் போட்டுக் கொண்டு சமையலறையில் நுழைந்தால் மாமியார் முணுமுணுக்கிறார். அது மட்டுமல்ல. சமையலறை உள்ளே பூஜை அலமாரி இருக்கிறது. முதலில் முணுமுணுத்த மாமியார், பிறகு கத்தவே ஆரம்பித்து விட்டார்.

"இது என்ன பழக்கம்? சமையலறையில் செருப்புப் போட்டுக் கொண்டு? பூஜை அலமாரி வேறு இருக்கிறது. இப்படி வருவதானால் நீ உள்ளேயே வரவேண்டாம்!"

இதற்குப் பயந்து அந்தப் பெண் செருப்புப் போடுவதை விட்டாள். டாக்டர் செருப்புப் போடவில்லையென்றால் நீங்கள் என்ன பிஸியோதெரபி எடுத்தாலும் சரியாகப் போகாது என்று கோபித்துக் கொள்கிறார்.

"தமது மாமியார் ஓரளவு படித்தவர்தான். டீவி. பார்ப்பார், புத்தகங்கள் படிப்பார். ஆனால் எனக்கு வந்துள்ள இந்த வலியைப் புரிந்து கொள்ளாமல் இப்படிக் கோபிக்கிறார். வலியால் தவிக்கிறேன். செருப்புப் போட்டு வேலை செய்தால் இதமாக இருக்கிறது. என் மாமியாருக்கு வயதாகிறது. நான் நன்றாக இருந்தால்தானே அவருக்கே பணிவிடை செய்ய முடியும்? நான் நடக்கவே முடியாமல் போய் விட்டால் இந்த வீடு எப்படித் திண்டாடும்? என் மாமியார் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாரே!" என்று புலம்பித் தள்ளினாள் அந்தப் பெண்.

கண்ணாடி போடுவதையோ, ஹியரிங் எய்ட் பொருத்திக் கொள்வதையோ நாம் தவறாக எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் செருப்புப் போடுவதை ஆசாரத்திலும் ஆன்மிகத்திலும் சம்பந்தப்படுத்திப் பார்த்து அவதிப்படுகிறோம்.

இந்த வலியுடன் வீட்டிற்காக உழைக்கிறாளே என்று பரிவு காட்டி ஒத்துழைப்புக் கொடுக்க மாமியார்கள் முன்வருவார்களா?

- வேதவல்லி சாரி,
சென்னை - 40.

பொடி விஷயம்

ஸ்ரீனிவாசன் என்ற பெயரில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வேலை பார்க்கும் அந்த மிகப் பெரிய நிறுவனத்தில் வழுவட்டை ஸ்ரீனிவாசன் என்று சொன்னால் தெரியாதவர்களே கிடையாது. அவர் தலை, வழுக்கையாக இருப்பதால் அப்படி ஒரு பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று நினைத்த என் கணிப்பு தவறாகி விட்டது.

புதிதாக அங்கு வேலைக்குச் சேர்ந்த நான் அவரிடம் போய், "சார்... கேன்டீன் எங்கேயிருக்கிறது?" என்று கேட்டேன். "இது கூடத் தெரியாமல் சுத்த வழுவட்டையாக இருக்கிறாயே! எழுச்சியாக என்னுடன் புறப்படு; நான் கூட்டிப் போகிறேன்" என்றார். கேன்டீனிலும் பலரிடம் பேசும் போதும் வழுவட்டை என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்தினார்.

மொத்தத்தில் அவருடன் பழகியதில், எழுச்சி இல்லாதவை எல்லாம் வழுவட்டை என ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.



ஜெயஸ்ரீ ராஜ் நினைவு சிறுகதைப் போட்டி
ரூ.1,000 பரிசுக் கதை

வ.வ.ஸ்ரீ.க்கு அருகிலேயே சற்று எதிர்ப்புறமாக என்னுடைய இருக்கை அமைந்திருந்ததால் அவருடைய அன்றாடப் பணிகளைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மிகவும் கலகலப்பாகப் பழகும் அவரைச் சுற்றி எப்போதும் யாராவது வந்து போய்க் கொண்டே இருப்பார்கள். அவர் மேஜை மீது எப்போதும் 'பளபள' என்று இருக்கும் எவர் சில்வர் மூக்குப்பொடி டப்பா ஒன்று வைக்கப்பட்டிருக்கும். அவரை நாடி வருவோரை விட அந்த டப்பாவை நாடி வருவோரே அதிகம்.

பார்ப்பவர்களுக்கு அது ஓர் அல்பப் பொடி தர்மமாக இருந்தாலும், பொடி நுகர்வோர்களுக்கு அது ஒரு மிகப் பெரிய அன்ன தானத்துக்குச் சமமான தர்மம் போலும். வ.வ.ஸ்ரீ. தன்னிடம் வருபவர்களையெல்லாம் 'வாங்க வாங்க, இந்தாங்க, எழுச்சியாப் பொடி போட்டுட்டுப் போங்க' என்று பொடி டின்னை நீட்டும்போது, குங்குமச் சிமிழுடன் கொலுவுக்கு அழைப்பது போல எனக்குத் தோன்றும். நாளடைவில் ஸ்ரீனிவாசன் அவர்களிடமும் அவருடைய பொடி போடும் நண்பர்களிடமும் எனக்குப் பரிச்சயம் ஆகிவிட்டது.

ஒரு நாள் வ.வ.ஸ்ரீ ஆபீஸுக்கு லீவு போட்டு விட்டார். பலரும் வந்து ஏமாந்து போனார்கள். ஒரு சிலர் "ஸ்ரீனிவாசன் லீவு போடட்டும். பொடி டின்னுடன் லீவு போடலாமா?" என்று சலித்துக் கொண்டனர். மாற்று ஏற்பாடு செய்யாததில் அவர்களுக்கு, பொடி ஏறாத மூக்குக்கு மேல் கோபம் வந்ததைப் பார்த்தேன்.

அதில் ஒருவரிடம், "ஏன் சார்... நீங்கள் பொடி தனியாக வாங்கி வைத்துக் கொள்ளலாமே'' என்றேன். என்னை ஒருமுறை முறைத்த அவர், "தம்பி... நீ பொடிப் பையன். பொடியைப் பற்றி உனக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஓசியிலே பொடியை வாங்கி நாசியிலே போட்டால் கிடைக்கும் இன்பமே இன்பம். அதெல்லாம் அனுபவிச்சவனுக்குத்தான் தெரியும்'' என்றார்.



அவர்கள் சற்றுத் தள்ளி நின்று பொடி போட்டாலே நமக்குத் தும்மல் வரும் போது, அவர்களால் எப்படிப் பொடியைக் கனிச



லக்ஷ்மி கெங்காதரர்

மான அளவில் எடுத்து, வேட்டுக் குழாயில் கந்தகம் அடைப்பது போல, மூக்கினுள் அடைத்து, ஒரே இழுப்பாக இழுத்து, தும்மாமல் இருக்க முடிகிறது என்று எனக்கு அடிக்கடி ஒரு சந்தேகம் வரும். ஒருநாள் வ.வ.ஸ்ரீ.யிடம் இதுபற்றிக் கேட்டு விட்டேன்.

''தம்பி... பொடி டின் நிறைய பொடியை அடைத்தாலும் அந்தப் பொடி டின் தும்மல் போட்டுப் பார்த்திருக்கிறாயா நீ..'' என்றார். ''இல்லை சார், அது எப்படி தும்மல் போடும்?'' என்றேன் நான். ''அதுபோலத்தான் பொடி போடும் எங்களுக்கும் பொடி போடும் போது தும்மல் வராது. ஆனால் தேவைப்படும் போது நாங்கள் தும்மலை வரவழைத்துக் கொள்ள முடியும்'' என்று சொன்னவர், சொன்னபடி செய்தும் காட்டி விட்டார்.

கைவசம் எப்போதும் வைத்திருக்கும் பல கைக்குட்டைகளில் ஒன்றை கையில் எடுத்தார். அதன் ஒரு நுனியை விளக்குத் திரி போடுவது போலத் திரித்தார். அதை அப்படியே மூக்குத் துவாரத்தில் நுழைத்தார். முகத்தை அஷ்டகோணலாக்கிக் கொண்டு அடுத்தடுத்து பதினைந்து தும்மல்களைத் தும்மினார். ஓடி விட்டேன் நான் என் சீட்டை நோக்கி. இடி, மின்னல், மழை போன்ற அவருடைய தும்மல்கள் முடிந்து புயல் கரையைக் கடக்க கால் மணி நேரம் ஆனது. தன் பெண்ணின் நிச்சயதார்த்தத்தைப் பற்றி தன் வருங்கால சம்பந்தியிடம் டெலிபோனில் பேச இருந்த பக்கத்து சீட்டு பரந்தாமனுக்கு இவருடைய தும்மலால் மிகுந்த எரிச்சல். ''சனியன்.. சகுனத் தடை'' என்று திட்டிக் கொண்டிருந்தது, எனக்கு மட்டுமே கேட்டது.

''ஒருநாளைக்கு, பொடிக்கு மட்டும் எவ்வளவு ஸார், செலவு செய்கிறீர்கள்?''

''ஐந்து பைசா மட்டையில் ஆரம்பித்தேன் 1966-ல். இப்போ தினமும் இரண்டு ரூபாய் செலவாகுது. ஒரு கிலோ ப்யூர் காப்பித் தூளை விட ஒரு கிலோ மூக்குப் பொடி விலை அதிகம்! இந்த விஷயம் உனக்குத் தெரியுமோ..?'' என்றார்.

''தொடர்ந்து பொடி போடுவதனால் கெடுதல் இல்லையா, ஸார்?'' என்றேன்.

''எங்க தாத்தா தவறிப் போகும்போது வயது 102. அவர் தன் 12 வயதிலிருந்து பொடி போட ஆரம்பித்தவர் என்று கேள்வி. என் அப்பாவும் பொடி போடுவார். அவர் என் தாத்தா போல் செஞ்சுரி போடாவிட்டாலும் பொடி போட்டே 90 வயதுக்கு மேல் வாழ்ந்தவர். சொல்லப் போனால் அவருடைய அந்த இறுதி மூச்சு நின்ற நாள் காலையிலிருந்தே அவர் பொடி போடவில்லை. சுற்றி நின்ற எங்களுக்கெல்லாம் அதுதான் மிகப் பெரிய



செல்போனை கைப்பைக்குள் போட்டு விட்டு அது அடிக்கும் போது எடுக்க முடியாமல் தேடிக் கொண்டிருப்போம். இதற்கு ஓர் ஐடியா!

கழுத்தில் அணியும் பழைய கவரிங் செயினை எடுத்துக் கொள்ளுங்கள் ஒருமுனையை கைப்பையின் கைப்பிடி வளையத்தில் மாட்டி விடுங்கள். மறு முனையை செல்ஃபோனில் மாட்டி விட்டால், கைப்பைக்குள் புதைந்து கிடந்தாலும், இலேசாக செயினை இழுத்தால் போதும். கிடைத்துவிடும்!

- நஸிஹா ஹஃபீஸ், கீழக்கரை.



சூடாக வடித்த அரிசிக் கஞ்சியில் சிறிதளவு பனங்கற்கண்டைச் சேர்த்துக் குடித்தால் வறட்டு இருமல் நீங்கும்.

- எஸ். விஜயா சீனிவாசன்,
திருச்சி.

கவலையாக இருந்தது. எது சாப்பிட்டாலும் முடிந்தவரை நன்றாக வயிறு முட்ட சாப்பிடுவார். விரத தினங்களில் பட்டினியிருந்தாலும் சுத்தமாக இரண்டு நாட்கள் வரை எதுவுமே சாப்பிடாமல் முழுப்பட்டினி இருப்பார். பொடி மட்டும் 5 நிமிடத்திற்கு ஒருமுறை வீதம் மூக்கில் இழுத்துக் கொண்டே இருப்பவர், அன்று பொழுது விடிந்தது முதல் அந்தப் பொடியைத் திரும்பியே பார்க்கவில்லை என்றதுமே எங்களுக்கு விசாரம் அதிகமாகி, நாட்டு வைத்தியரைக் கூட்டி வந்து காட்டி, அவரும் நாங்களுமாக வாக்கரிசி போடுவது போல ஆளுக்கு ஒரு சிட்டிகை எடுத்து, அவர் மூக்கில் பொடி போட்டும், மனிதன் வைராக்கியமாக அதை மூக்கில் இழுத்துக் கொள்ளாமல், இறுதி மூச்சை விட்டு விட்டார்" எனச் சொல்லி, கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார், ஸ்ரீனிவாசன்.

"நீங்க எப்படி ஸார்; இந்தப் பழக்கத்துக்கு அடிமை ஆனீங்க?" என்றேன் இன்னொரு நாள்.

"என் அப்பாவுக்கு நான்தான் அந்தக் காலத்தில் பொடி வாங்கி வருவேன். அவருக்குத் திருச்சி மலைவாசலில் தேரடி பஜாரில் மேற்கு பார்த்த முதல் கடையில் தான் டி.ஏ.எஸ். ரத்தினம் பட்டணம் பொடி வாங்கி வரணும். அங்கு எப்போதும் 'கமகம' என்று ஒரே பொடி மணமா இருக்கும். பருமனா ஒருவர் முரட்டு மீசையுடன் கம்பீரமாக அமர்ந்திருப்பார். ஒரு பெரிய பத்துப் படி டின்னிலிருந்து புதுப்பொடி யாகக் கரண்டியில் எடுத்து, தராசில் நிறுத்து, பதம் செய்யப்பட்டு கத்தரியால் வெட்டப்பட்ட வாழைப் பட்டைகளில், பேரெழுச்சியுடன் பேக் செய்து, வெள்ளை நூலினால் ஸ்பீடாகக் கட்டிக் கட்டிப் போடுவார். அவர் கட்டிப் போடப் போட, எதிரில் வெள்ளை வெளேரென்ற கதர்ச் சட்டையுடன், கோல்டு ஃப்ரேம் கண்ணாடி அணிந்த குண்டான முதலாளி ஒருவர் அவற்றை உடனுக்குடன் விற்று, கைமேல் காசு வாங்கிப் போட்டுக் கொண்டே இருப்பார். மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம் எனப் பொடி வியாபாரத்தில் கொடி கட்டிப் பறந்து வந்தனர்.

அதைவிட வேடிக்கை, பொடிப்பயல் முதல் பெரியவர் வரை, கை நீட்டுபவர்களுக்கெல்லாம், இலவசப்பொடி வழங்கப்பட்டு வந்ததே அந்தக் கடையின் தனிச்சிறப்பு.

தினமும் எதற்காக இப்படி நூற்றுக் கணக்கான பொடியன்களுக்கு இலவசப் பொடி தர்மம் செய்கிறார்கள் என்று அந்நாளில் வழுவட்டைத்தனமாக நான் ஆச்சர்யப்பட்டதுண்டு. பிறகுதான் அது அவர்களின் வியாபார யுக்தி, அனைவரும் எழுச்சியுடன் பொடி போட வேண்டும் என்ற தொலைநோக்கு வியாபாரத் தந்திரம் என்பதைப் புரிந்து கொண்டேன். இன்றைய இலவச இணைப்பு, ஆடித் தள்ளுபடி, அதிரடித் தள்ளுபடி எல்லாம் இந்த இலவசப் பொடியிலிருந்துதான் பிறந்திருக்க வேண்டும்" என்ற சரித்திர உண்மைகளைச் சரமாரியாக எடுத்து விட்டார்.

சமீபத்தில் துபாய்க்குப் போய் விட்டு வந்ததாகச் சொன்னார்களே? அங்கு பொடிக் கடைகள் உண்டா? அந்த அனுபவத்தைப் பற்றி சொல்லுங்கோ,

"ஸார்!" என்றேன்.

"அது ஒரு பெரிய கதை தம்பி. துபாயிலிருக்கும் என் பையன் ரொம்ப நாட்களாகவே என்னை அங்கு வரும்படி கூப்பிட்டும், இந்தப் பொடி விஷயமாகத் தான் அதை ஒத்திப் போட்டு வந்தேன். விமானம் ஏறும் முன் என்னைப் பரிசோதித்த அதிகாரி என் சட்டைப் பையில் இருந்த பொடி டின்னைத் திறக்கச் சொல்லி அதில் அடைத்திருந்த மூன்று ரூபாய் பொடியையும் ஒரு ஓரமாகத் தரையில் என்னை விட்டே கொட்டிவிடச் சொல்லி விட்டனர். காலி டின்னை மட்டும் எடுத்துச் செல்ல அனுமதித்தனர். எனக்கு அழுகையே வந்து விட்டது. கைவசம் பொடி இல்லாத இந்த வெளிநாட்டுப் பயணம் தேவைதானா என்று ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்று விட்டேன்.

ஜாலியாகப் பயணிக்க வேண்டிய நான் காலியான பொடி டின்னை மட்டும் அவ்வப்போது மோப்பம் பிடித்தவாறே பறந்து கொண்டிருந்தேன். நல்லவேளையாக ஐம்பது கிராமில் இரண்டு பாக்கெட்டுகளும், பத்து கிராமில் ஐம்பது பாக்கெட்டுகளும், வெவ்வேறு லக்கேஜ்களுடன் துணிமணிகளில் சுற்றியவண்ணம் கடத்திச் சென்றதைப் பறிமுதல் செய்யாமல் விட்டு விட்டனர். அந்தப் பொடியின் காரம், மணம், குணம் குறையும் வரை மட்டுமே துபாயில் எழுச்சியுடன் ஒரு மாதம் மட்டும் இருந்துவிட்டு, முன்னெச்சரிக்கையுடன் ஒரு பவுச் பொடியை மட்டும் கைப்பையில் போட்டுக் கொண்டு, பொடி டின்னை ஞாபகமாக லக்கேஜ்களுடன் அனுப்பிவிட்டு, ஒரு மாதிரியாக இந்தியாவுக்குத் திரும்பி, ஊருக்கு வந்து, ஓடினேன்.. நேராக நம்மூர் பொடிக் கடைக்கு - புதுப்பொடி வாங்க" என்றார்.

"இன்னும் ஆறு மாதத்தில் ரிட்டையர் ஆகப் போகும் தங்களுக்கு, எப்படி ஸார் இனிமேல் பொழுது போகும்?" என்றேன்.

'மூக்குப் பொடி போடுவோர் முன்னேற்றக் கழகம்' என்னும் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பேன்.

'அன்று பேரறிஞர் உபயோகித்த அதே மூக்குப் பொடியை நாங்களும் உபயோகிப்பதால் நாங்களே அன்னாரின் உண்மைத் தம்பிகள். 'தாளிக்குத் தங்கம் வேண்டாம், தாளிக்க வெங்காயமும் வேண்டாம் - மூக்குப் பொடி வேண்டும், முன்னேற வழி வேண்டும்' என்போம்.

'பெண்களே, தாய்க்குலமே உங்கள் ஜாக்கெட்டில் ஒரு பாக்கெட் வையுங்கள். அந்தப் பாக்கெட்டில் பொடியை வையுங்கள். ஈவ் டீஸிங்கா, கடத்தலா, கற்பழிப்பா - ஜாக்கெட்டில் உள்ள பாக்கெட்டை அவிழ்த்துத் தூவுங்கள் பொடியை - வில்லர்களின் கண்களை நோக்கி' என்று கூறி மகளிர் அணியை வலுப்படுத்துவோம்.

சூரியன் மறைந்தாலும், இலைகள் உதிர்ந்தாலும், பம்பரம் படுத்தாலும், எழுச்சியுடன் நின்று வெற்றி பெறப் போவது எங்கள் பொடி டின் சின்னமே என முழங்குவோம்'' என்றார்.

அன்று அவர் பணி ஓய்வு பெறும் நாள். காலையில் அவருடைய டேபிளின் மேல் இரண்டு டஜன் அழகான எவர் சில்வர் பொடி டப்பாக்கள், புத்தம் புதியதாக 'பளபள' என்று அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அன்று அவரிடம் பொடி போட வருபவர்களுக்கெல்லாம், ஒரு டின் வீதம் பொடியுடன் இலவசமாக அளித்து, தன்னுடைய வருங்கால அரசியலுக்கு ஆதரவு திரட்டிக் கொண்டிருந்தார்.

ஆபீஸ் விட்டதும், மாலையிட்டு, அவரை வழியனுப்பச் சென்றபோது, அந்தக் காரைச் சுற்றிலும் ஒரே கூட்டம். அவரிடம் ஆசி வாங்குவது போல, அவர் கைப்பட்ட பிரசாதமாகப் பொடியை வாங்கிக் கொண்டு, பழக்கப்பட்டவர்கள், பழக்கமில்லாதவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவரும், பொடியை மூக்கில் இழுத்தார்கள். அவர்களது தும்மல் சத்தம் விண்ணை முட்ட, நல்ல சகுனம் என எழுச்சியுடன் காரில் புறப்பட்டார், நம் மூ.பொ.போ.மு.க. தலைவர் வழுவட்டை ஸ்ரீனிவாசன், அவர்கள். ●

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : பனீர் ஸ்பெஷல்

கடைசி தேதி : 20.11.2006

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

சபாஷ் ஆஸ்மி!



லண்டனில் இருக்கும் காந்தி ஃபவுண்டேஷன் அமைப்பு சமூக சேவைக்கான 'காந்தி அமைதி' விருதை ஷபானாவுக்கு அறிவித்துள்ளது. இந்த சர்வதேச விருது பெறும் முதல் இந்தியர் ஷபானா!

அக்டோபர் 26 அன்று லண்டனில் நடக்கவிருக்கும் மாபெரும் விருது விழாவில் கணவர் ஜாவேத் அக்தருடன் கலந்து கொள்வதுடன் அல்லாமல் ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸில் காந்தியின் கொள்கைகள் பற்றி சிறப்புரையும் ஆற்றுகிறார்.

"எனக்கு ரொம்பப் பெருமையாக உள்ளது. காந்தி ஒரு கொள்கை வீரர். அந்தக் கர்மயோகியை நாம் அவசியம் பின்பற்ற வேண்டும். அவரது நெஞ்சுரம், உறுதி... இது இன்றைய இளைஞர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். இன்று 'லகே ரஹோ முன்னாபாய்' போன்ற சினிமாக்கள் வருவது வரவேற்கத்தக்கது. காந்திஜியின் கொள்கைகளை அருமையாகச் சொல்லியிருக்கிறார்கள்... தியேட்டரை விட்டு வெளியே வந்த பிறகும் நம்ம மனசுல இருக்கே..." என்று உவகையுடன் பேசுகிறார் ஷபானா.

விருதுகள் வாங்குவது ஷபானாவுக்கு ஹாபி மாதிரி! சுமார் அரை டஜன் தேசிய விருதுகள். 88ல் பத்மஸ்ரீயும் வழங்கப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் பற்றிய செய்திப்படமாகட்டும், விழிப்புணர்ச்சி பொதுக் கூட்டங்களாகட்டும், வரிந்துக் கட்டிக் கொண்டு முதலில் பங்கேற்பவர் ஷபானாதான். மதநல்லிணக்கத்துக்காக ஸ்வாமி அக்னிவேஷ்"டன் தில்லியிலிருந்து மீரட் வரை நான்கு நாட்கள் பாதயாத்திரை மேற்கொண்டு நடிகைகளாலும் சமுதாய மேம்பாடுக்கென பாடுபட முடியும் என நிரூபித்தவர். வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருக்கும் மக்கள், சேரியில் வாழும் மனிதர்கள், பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என பலரது துயரத்தைத் துடைக்கப் பாடுபடுபவர் ஷபானா.

"நான் ஒரு பெண், மனைவி, மகள், நடிகை, இந்தியப் பிரஜை, முஸ்லீம்... என்னுடைய ஒவ்வொரு அடையாளங்களுமே எனக்கு ரொம்பவே ஸ்பெஷல்...." என்று ஷபானா வியக்க வைக்கிறார்.

சபாஷ் ஆஸ்மி!

- லதா சேகர்,
பெங்களூர்.

எங்களைப் புறக்கணிக்கலாமா?



இப்போது பண்டிகை காலம் என்பதால், எல்லா புடைவை, நகைக்கடைகளும் போட்டி போட்டுக் கொண்டு விளம்பரம் செய்கிறார்கள். ஆனால் இந்த விளம்பரக்காரர்கள் எல்லாம் ஒன்றை மறந்து விட்டார்கள். வாடிக்கையாளர்கள் எல்லா வயதிலும் இருக்கிறார்கள். ஆனால் விளம்பரங்களில் குழந்தைகள் அல்லது இளம்வயதுப் பெண்களைத்தான் பார்க்க முடிகிறது. இதனால் நடுவயது அல்லது முதிர்ந்த வயதுப் பெண்களுக்கு ஒருவித காம்ப்ளெக்ஸ் வரலாம். இதைத் தவிர்க்க நடுவயது/முதிர்ந்த வயதுப் பெண்களையும் மாடலாகப் போட்டால், வாடிக்கையாளர்களுக்கும் உதவியாக இருக்கும், விற்பனையும் அதிகரிக்கும்.

இந்த யோசனையைக் கேலியாக நோக்குபவர்களுக்கு ஒரு தகவல் : சமீபத்தில் கொரியாவில் பருமனானப் பெண்களுக்கு ஏற்ற மாதிரி உடைகள் தயாரித்து ஃபேஷன் ஷோ நடத்தியதை தொலைக்காட்சிகளில் காண்பித்தார்கள்.

அந்த மாதிரியான வியாபார உத்திகளை இங்கும் அறிமுகப்படுத்தலாமே!

- வி. சுகுந்தா, கோயமுத்தூர்.



கார்த்திகை தீபம் ஏற்றுவதற்கு, எண்ணெயில் இரண்டு மணி நேரம் ஊற வைத்த திரியை உபயோகியுங்கள். நின்று நிதானமாக நீண்ட நேரம் தீபம் எரியும்!

- ஹம்ஸா, கீழக்கரை.



ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

(நாம சங்கீர்த்தனத்துடன் ஆன்மீக அன்பர்களை அழைத்துச் செல்லும் யாத்திரை, சுற்றுலா குழு அமைப்பாளர்கள்)

குறிப்பு: விலாசம் மாற்றப்பட்டுள்ளது. **Sri Maruthi Travels, No. 2A - II Floor, Mathura Enclave, New. No.123, Perambur High Road, Perambur. Chennai - 600 011.**

தொலைபேசி போன்: 25511786 மொபைல் : 9444035876

① **03.01.07** முதல் **08.01.07** வரை **அஹோபிலம், மந்திராலயம், ஸ்ரீசைலம்** 2X2 டீலக்ஸ் பஸ் (35 இருக்கைகள்) பஸ் கட்டணம், சாப்பாடு, இரவு தங்குதல் உட்பட நபர் ஒருவருக்கு ரூ. **1850/-**

② **21.01.07** முதல் **04.02.07** வரை **சப்த ஜோதிர்லிங்க,** யாத்திரை (மஹாராஷ்டிரா மாநிலம் - **உஜ்ஜெயின்)** மற்றும் **ஷீரடி, பண்டரிபுரம், சனி சிங்கணாப்பூர் கொல்லாப்பூர் மஹாலக்ஷ்மி, பஞ்சவடி** ஆகியவை சென்னை - மும்பாய் - உஜ்ஜெயின் - சென்னை, இரயில், பயணம். இதர இடங்கள் 2X2 **Deluxe Bus** (35 இருக்கைகள்) பஸ் மூலமாக யாத்திரை. இரயில், பஸ், சாப்பாடு, இரவு தங்குவதற்கான பொதுக்கூடம் உட்பட கட்டணம் ரூ. **7,650/-**

③ **11.02.07** முதல் **16.02.07** வரை **சோழநாடு- திவ்யதேசங்கள்** (40 வைஷ்ணவ கோயில்கள் மட்டும்) யாத்திரை 2X2 டிலக்ஸ் பஸ் மூலமாக பஸ் கட்டணம், சாப்பாடு, இரவு தங்குதல் உட்பட கட்டணம் ரூ. **2,600/-**

④**21.02.07** முதல் **01.03.07** வரை **கர்நாடக மாநில யாத்திரை மேலக்கோட்டை, ஸ்ரீரங்கப்பட்டிணம், தலைகாவேரி, தர்மஸ்தலா, சுப்ரமணியா, உடுப்பி, மூகாம்பிகை, கடீல் துர்காபரமேஸ்வரி, கோகர்ணம், கொல்லூர்,சிருங்கேரி, முருடேஸ்வரர், கலசாஅன்னபூர்ணா, பேலூர், ஹலபேடு** ஆகிய திருத்தலங்கள் - சென்னை - பெங்களூர் - சென்னை - இரயில் பயணம் - இதர இடங்கள் 2X2 டிலக்ஸ் பஸ் மூலமாக பயணம் - கட்டணம் ரூ. **3650/-**

⑤ **15.03. 07** முதல் **19.03.07** வரை **முக்திநாத்/சாளக்கிராம யாத்திரை** சென்னை - டில்லி - காட்மாண்டு - டெல்லி - சென்னை விமானம் மூலமாகவும் - முக்திநாத் சாளக்கிராமம்- ஹெலிகாப்டர் மூலமாகவும் பயணம் - விமான கட்டணம், சாப்பாடு, தங்குதல் உட்பட கட்டணம் ரூ. **36,500/-**

⑥ **19.03.07** முதல் **30.03.07** - வரை **காசி, கயா, அயோத்தியா, அலகாபாத், நைமிசாரண்யம்**- கட்டணம் ரூ. **5,250/-**

பங்கு பெறுவீர்! பாக்கியவான்களாவீர்! மாருதி யாத்திரை பக்தியுடன் பகவத் அனுகிரஹத்தைப் பெறுவதற்கே- மிகுந்த சௌகர்யத்திற்கும், வசதிக்கும் அல்ல.

V.சீனிவாசன்
(அமைப்பாளர்)


மேற்படி யாத்திரையின் கட்டணம் மற்றும் விவரம் அறிய சுய விலாசமிட்ட ரூ. 5/- ஸ்டாம்ப் கவருடன் விண்ணப்பிக்கவும்.

Visit our Website: www.srimaruthitravels.com

Safest Laser Treatments

USA Trained Laser Specialists

FREE
consultation
28216316
28216332



Laser Treatments for

- Hair Removal
- Facial
- Rejuvenation
- Acne
- Stretch Marks



Female Chin before



After 4 treatments

Diwali 25% Discount

Satin Skin

Formerly FOLLICLE LASER

Major Credit Cards Accepted

Time 9.00 am to 6.30 pm

16, Jagannathan Road, Opp. Lister Labs, Nungambakkam, Chennai - 34.

வண்ணக் கோலங்கள்!



15 புள்ளி 8 வரை சந்துப்புள்ளி
6 பக்கமும் வண்ணத்துப்பூச்சி 7-3
சந்துப் புள்ளி
சே. அனுசுயா, திருச்சி.


13-1 (நேர் புள்ளி)
- விஜயா ரமேஷ், ஹைதராபாத்.






17-5 5 முடிய (நேர் புள்ளி)

என். பாப்பா,
பாளையங்கோட்டை.



- ஆர். பிரேமா,
பெங்களூர்.



Lord of Health

BHAGAVAN SRI DHANVANTHIRI FOUNDATION

(ESTD 1976)

(Promoted by Medical Services & Research Centre)

3/481, A, Kazura Garden, IInd Street,
Neelankarai, Chennai - 600 041.
Tel No: **044-24493115**, Fax: **044-24494281**
Email: **dhanvanthirifoundation@yahoo.co.in**
Website: **www.dhanvanthirifoundation.com**



DR. S. PARTHASARATHY
Managing Trustee

LETTER OF APPRECIATION

TAMILNADU WAREHOUSING CORPORATION

V.T. THURAIRAASAN, IAS
Chairman, Cum Managing Director

Phone : Per : 2351873

Dated: 10.05.2002

TO WHOM IT MAY CONCERN

Dr. Parathasarathy of Medical Service & Research Centre Co. Ltd. is a divine Doctor. He cures the incurable. He combines the Medical Wisdom of old rishis and modern scientific medicine. He has respect for both and combines them in a judicious mix making into a truly holistic healer.

My wife Tmt. V.T.Dhanalakshmi was suffering from unbearable pain in her groin area. I took her to an M.D. and M.B.B.S, both at Besant Nagar. They prescribed only painkillers. They could not solve the problem. Her agony increased day by day. The London returned Ortho Doctor at the Besant Nagar Hospital could not find out the problem even after X-rays. He delegated the job to the physiotherapist attached to the Hospital. He gave stiff exercises which aggravated my wife's problem making her bed ridden.

Fortunately some one suggested Dr. Parthasarathy. I immediately took my wife to him. He comforted her and encouraged her like a mother. She was able to walk the same day.

The miracle healing done by him is due to divine grace and thorough research in medicine done by Dr. Parathasarathy. He is the only person who uses in a practical way the ancient Ayurvedic nutrition theory to boost immunity and cure all diseases. The modern nutritionists in 5 Star Hospitals repeat the books only like parrots and have become totally unhelpful.

I Wish Dr. Parthasarathy a great future in the interest of so many incurable patients.

(V.T. THURIRAASAN)

Registered Office : 82, Anna Salai, Guindy, Chennai - 600 032, Grams : TANWARE Phone 2351303, 2351497, 2351798, 2200282.
Fax : 2201320

SPECIALIZED TREATMENTS

சர்க்கரை நோய் (Diabetes), எலும்பு சிதைவு நோய் (Osteoporosis), மூட்டு வலி (Arthritis) (Osteo Arthritis) எலும்பு தேய்மான நோய் (Rheumatoid Arthritis) கழுத்தெலும்பு தேய்மானம், (Cervical Spondylosis), இடுப்பு வலி, முதுகு வலி (Lumbar Pain, Back Pain) கால் மூட்டு வீக்கம் (Knee Pain), மன சிதைவு நோய் (Schizophemia), இரத்த அழுத்தம் (Hypertension), அதிக உடல் எடை (Obesity) சிறுநீரகக்கல் (Kidney Stone) பித்தப்பை கற்கள் (Gall Bladder Stone) மற்றும் இரத்த சம்பந்தமான எல்லா நோய்களுக்கும்.

முன்பதிவு மற்றும் ஆலோசனைகளுக்கு (9 am to 6 pm)

Patients having above problems for more than one year or more

Contact: Dr. S. Srinivasan, MBBS, DCP (Vienna), Clinical Pathologist,
Dr. R. Sridharan, MBBS, DA, Clinical Consultant
Dr. K.C. Anand, BSMS, Project Co Ordinator

Health Centres:	MYSORE	BANGALORE	COIMBATORE	MADURAI	NEW DELHI
	0821-6567352	080-26727773	0422-2540942	0452-25355160	011-22723021







கார்த்திகை திருநாள்

3.12.06 - ஞாயிறு - திருக்கார்த்திகை திருஅண்ணாமலையார் தீபம்.

பரணி தீபம் 4.12.06 - பௌர்ணமி பூஜை, கிருத்திகை தீபம் திங்கள்.

ஆண்டுதோறும் பௌர்ணமி தினத்தன்று, சந்திரன், கிருத்திகா நட்சத்திரத்தில் இருக்கும்போது, திருக்கார்த்திகை தீபத் திருநாள் கொண்டாடப்படுகிறது.

கார்த்திகைத் தீபங்களை ஏற்றி வைக்கும் போது சொல்ல வேண்டிய ஸ்லோகம் :

கீடா : பதங்கா மசகாஸ்ச (ஸ்ருதா) ஸ்ருக்ஷா

ஜலே ஸ்தலேயே, நிவஸந்தி ஜீவா :

த்ருஷ்ட்வா ப்ரதீபம் நசஜநம (பாகிநு) பாஜா

பவந்தி நித்யம், சவபசா ஹி, விப்ரா

'புழுக்களே ஆனாலும் சரி; பட்சிகளோ, கொசுக்களோ ஆனாலும் சரி, உயிரற்ற மரங்களே ஆனாலும் சரி, ஜலம், பூமியில் வாழும் உயிரினங்கள் ஆனாலும் சரி மனிதப் பிறவிகளில், எந்த ஜாதியினர் ஆனாலும் சரி' இக்கார்த்திகைத் தீபங்களைப் பார்த்த உடனேயே, அவ்வுயிர்களின் பாபங்கள் நீங்கி கடவுளருளால் மோட்சம் அடையட்டும்!' என்பதுதான் இந்த ஸ்லோகத்தின் பொருள்.

கார்த்திகைத் தீப விழாவின் தத்துவம் :

விளக்கு என்பது, இருளை நீக்கி தெளிவைத் தருகிறது. அதாவது, அஞ்ஞான இருளைப் போக்கி ஜோதி வழிபாட்டைப் பின்பற்றுவதே இதன் தத்துவம்.



கார்த்திகைத் தீபம் என்றதும் நம் நினைவிற்கு வருவது திருவண்ணா மலைதான். திருமால் வராக வடிவம் கொண்டும், பிரம்மா அன்னபட்சி உருவம் கொண்டும் ஸ்ரீ சிவபெருமானின் அடியையும் முடியையும் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் தோற்றனர். ஆகவே, ஸ்ரீசிவன் அணுக முடியாத ஜோதி மலையாகத் தோன்றினார். அந்த நாள்தான் கார்த்திகை. எனவே ஸ்ரீ சிவபெருமான் அண்ணாமலையார் என்றழைக்கப்பட்டார். தீப வழிபாடு, ஸ்ரீ சிவன் ஒளி வடிவமாக உள்ளார் என்பதை நமக்கு உணர்த்துகின்றது. எனவேதான், நாமும், திருவண்ணாமலை தீபத்தன்று, நம்





இல்லங்களிலும் தீபங்களேற்றி ஸ்ரீ சிவபெருமானையும், ஸ்ரீ முருகப் பெருமானையும் வணங்குகின்றோம்.

காஞ்சியில் 'தீபப் பிரகாசர்' என்ற விளக்கொளி பெருமாள் கோயில் கொண்டுள்ளார்.

'விளக்கு' என்பது அகல், எண்ணெய், திரி சுடர் என்ற நான்கும் சேர்ந்ததாகும். இந்த நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு இவற்றைக் குறிக்கின்றன.

கார்த்திகைத் தீபத் திருநாளன்று, மாலையில், விளக்குகளுக்கு நிவேதனம் செய்யும் முறை :

இரண்டு மனைப் பலகையில் அழகாக படிக்கோலம் இடவும். ஒரு மனையில் இரண்டு அல்லது நான்கு குத்து விளக்குகளுக்கு, சந்தனம், குங்குமம், பொட்டுகள் இட்டு, குத்துவிளக்கின் மேல் நுனியில் சிறிது பூ வைக்க வேண்டும். மற்றொரு மனையில் படிக் கோலமிட்டு, வெண்கலம், பித்தளை, மண் அகல்களை வரிசையாக 4 அல்லது 2 வரிசைகளில் வைத்து குங்குமப் பொட்டு இட வேண்டும். பிறகு எல்லா விளக்குகளிலும் நல்லெண்ணெய் விட்டு, இரட்டைத் திரிநூல் போட வேண்டும்.

பிறகு சுமங்கலிகள், கன்னிப் பெண்களைக் கொண்டு, தீபங்களை ஏற்றச் செய்ய வேண்டும். ஏற்றிய விளக்குகளுக்கு முன்பாக மனை வைத்து அவல், பொரி, வேர்க்கடலை உருண்டைகளையும், அப்பத்தையும் உடைத்த தேங்காய், கனிகள், காய்ச்சி ஆறிய பால், வெந்நீர், பாக்கு, மஞ்சள் இவையனைத்தையும் வைத்து சுற்றிலும் நீர் சுற்றி, கற்பூர ஆரத்தி காட்டி தீபங்களுக்கு நமஸ்காரம் செய்ய வேண்டும்.

சுமங்கலிகளுக்கும், கன்னிப்பெண்களுக்கும் தாம்பூலம் கொடுக்க வேண்டும்.

தீபங்களை ஏற்றும் போது முதல் பக்கத்திலுள்ள 'கீட:' என்று தொடங்கும் ஸ்லோகத்தைச் சொல்ல வேண்டும்.



கார்த்திகைத் திருநாளன்று செய்ய சில நைவேத்தியக் குறிப்புகள்



அப்பம் தயாரிக்கும் முறை :

தேவையான பொருள்கள் :

அரிசி - 1 ஆழாக்கு,
வெல்லம் - ¾ ஆழாக்கு,
தேங்காய் - 1 சிறிய மூடி,
பூவன் வாழைப்பழங்கள் - 2,
ஏலக்காய் - 8,
அப்பம் பொரிக்க எண்ணெய் - தேவையான அளவு,
நெய் - 1 டேபிள் ஸ்பூன்.



• கே. ராஜலக்ஷ்மி

செய்முறை :

அரிசியை ஊறவைக்கவும். நன்றாக ஊறியதும் வெல்லம், வாழைப் பழத் துண்டுகள், தேங்காய்த் துருவல் சேர்த்து மிக்ஸியில் நைஸாக விழுதாக அரைத் தெடுக்க வேண்டும். அத்துடன் ஏலத் தூளைக் கலந்து, அடுப்பில் வாணலியில் எண்ணெய் காய்ந்ததும், ஒரு சிறிய குழிக் கரண்டியால் எடுத்து, காய்ந்த எண்ணெயில் சிறிய வட்டமாக ஊற்ற வேண்டும். பிறகு அப்பத் தின் மேல் சட்டு வத்தால் வாணலியில் காயும் எண்ணெயைச் சிறிது சிறிதாக எடுத்து விட வேண்டும். அப்பம் உப்பி விடும். அப்பத்தின் மேல் பரப்பு வெந்து நடுவில் வெடித்து வந்ததும், அப்பத்தைத் திருப்பிப் போட வேண்டும்.

மறுபக்கம் வெந்ததும் எண்ணெயை வடித்து வெளியே எடுத்து ஒரு தட்டில் வைக்க வேண்டும்.

இந்த முறையில் செய்யும் அப்பம் மிருதுவாகவும், சுவையுடன், மணமும் கூடியிருக்கும். எண்ணெயும் குடிக்காது. தேங்காயின் இனிய சுவையும், மணமும் சேர்ந்திருக்கும். 20 அப்பங்கள் செய்ய லாம்.

நெல் பொரி உருண்டை செய்யும் முறை :

தேவையான பொருள்கள் :

நெல் பொரி - 6 கிண்ணம்,
பாகு வெல்லத் தூள் - 1½ கிண்ணம்,
தேங்காய் சிறு துண்டுகள் - 4 டேபிள் ஸ்பூன்,
ஏலக்காய் - 8,
வறுத்த வேர்க்கடலைப் பருப்பு - 2 டேபிள் ஸ்பூன்.





செய்முறை :

கடையில் விற்கும் நெல்பொரியை வாங்கிச் சுத்தப்படுத்த வேண்டும். அடுப்பில் உருளியை வைத்து, சிறிது நீர் விட்டு, வெல்லத்தூளைப் போட்டுக் கரைக்கவும், வடிகட்டவும்.

அந்த வெல்ல நீரை, உருளியில் கெட்டிப் பாகாக, இரட்டைக் கம்பி வரும் வரை பாகாகக் காய்ச்சி, அதில் வேர்க்கடலை, ஏலத்தூள், தேங்காய்த் துண்டுகளைப் போட்டுக் கலந்து, அடுப்பை விட்டுக் கீழே இறக்க வேண்டும். அதில் நெல் பொரியைக் கொட்டிக் கிளறி, சிறிது சூடாக இருக்கும் போதே, நெல் பொரி உருண்டைகளைக் கெட்டியாகப் பிடித்துத் தாம்பாளத்தில் அடுக்கி வைக்க வேண்டும். ஆறிய பிறகு சம்புடத்தில் அடுக்கலாம். சுமார் 12 பெரிய உருண்டைகள் பிடிக்கலாம்.


அவல் பொரி உருண்டை :

கடையில் விற்கும் அவல் பொரி - 6 கிண்ணம்,
வெல்லத் தூள் - ¾ ஆழாக்கு,
தேங்காய் சிறு துண்டுகள் - 4 டேபிள் ஸ்பூன்,
ஏலக்காய் - 8,
வறுத்த வேர்க்கடலைப் பருப்பு - 2 டேபிள் ஸ்பூன்.



செய்முறை :

அவல் பொரியைச் சுத்தப்படுத்த வேண்டும். வெல்லப்பாகு காய்ச்சி, அதில் வேர்க்கடலை, ஏலத் தூள், தேங்காய்த் துண்டுகளைப் போட்டுக் கலந்து, அடுப்பை விட்டுக் கீழே இறக்கி வைக்க வேண்டும். அதில் அவல் பொரியைக் கொட்டிக் கிளறி, சிறிது சூடாக இருக்கும்போதே, அவல் பொரி உருண்டைகளை அழுத்திக் கெட்டியாகப் பிடித்து, தாம்பாளத்தில் அடுக்கி வைக்க வேண்டும்.



வேர்க்கடலை உருண்டை :

தேவையான பொருள்கள் :

வறுத்த தோல் நீக்கிய வேர்க்கடலைப் பருப்பு - 6 கிண்ணம், வெல்லத்தூள் - 1½ கிண்ணம், ஏலத்தூள் - தேவைப்பட்டால்.

செய்முறை :

வெல்லத்தூளை கெட்டிப்பாகாகக் காய்ச்சி கீழே இறக்கி, அதில் வேர்க்கடலைப் பருப்பைப் போட்டுக் கிளறி, உருண்டையாக அழுத்திப் பிடிக்க வேண்டும். சத்தான, சுவையான உருண்டை தயார்!

- கே. ராஜலக்ஷ்மி, நங்கநல்லூர்.

படங்கள் : ஸ்ரீஹரி

இந்த ரங்கோலி மிக எளிமையாகப் போடக்கூடியது. அதே சமயம் காண்போரைக் கவரும் அழகுடையது.



ஆயிரம் இதழ்கள்!

தேவையான பொருள்கள் :

- வண்ணப் பொடிகள்,
- நம் வீட்டில் உபயோகிக்கும் குக்கர் காஸ்கெட்,
- ரங்கோலி போட பலகை (அ) சப்பாத்திக் கல் போன்ற வட்டமான கல்.



முதலில் 'காஸ்கட்'ஐ, வட்டமான பலகை (அ) கல்லின் மேல் வைத்து அதன் உள் வட்டத்தில், விருப்பமான கலர்ப் பொடியால் வட்டமாக, சற்று கனமான இழையாகப் போட்டுக் கொள்ள வேண்டும்.

பிறகு காஸ்கட்டை எடுத்து விட்டு, வட்ட மாகப் போட்ட அந்த இழையை ஆள் காட்டி விரலால் வட்டத்தின் உள் பக்கத்தில் இருந்து வெளிப்புறம் சிறிது நகர்த்த வேண்டும். சிறிது சிறிதாக முழு வட்டத் தையும் அடுத்தடுத்து நகர்த்த வட்ட இழை முழுதும் இதழ்களாக விரியும்.

மறுபடியும் விரிந்த இதழ் களின் உள்பக்கம் வட்டமாக கலர்ப் பொடியால் இழை போட வேண்டும். அதையும் முதலில் வரைந்த இதழின் உள்பக்கம் விரலால் நகர்த்த அடுத்த அடுக்கு இதழ்கள் விரியும். இப்படியே நடுவில் வட்டத்தின் அளவு குறைந்து



பூர்த்தியாக இதழ் அடுக்குகளாக கண்ணைப் பறிக்கும் அழகு.


நடுவில் விளக்கு ஏற்றி வைத்தால் வெகு அழகாக இருக்கும். இதற்குக் கோலம் போடத் தெரிந்திருக்க வேண்டுமென்பதில்லை. ஆர்வம் உள்ள எவரும் 'ஸஹஸ்ர தளம்' கோலத்தை எளிதில் போடலாம்.

- சங்கரி வெங்கட், சென்னை - 63.





அனுராதா சேகர்



"நாம் இலவசமாகத் தரும் எண்ணெயில், இவர் என்ன விளக்கேற்றுவது? இனி எண்ணெய் தர முடியாது என்று சொல்லிவிட வேண்டியதுதான் என்று பேசிக் கொண்டார்கள் ஷீரடியைச் சேர்ந்த எண்ணெய் வியாபாரிகள்.

வழக்கம் போல, எண்ணெய் வாங்கும் தகரக் குவளையை எடுத்துக் கொண்டு பாபா போக, "எண்ணெய் இல்லை" என்று வியாபாரிகள் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

எல்லாம் அறிந்த பாபாவுக்கு, இந்த எண்ணெய் விஷயமா தெரியாது? அவர் ஒன்றும் பேசாமல் மசூதிக்குத் திரும்பினார்.

"அவர் என்னதான் செய்யப் போகிறார், பார்ப்போமே!" என்று வியாபாரிகள் பின்தொடர்ந்தனர்.

பாபா, தகரக் குவளையுடன் கிணற்றடிக்குச் சென்றார். நீரை இறைத்துக் குவளையில் எடுத்துக்கொண்டார். அந்தத் தண்ணீரை விளக்குகளில் ஊற்றி ஏற்றினார்.

அட! என்ன ஆச்சரியம்! எண்ணெயில் எரிவதை விட பிரகாசமாக விளக்குகள் சுடர்விட்டு அழகாக ஒளிர்ந்தன. அதைக் கண்ட வியாபாரிகள் நடுங்கி விட்டனர்.


"பாபா மிகவும் சக்தி படைத்தவர். அவரிடம் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொண்டு விட்டோமே..." என்று மனம் வருந்தி, ஓடோடிச் சென்று அவரது காலில் விழுந்தார்கள்.

"என்னை நேசிப்பவர்களை, எனது கண்கள் எப்போதும் மேற்பார்வை செய்து கொண்டேயிருக்கும்" என்ற பாபாவின் அருள்மொழிக்கு ஆதாரமாக எத்தனையோ அற்புதங்கள்

சரணம் ஷீரடி சாயி!

நிகழ்ந்து கொண்டேதான் உள்ளன. அவற்றை எல்லாம் சொல்ல, இந்த ஒரு ஜென்மம் போதாதுதான். மாபெரும் அலையடிக்கும் சமுத்திரத்தை அளக்க ஓர் உப்புப் பொம்மை புறப்பட்டதைப் போல என்னவோ ஓர் ஆசை!

பாபாவே ஓர் அட்சயப் பாத்திரம். அவரிடம் அன்ன பூர்ண சித்தி இருந்தது என்று சொல்வது எவ்வளவு அறியாமை! இருந்தா


ஆசீர்வாதத் தொடர்-7

லும், உணவை விருத்தியாக்கும் அபூர்வ சக்தி அவரிடம் இருந்தது என்று குறிப்பிட்டால்தானே, புரந்தர் என்னும் பக்தர் பெற்ற மகிழ்ச்சியைப் பற்றி நான் சொல்ல முடியும்!

புரந்தர் என்பவர் பாபாவின் தீவிர பக்தர். ஒரு நாள் பாபா அவரிடம், "என்ன புரந்தர்... நான் இன்னைக்கு உன் வீட்டுக்குச் சாப்பிட வரட்டுமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

புரந்தருக்குச் சந்தோஷம் தலைகால் புரியவில்லை.

"தன்யனானேன் ஐயா! என்ன உணவு, எத்தனை பேருக்குச் சமைக்கணும்?" என்று பரவசமாகக் கேட்டார்.

"என்ன... ஒரு மூன்று பேருக்குச் சமைத்து வை! தடபுடலா எல்லாம் செஞ்சுடாதே! கொஞ்சம் சாதம், கிச்சடி, கறிகாய் போதும்" என்றார்.

புரந்தர் உடனே கடைக்குப் போய் வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு வந்தார். மனைவியிடம் விவரத்தைச் சொன்னார். அவளும் மகிழ்ச்சியுடன் சமைக்கத் தொடங்கினாள்.

ஆயிற்று! மதியம் வந்தது. மசூதியில் ஆரத்தி முடிந்ததும், முதலில் ஐந்து ஃபக்கீர்கள் புரந்தரின் இருப்பிடத்துக்கு வந்தார்கள். புரந்தரும் அவரது மனைவியும் இன்முகம் காட்டி வரவேற்று, உபசரித்தனர். அவர்கள் உணவருந்தி விட்டுச் செல்லும் போது, "இன்னும் சிலர் சாப்பிட வருவார்கள்" என்று சொல்லி விட்டுப் போனார்கள். புரந்தருக்குப் பதற்றமாகி விட்டது.

"இன்னும் சில விருந்தாளிகள் வருவார்கள்... நீ கொஞ்சம் கூட சமைத்து வை" என்று மனைவியிடம் சொன்னார்.

புரந்தரின் மனைவி சமையலறைக்குள் சென்று, பாத்திரங்களைச் சோதனையிட, எல்லாமே நிரம்பியிருந்தன.

சற்று நேரத்தில் இருபதுக்கும் மேற்பட்ட ஃபக்கீர்கள் வந்து விட்டனர்.

அவர்களைப் பார்த்ததும் புரந்தருக்குக் கவலையாகி விட்டது.

"மூன்று பேருக்குத்தானே சமைத்திருக்கிறோம். எப்படி எல்லாருக்கும் திருப்தியாக உணவளிக்க முடியும்?" வேகமாக உள்ளே சென்று மனைவியிடம் விருந்தினரின் வருகையைப் பற்றிச் சொன்னார்.

'உணவு படைக்காமல் யாரையும் திருப்பி அனுப்பக் கூடாது' என்ற எண்ணம் இருவரையும் அலைக்கழித்தது.

புரந்தரின் மனைவி மனசுக்குள் சாயிநாதனை நினைத்துக்கொண்டே, பாத்திரங்களிலிருந்து எடுக்க எடுக்க,

பிரசாதம் சாப்பிட்ட தத்தா!

எனது மருமகள் ராஜி ஸ்வாமிநாதன், ஸ்ரீ சாயி சத்சரித்ரத்தை ஒரு வாரத்தில் படித்து முடித்து வியாழக் கிழமை விசேஷப் பூஜைகள் செய்து நைவேத்தியத்துக்கு பாபாவுக்குப் பிடித்த கேசரி, வெ. கொண்டைக்கடலை சுண்டல், தயிர் சாதம் எல்லாம் செய்தாள். அன்று என் மகன் விசுவின் பிறந்த நாளும் கூட. (அவன் பாபா பக்தன்). எப்பொழுது நைவேத்தியம் செய்தாலும் வேற்று மனிதர்களுக்குக் கொடுத்து விட்டுத்தான் வீட்டில் இருப்பவர்களுக்குக் கொடுப்பது வழக்கம். என் பேரன் கௌதம் கல்லூரிக்குச் செல்ல நேரம் ஆனபடியால் அவன் சாப்பிடும் முன் யாருக்காவது கொடுக்க வேண்டுமே என்ற சிந்தனையிலேயே துரிதமாகப் பூஜையை முடித்துக் கொண்டிருந்தாள் என் மருமகள்.

சரியாக கற்பூர ஆரத்தி சமயம், வாசல் அழைப்பு மணி

ஒலித்தது. எப்பொழுது யார் வந்தாலும் வாட்ச்மேன் கீழிருந்து இன்டர்காம் மூலம் அறிவித்து அனுமதி பெற்றுத்தான் அனுப்புவார். அன்று எந்த அறிவிப்பும் இன்றி ஓர் இளைஞன் ஏதோ செக் வாங்க வந்திருந்தான். செக் எழுதிக் கொடுக்கக் காத்திருக்கும் சமயத்தில் நாங்கள் அவனுக்கு எல்லாப் பிரசாதங்களையும் சாப்பிடக் கொடுத்துக் குடிக்கத் தண்ணீரும் கொடுத்தோம். செக் வாங்கிக் கொண்டதற்கு ரசீது கொடுத்தான். கையொப்பத்தைப் பார்த்து பேர் புரிந்து கொண்டும், அவன் வாயிலிருந்து கேட்க வேண்டும் என்பதால், பெயர் என்ன என்றவுடன் 'தத்தா' என்றானே பார்க்கணும், அதைக் கேட்ட கணம் எங்களுக்கு மெய்சிலிர்த்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. பாபாவே நேரில் வந்து சாப்பிட்ட ஆனந்தத்தை அடைந்தோம்.



முழு நம்பிக்கையுடன், குறிப்பாக வியாழக்கிழமை ஆரம்பித்து ஏழு நாட்களில் ஸ்ரீ சாயி சத்சரித்திரம் படித்து முடித்தால் நினைத்த செயல் நிறைவேறும் என்பது உறுதி. பாபா கலியுக கண்கண்ட தெய்வம்!

- கல்யாணி பாலசுப்ரமணியன், மும்பை - 72.

அன்னமும், பதார்த்தங்களும் நிரம்பிக் கொண்டேயிருந்தன.

விருந்தாளிகள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே மேலும் சிலர் வந்து வாசலருகே காத்திருந்தனர்.

ஆனால் இந்த முறை புரந்தர் தம்பதிக்குக் கொஞ்சமும் அச்சமில்லை. அதான்.. பாத்திரங்கள் தாமாகவே நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றனவே!

விருந்தாளிகள் வருவதும், உள்ளுக்கும் வாசலுக்குமாய் நடையாய் நடந்து உபசரிப்பதுமாக இருந்த புரந்தருக்கு அப்போதுதான், 'பாபா இன்னும் சாப்பிட வரவில்லையே!' என்ற நினைப்பே வந்தது.

உடனே மசூதிக்குச் சென்று, "பாபா... நீங்க இன்னும் சாப்பிட வரலையே!" என்றார்.

"நான் இன்னுமா சாப்பிடணும்? எனக்கு எப்பவோ வயிறு நிறைந்து விட்டது. நீயும் உன் மனைவியும் ஓடி ஓடி பரிமாறினீர்களே!" என்றவர், அருகிலிருந்தவர்களிடம், "ஆனாலும் நான் இந்த மனிதரை ரொம்பவே பயமுறுத்தி விட்டேன்" என்றார் தமாஷாக!

புரந்தர் உடனே பாபாவுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தார். தட்சிணை கொடுத்து நமஸ்கரித்தார்.

"போ... நீ போய்ச் சாப்பிடு!" என்றார், பாபா சிரித்துக் கொண்டே!

புரந்தரின் குடும்பம் சாப்பிட்டு முடித்த பிறகும் நிறையச் சாப்பாடு மிஞ்சி விடவே, எஞ்சிய உணவைப் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கினார், புரந்தர்.

"என் பக்தர்களின் வீடுகளில் உணவுக்கும் உடைக்கும் பஞ்சமே இராது. அவர்களுடைய தேவையை அறிந்து, முன்கூட்டியே அளித்து விடுவேன். அதனால் உணவுக்கும் உடைக்கும் அலைய வேண்டாம். உங்களுக்குத் தேவையானவற்றை இறைவன் கண்டிப்பாகத் தருவார். அவர் எதையாவது தரவில்லை என்றால், அது உங்களுக்குத் தேவையில்லை என்று அர்த்தம்..." என்கிறார் பாபா!

'பாபா சொல் அமுதம்' என்று நினைத்து, அதை அப்படியே கடைப்பிடித்துப் பாருங்கள். உங்கள் வீட்டில் தேவை என்பதே இருக்காது.

(பக்தி பெருகும்)

கற்றாழை தரும் கன்னல் அழகு!



காடாக மண்டிக் கிடக்கும் கற்றாழைப் புதர்களை நாம் அனைவரும் பார்க்கிறோம். ஆனால் அதன் மருத்துவக் குணங்களை எத்தனை பேர் அறிந்திருக்கின்றனர்? கற்றாழையிலிருந்து அழகு சாதனப் பொருள்கள், பற்பசை, மவுத் வாஷர், சரும நோய்களுக்கான கிரீம்கள், நோய் எதிர்ப்பு சக்திக்கான மாத்திரைகள், ஜீரண மாத்திரைகள் என்று பலவிதமான பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

எளிதில் கிடைக்கும் கற்றாழையை உபயோகித்து, நாம் வீட்டிலேயே அழகு சாதனப் பொருள்களை தயாரித்துக் கொள்ளலாம். கற்றாழையின் முள்களை அகற்றிவிட்டு மேல் தோலை சீவினால் உள்ளே வழுவழுப்பான ஜெல் இருக்கும். அதை, மிக்ஸியில் இட்டு அடித்து ஒரு பாட்டிலில் ஊற்றி ஃப்ரிஜ்ஜில் வைக்கவும். வாரம் ஒருமுறை அல்லது இருமுறை அத்துடன் முல்தானி மிட்டியைக் கலந்து முகத்தில் பூசி பேஸ்பேக்காக உபயோகித்தால் கரும்புள்ளிகள் மறைந்து முகம் பொலிவு பெறும்.



ஹேர்டை பவுடர் உபயோகிப்பவர்கள் தண்ணீருக்குப் பதிலாக கற்றாழைச் சாற்றில் பவுடரைக் கலந்தால் அது கண்டிஷனராகச் செயல்படும். தலைமுடி மிகவும் மென்மையாக இருக்கும்.

சீயக்காய்த் தூள் அரைத்து உபயோகிப்பவர்கள் கற்றாழையைச் சிறு துண்டுகளாக வெட்டி வெயிலில் உலர்த்தி சீயக்காயுடன் சேர்த்து அரைக்கலாம். தவிர பொன்னாலங்காய் என்கிற ரீடா, மருதாணி, கறிவேப்பிலை, நெல்லிமுள், செம்பருத்திப் பூ இவற்றையும் ஒரு கைப்பிடியளவு சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டால் எந்த ஷாம்புவும் அதற்கு இணையாகாது. மேலே கூறிய அனைத்தும் நான் என் அனுபவத்தில் கண்டு அறிந்தவை.

- புஷ்பஸ்ரீ,
பள்ளிக்கரணை.

சி.ஐ.டி. வாசகியருக்கு வாழ்த்து!



'நவம்பர் இதழில் தொடங்கப்படும் இரண்டு அதிரடித் தொடர்கள் என்ன என்று கண்டுபிடியுங்க பார்ப்போம்!' என்று திடீர் போட்டி வைத்திருந்தோம்.

'யோகா, டீனேஜ்' என்று சரியாகக் கண்டுபிடித்து எழுதிக் குவித்த ஜேம்ஸ்பாண்ட் பெண்மணிகளுள் அழகான புடைவை பரிசு பெறும் 5 அதிர்ஷ்டசாலிகள்...




இதுதான்! சரிதான்!

1. மைதிலி ரங்கஸ்வாமி, ஸ்ரீரங்கம் - 6.
2. ஜி. ஆர். விமலா - கோவில்பதாகை
3. ஏ. ராஜேஸ்வரி - தேவிகாபுரம்
4. வி. பத்மாவதி - குஜிலியம்பாறை.
5. கே. செண்பகம் - கொல்லிமலை.

ரசப்பொடி அரைக்கும் போது கொஞ்சம் கடுகும் சேர்த்து அரைத்தால் பொடியில் பூச்சியும் வராது. பொடியும் நீண்ட நாள் கெடாமல் இருக்கும். ரசமும் நன்றாக நுரைத்து வரும்.

- வத்ஸலா ஸ்வாமிநாதன்,
செகந்திராபாத்.




கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் படிக்கும் மாணவன் ஸ்யாம். தான் உண்டு தன் படிப்பு உண்டு என்று இருப்பவன்.
கார்ட்டூன் : பிள்ளை
செமஸ்டர் முடிந்து மார்க் வந்தது. மூன்று சப்ஜெட்களில் ஃபெயில். அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.
ஸ்யாமின் அம்மாவுக்கு ரொம்பக் கவலையாகி விட்டது.
அந்தக் கட்டத்தில்தான்...

புத்தம் புதிய தொடர்

*சரஸ்வதி பாஸ்கர் - சென்னை பல்கலைக்கழகத்தில் உளவியலில் முதுகலைப் பட்டம் பெற்றபின் அமெரிக்காவுக்குச் சென்று உளவியலில் மேற்படிப்பை முடித்தவர். பன்னிரண்டு ஆண்டுகள் அமெரிக்காவில் மனநல ஆலோசகராகப் பணியாற்றியபின், இந்தியாவுக்குத் திரும்பி விட்டார். தற்போது, சென்னையில் பிராக்டிஸ் செய்து வருகிறார். நெய்வேலியில் நடைபெற்ற மங்கையர் மலர் வாசகியர் திருவிழாவில் இவரது சொற்பொழிவு, பெரும் வரவேற்பைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இதழ் முதல் டீன் ஏஜ் பற்றித் தமது ஆலோசனைகளை வழங்குகிறார்.

இளமை!

டீன் ஏஜ் சவால்கள்

அந்தக் கட்டத்தில்தான், ஷ்யாமை அழைத்துக் கொண்டு அவனுடைய அம்மா என்னுடைய கிளினிக்குக்கு வந்தார். முதலில் அவனைப் பற்றி எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டேன்.

ஷ்யாமுடைய பெற்றோர்களுக்கும், தாத்தாவுக்கும் அவன் ஐ.ஐ.டி.யில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று ஆசை. ஷ்யாம் எவ்வளவோ கடின முயற்சி செய்தும் ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. இது குடும்பத்தில் அனைவரையும் ஏமாற்றத்துக்குள்ளாக்கியது. பையனுக்கும், தன்னால் பெற்றோர்கள் மற்றும் தாத்தாவின் ஆசையினைப் பூர்த்தி செய்ய முடியாமல் போய் விட்டதே என்ற குற்ற உணர்வு ஏற்பட்டு விட்டது. அவை எல்லாம் ஒரு பக்கம் இருக்க, கல்லூரியில் ஷ்யாம் எடுத்துப் படிக்க விரும்பியது மெக்கானிக்கல் இஞ்சினியரிங். ஆனால் அவனது குடும்பத்தினரது சாய்ஸ் கம்ப்யூட்டர் சயின்ஸ். இருந்த போதிலும், அவன் அதற்கு மறுப்பு சொல்லவில்லை. பெரியவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவது நம் கடமை என்று நினைத்தான். இந்த விஷயங்கள் எல்லாவற்றையும் ஷ்யாம் மனம் விட்டுப் பேசினான்.

இரண்டு வாரங்கள் கழித்து, மீண்டும் ஷ்யாமை நான் சந்தித்தேன். அவன் காலை முதல் இரவு படுக்கப் போகிற வரையில் என் னென்ன செய்வான் என்று கேட்டேன். சொன்னான். அதிலிருந்து ஷ்யாம் இரவில் வெகுநேரம் கண் விழித்துப் படிக்கும் வழக்கம் உடையவன் என்று தெரிந்தது. அவன் சொன்ன முக்கியமான விஷயம் : "நான் என் படிக்கும் அறையில் உட் கார்ந்து படிக்கிற போது, அம்மா அறைக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு படிக்கச் சொல்வார். காரணம், என் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் என் மீது நம்பிக்கை இல்லை; அறைக் கதவு மூடி இருந்தால், நான் படிக்காமல் என் கம்ப்யூட்டரில் விளையாடிக் கொண்டிருப்பேன்; அல்லது இன்டர்நெட் பார்த்துக் கொண்டிருப்பேன் என்பது என் அவர்கள் எண்ணம். நான் படிக்க ஆரம்பிப்பேன்; அடுத்த பத்தாவது நிமிடம் உரத்த குரலில் அவர்கள்



1 சரஸ் பாஸ்கர்
மனநல ஆலோசகர்

போடும் சண்டை என் கவனத்தைத் திசை திருப்பிவிடும். நான் அவர்களுடைய வாக்குவாதத்தை, ஒரு மௌனப் பார்வையாளனாகக் கவனிப்பேன். ஐ.ஐ.டி. கிடைக்காத ஏமாற்றம், நான் விரும்பி ஏற்றுக் கொள்ளாத படிப்பு, வாக்குவாதமான வீட்டுச் சூழ்நிலை இவை எல்லாம் சேர்ந்து என்னைச் சோர்வடையச் செய்யும்" என்றான். ஷ்யாமின் வார்த்தைகளில் இருந்த நிஜத்தை என்னால் உணர முடிந்தது.

அடுத்து, அவனுடைய பெற்றோர்களிடம் இதுகுறித்துப் பேசினேன்.

மூன்றாம் தடவை, ஷ்யாமைச் சந்தித்த போது, "என் பெற்றோர்கள் அதிசயமாக இப்போதெல்லாம் சண்டை போட்டுக் கொள்வதே இல்லை" என்றான்.

"உன் பெற்றோர்களுக்கிடையிலான விவாதம், சண்டை இவை எல்லாம் உனக்கு அப்பாற்பட்ட விஷயங்கள். அந்த விவாதங்களில் உன் தீர்மானங்கள் தேவையில்லாதவை" என்றும் எடுத்துச் சொன்னேன்.

இந்தத் தவறுகளை இன்று பல பெற்றோர்கள் செய்கிறார்கள். ஆனால், நல்ல காலம், ஷ்யாமின் பெற்றோர்கள் தங்களுடைய அணுகுமுறையை மாற்றிக் கொண்டதனால், வீட்டிலும் அமைதி நிலவியது; ஷ்யாம் மறுபடி படிப்பில் பிரகாசிக்க முடிந்தது.

படிக்கிறபோது கவனம் சிதறாமல் இருக்க நான், ஷ்யாமுக்குச் சில டிப்ஸ்களும் கொடுத்தேன். டீனேஜ் பிள்ளைகளான உங்களுக்கும் தருகிறேன் :

• படிக்க உங்களுக்குப் பிடித்த நேரத்தையே தேர்ந்தெடுங்கள்.

• உங்களுக்குக் காதால் கேட்டுக் கிரகித்துக் கொள்ளும் திறன் அதிகம் என்றால் வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்துகிற போது, அதை டேப் செய்து மறுபடி, மறுபடி கேளுங்கள்; அது முடியாவிட்டால், நீங்களே பாடங்களை உரக்கப் படித்து, டேப்பில் பதிவுசெய்து வைத்துக் கொண்டு கேளுங்கள்.

• படிக்கிறபோது, பசி இருந்தால் உடலில் சோர்வு இருக்கும்; படிப்பில் கவனம் செலுத்த முடியாது. அதே நேரம், வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டும் படிக்க உட்காரக் கூடாது. வயிறு நிறைந்திருந்தால் தூக்கம் வரும்.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

ரூ. 150/- பரிசு பெறும் பெட்டிக் கதை!

பள்ளம்!

"ஏண்டி... வீட்டுல எவ்வளவு வேலையிருக்கு; அதைச் செய்யாம பக்கத்து வீட்டுக்கிட்ட இருக்குற பள்ளத்தில போய் மண்ணை அள்ளிப் போட்டுட்டு இருக்கே?" என்று ஆத்திரத்துடன் கத்தினான் விமலாவின் கணவன் பரமு.

'இதோ வர்றேங்க...' என்று கூறிவிட்டு மீண்டும் பள்ளத்தில் அள்ளிப் போட்டாள் விமலா.

"நான் சொல்லச் சொல்ல என்ன பண்றே? அடுத்த வீட்டுக்காரங்க செய்ய வேண்டிய வேலை இது!" என்று கூப்பாடு போட்டான் பரமு.

"பள்ளத்துல தண்ணீர் தேங்கினா கொசு உருவாகும். அந்தக் கொசு, பக்கத்து வீட்டுக்காரங்களை மட்டும் கடிக்காது. நம்மளையும் கடிக்கும். அதனால நமக்கு மலேரியா, டெங்கு, சிக்குன்குனியானு நோய்தான் வரும்" என்று விமலா கூற உண்மையை உணர்ந்தான் பரமு.

அவனும் பள்ளத்தில் மண்ணை அள்ளிப் போட ஆரம்பித்தான்.

- வே. சித்ரா, கும்மிடிப்பூண்டி.



பிஎச்.டி.பாட்டி!

எங்கள் பாட்டி சிறு வயதிலேயே எங்களுக்கு நல்ல பழக்கங்களைச் சொல்லிக் கொடுப்பார். கடிகாரம் ஓடாமல் இருந்தால் உடனே சாவி கொடுக்கச் சொல்வார். 'ஓடாத கடிகாரம் வீட்டுக்கு ஆகாது' என்பார். அதே போல், முகம் பார்க்கும் கண்ணாடி விரிசல் விட்டிருந்தாலோ ரசம் போயிருந்தாலோ, உடனே மாற்றச் சொல்வார். வாசற்கதவு சரியாகச் சாத்தவில்லை என்றால் உடனே அதில் மெழுகு தடவுவார். இரும்புக் கதவாக இருந்தால் எண்ணெய் விட்டுச் சரியாக்குவார்.

"கதவு சத்தம் போட்டால் வீட்டுக்கு நல்லதல்ல. எனக்கு என் அம்மா சொல்லிக் கொடுத்ததை நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்பாரே தவிர, சரியான காரணம் சொல்ல மாட்டார்.

இதையேதான் இந்தக் காலத்தில் 'வாஸ்து சாஸ்திரம்' என்றும், 'பெங்சுயி' என்றும் கூறுகிறார்கள். உடைந்த கண்ணாடி அல்லது ஓடாத கடிகாரம் இவையெல்லாம் உங்கள் படுக்கையறையில் இருந்தால் எதிர்மறை எனர்ஜியை உருவாக்கும் என்றும் கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படும் என்றும் சொல்கிறார்கள். அதனால் மக்கள் உடனே அதனை மாற்றுகிறார்கள். அதே போல் வீட்டின் வாசற்கதவு திறந்தவுடன் அதற்கு நேராக டேபிள், சோபா என்று எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்கிறார்கள். ஏனென்றால் நேர்மறை சக்தி தடையில்லாமல் உள்ளே வர வேண்டும். அதனால்தான் அந்தக் காலத்தில் வாசற்கதவு திறந்தால் நேராக தோட்டக்கதவு தெரிய வேண்டும் என்று சொன்னார்கள். இந்தக் காலத்தில் உள்ள அடுக்குமாடி, தீப்பெட்டி கட்டடங்களில் இது சாத்தியமா? இல்லையென்பதால் சில சாமான்களை மாற்றிப் போட ஆலோசனை சொல்கிறார்கள் வாஸ்து நிபுணர்கள்.

இப்போது புரிகிறதா பாட்டியின் அருமை! இனிமேலாவது பாட்டி சொல்லிக் கொடுப்பதை ஏன் எதற்கு என்று கேள்விகள் கேட்காமல் பின்பற்றினால் நம் வாழ்க்கையிலும் எதிர்மறை சக்திக்கு இடமேயில்லை.

என்ன டென்ஷன்? பாட்டியைத் தேட றீங்களா?

- சாந்தி ராமகிருஷ்ணன், மும்பை.



அமெரிக்காவின் இரண்டாவது பிரம்மாண்டமான நிறுவனமான "பெப்சி" கம்பெனியின் தலைமை நிர்வாகியாகியிருக்கிறார் ஓர் இந்தியப் பெண்மணி. பெயர் இந்திரா நூயி. இதற்காக சென்னைவாசிகள் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ளலாம். காரணம் இந்திரா சென்னையில் பிறந்து, வளர்ந்தவர். அப்பா பெயர் கிருஷ்ணமூர்த்தி. தாம்பரத்தில் உள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் கணிதம், பௌதிகம், ரசாயனம் எடுத்து பட்டப்படிப்பு முடித்தவர். அதன்பின் கொல்கத்தாவில் உள்ள புகழ்பெற்ற இந்தியன் இன்ஸ்டிட்யூட் அஃப் மேனேஜ்மெண்ட்டில் எம்.பி.ஏ. படித்தவர். தொடர்ந்து, அமெரிக்கா சென்று யேல் நிர்வாகவியல் பள்ளியில் படித்துப் பட்ட பெற்றவர். 1955-ல் பிறந்த இந்திராவுக்கு வயது 5 கணவர் ராஜ் நூயி கர்நாடகாவைச் சேர்ந்தவ இந்தத் தம்பதிக்கு இரண்டு பெண்கள்.

1994-ஆம் ஆண்டில், இந்திரா, பெப் நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்தார். 1998- அமெரிக்காவின் புகழ்பெற்ற பழச்சா நிறுவனமான 'டிரப்பிகானா'வை, பெப்சி நிறுவன வாங்கியது. இந்த டீலில் முக்கியமான பங் வகித்தவர் நூயிதான். 2001-ல் பெப்சி நிறுவனத்தி தலைமை நிதி அதிகாரியாக இந்திரா நூயி பொறு பேற்றுக் கொண்டார். 2005-ஆம் ஆண்டில் பிரப வால் ஸ்ட்ரீட் ஜர்னல் பத்திரிகை அமெரிக் பிசினஸ் உலகில் மிகவும் சக்திவாய்ந்தவர்கள் என் ஐம்பது பேர்களைப் பட்டியல் போட்டது. அதி இந்திராநூயிக்கு இடம் கிடைத்தது.

புடவைதான் எனக்குப் பிடிச்ச டிரஸ்!

பிரபல ஃபார்ச்சூன் இதழின் சக்திவாய்ந்த பிசினஸ் பெண்மணிகள் பட்டியலில் நூயிக்குப் பதினொன்றாவது இடம் கிடைத்தது. நாற்பதாண்டு கால பெப்சி சரித்திரத்தில், தலைமை நிர்வாகியாகப் பொறுப்பேற்கும் ஐந்தாவது நபரும், முதல் பெண்மணியும் இவரே!




- இந்திரா நூயி

இவருக்கு முன்பு பெப்சி நிறுவன தலைமை நிர்வாகியாக இருந்த ஸ்டீவ் ரீனமுண்ட், "பெப்சி நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இந்திரா ஆற்றியுள்ள பணி மகத்தானது. அவரது வியூகங்கள் தொலை நோக்கு கொண்டவை. எனக்குப் பிறகு இந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகியாகப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முற்றிலும் தகுதியானவர்

ரைஸ் குக்கர் வைத்திருப்பவர்கள், குளிர்க் காலங்களில் அதில் தண்ணீர் ஊற்றி காலையில் ஆன் செய்து வைத்தால், சமையல் செய்ய உபயோகமாக இருக்கும். வெந்நீரைப் பயன் படுத்தி செய்தால் சீக்கிரம் சமையல் ஆகும். கேஸ் ஒரு வாரமாவது கூடுதலாக வருகிறது. என் அனுபவத்தில் கண்ட உண்மை. ரைஸ் குக்கரை கீப் வார்மில் வைக்க எப்பொழுது வேண்டுமானாலும் குடிக்க வெந்நீர் கிடைக்கும்.

- சத்யா பாமா தியாகராஜன், திருவான்மியூர்.



உடல்வாகுக்குப் பொருத்தமில்லாமல் ஒரு குண்டு பூசணிக்காய் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. பரவாயில்லை என்று அப்படியே இன்டர்வியூவுக்குச் சென்றேன். எனக்கு வேலை கிடைக்கவில்லை.

வேலை வாய்ப்பு ஆலோசகரை அணுகி, "எனக்கு ஏன் வேலை கிடைக்கவில்லை?" என்று கேட்டேன். அவர் நான் சொன்னவற்றையெல்லாம் கேட்டுவிட்டு, "நீ அடுத்த முறை இன்டர்வியூவுக்குப் போகிறபோது ஓர் இந்தியப் பெண்ணின் பாரம்பரிய உடையான புடைவை அணிந்து கொண்டு போ" என்று ஆலோசனை கூறினார். "ஒருவேளை நான் புடவை அணிந்து கொண்டு சென்று, அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றால்?" என்று என் தயக்கத்தை வெளிப்படுத்தினேன். ஆனால் அந்தப் பெண்மணி, "அதனால் நஷ்டம் அவர்களுக்குத்தான். எனவே கவலைப்படாமல் போ! உன் திறமையைக் காட்டு!" என்று ஊக்கமளித்தார்.

அடுத்தமுறை நான் அப்படியே செய்தேன். எனக்கு வேலை கிடைத்து விட்டது. இந்த மகிழ்ச்சியான செய்தியை அந்த வேலைவாய்ப்பு ஆலோசகரிடம் பகிர்ந்து கொண்டபோது அவர் சொன்ன வார்த்தைகள், "நல்லது. நீ ஒருபோதும் உன்னுடைய ஒரிஜினாலிட்டியை விட்டு விடாதே." நான் அதன் பிறகு என் அலுவலகத்துக்கே கூட புடைவை அணிந்து செல்லத் தயங்கவில்லை.

'உங்களின் வெற்றி ரகசியம் என்ன?' என்ற கேள்விக்கு அவரது பளிச் பதில்: "எப்போதும், எல்லா விஷயங்களிலும், திறந்த மனதுடன் அணுகுங்கள். எதையும் முன்கூட்டியே இப்படித்தான் என்று தீர்மானம் செய்து கொண்டு விடாதீர்கள். மேலும் வாழ்க்கையில் வெற்றிக்கு அஸ்திவாரமே குடும்பம், நண்பர்கள், இறைநம்பிக்கை மூன்றும்தான்."

- எஸ். சந்திரமௌலி



கெட்டியான கலர் பேப்பர்களை வாங்கி, வட்ட வடிவமாக வெட்டி, ஓரங்களில் வெவ்வேறு டிசைன்களில் கத்தரிக்கவும். அகல் விளக்குகளின் அளவுக்கேற்ப, அவற்றை விளக்குகளின் அடியில் வைத்தால், கார்த்திகை தீப வரிசை ஒளி கலர் கலராகவும் அழகாகவும் இருக்கும்.

- ஹம்ஸா, கீழக்கரை.

ந்திரா நூயி" என்று சான்றிதழ் வழங்கு றார்.

"பெப்சி நிறுவனத்தின் உயர் பொறுப் பில் இருந்தாலும், அடி மட்டத்தில், வியாபார உலகில் என்ன நடக்கிறது என்பதை நான் நேரடியாகக் களத்தில் இறங்கி அறிந்து கொள்ளுகிறேன். ஒரு வாரத்தில் குறைந்தது அரை நாள் பல்வேறு சூப்பர் மார்க்கெட்களுக்கும் சென்று எங்கள் தயாரிப்புகள், எங்களின் போட்டியாளர்களின் தயாரிப்புகள், இதர பொருட்கள் குறித்த உண்மையான நிலவரத்தை நான் தெரிந்து கொள்கிறேன். இது எங்கள் நிறுவனத்தில் முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு எனக்கு அடிப்படையாக அமைந்து உதவுகிறது.



"எந்த ஒரு காரணத்துக்காகவும் உங்களுக்கென்று இருக்கும் தனித்தன்மையினை இழந்துவிடாதீர்கள். இது நான் என்னுடைய அனுபவத்தில் கற்றுக் கொண்ட பாடம்'' என்கிறார் இந்திரா நூயி. அந்த அனுபவத்தையும் பகிர்ந்து கொள்கிறார். இந்தியாவில் எம்.பி.ஏ. படிப்பை முடித்துவிட்டு, மேற்படிப்புக்காக அமெரிக்காவுக்கு வந்தபோது, என்னுடைய செலவுக்குப் பணம் சம்பாதிப்பதற்காக வேலைக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒரு கம்பெனிக்கு இன்டர்வியூவுக்குப் போனேன். அதற்கு முந்தைய தினம் ஐம்பது டாலர் பணம் திரட்டிக் கொண்டு, ஒரு கடைக்குச் சென்று பெண்களுக்குரிய சூட் உடை ஒன்றை வாங்கினேன். மறுநாள் அதை அணிந்து கொண்டு கண்ணாடி முன்னால் நின்றபோது, என் புதிய உடை என்



தொப்பையா? துரத்தி விடலாமே!

நவீன உலகில் பல பெண்களை ம் வாட்டி எடுக்கும் ஒரு சவால் - அதிகமாகி வரும் எடையை எப்படிக் குறைப்பது?

"உண்மைதான். இதுபோன்ற சிக்கல்களைச் சந்திக்கும் பெண்கள் பலரும் இங்கே வருகிறார்கள். முக்கியமாக வயிற்றுப் பகுதியில் சதை சேர்ந்து பல இடங்களிலும் சிகிச்சை எடுத்துக் கொண்டும் அதைப் போக்க முடியாமல் போய் என்னிடம் வருபவர்களும் உண்டு. அவர்களது பிரச்னையைச் சுலபமாகத் தீர்க்க முடிவதில் எனக்கு மிகவும் சந்தோஷம்" என்கிறார் செல்வி ரிஷிதா. சென்னை தியாகராய நகரில் 'ஸ்லிம் அண்ட் கேர்' எனும் நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

"அதிக வயது கொண்ட பெண்மணிகள் கூட எங்களிடம் எடைக் குறைப்புக்காக வந்ததுண்டு. அப்படி வந்த 52 வயதுப் பெண்மணி ஒருவரின் எடை 110 கிலோ. கணவரை இழந்தவர். அந்த சோகத்தின் காரணமாகவே முடங்கிப் போய் எடை அதிகமாகி விட்டது என்றார். 'என் ஒரே மகன் என்ஜினியரிங் படிக்கிறான். என் அதிக எடை பலவித நோய்களில் கொண்டு விட்டு, நான் இறந்து போய் அவன் அனாதை ஆகிவிடக் கூடாது' என்று அழுது கொண்டே சொன்னார் உரிய பயிற்சிகள் அளித்து அவரது எடையைக் குறைத்தோம்" என்றார்.

பயிற்சிகள் பற்றிய விவரங்களைக் கேட்டோம்.



• ரிஷிதா

பொதுவாக எங்களிடம் இரண்டிலிருந்து மூன்று மாதங்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டால் ஐந்திலிருந்து பன்னிரண்டு கிலோ வரை எடை

குறையும். இது அவரவர் உடலின் 'கலோரிகளை எரிக்கும் தன்மை'யைப் பொருத்தது.

எடைக்குறைப்பு மட்டுமல்ல. மொத்த உடல் வடிவத்திலுமே உரிய மாற்றங்களைக் கொண்டுவரச் செய்கிறோம். அதாவது சிலருக்கு கை, தொடை போன்ற பகுதிகள் மிகவும் பருமனாகக் காட்சி தரும். இந்தக் குறைபாடுகளை நீக்குகிறோம்.

வாரத்துக்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை என்று மொத்தம் பதினான்கு வகுப்புகளுக்கு வரவேண்டும். ஒவ்வொருமுறையும் ஒன்றரை மணி நேரப் பயிற்சி.

சிலருக்கு உடலுக்கு மட்டுமல்ல, மனதிற்கும் பயிற்சி அளிக்க வேண்டியிருக்கும். "எவ்வளவோ முயற்சி எடுத்தாச்சு. எடை குறைவதாகவே இல்லை. இங்க மட்டும் குறையப் போகுதா என்ன!" என்பது போல் எதிர்மறை சிந்தனைகளை நிரப்பிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு முதலில் நம்பிக்கை ஊட்டுவேன். மேலும் முதல் வாரத்திலேயே தங்கள் உடலில் நேரும் மாற்றங்களைக் கண்கூடாகப் பார்த்தபிறகு அந்த நம்பிக்கை தானாகவே வலுப்பெற்றுவிடும்'' என்றவர் தனது மையத்தில் பயன்படுத்தப்படும் சருவிகள் குறித்து விளக்கினார்.

"இந்தக் கருவி 'டாப்பிங்' 'டோனிங்' ஆகிய இரண்டையும் செய்கிறது. உடலில் - முக்கியமாக வயிற்றுப் பகுதியில் சின்னச் சின்ன 'பேட்ச்'களைக் கட்டி விடுவோம். கொழுப்பைப் பரவலாக்க 'டாப்பிங்' உதவுகிறது. அதே சமயம் அங்கு சருமம் சுருங்கித் தொங்காமல் இருக்க 'டோனிங்' உதவுகிறது.

மற்றொரு கருவி இத்தாலியிலிருந்து வாங்கப்பட்டது. இதை உடலில் பொருத்திக் கொண்டால் அது உடல்லுள்ள செல்களை வேகமாகச் செயல்பட வைக்கிறது. கொழுப்பையும் பரவலாக்குகிறது. இதனால் ரத்த ஓட்டம் அதிகமாவதால் ஹார்மோன் பிரச்னைகள், அதிக ரத்தக் கொதிப்பு, மூட்டுவலி ஆகியவையும் நீங்க

புதுச் செருப்பு கடித்து விட்டது. இரண்டு 'பேண்ட் எய்டு' வாங்கிக் காலில் எந்தெந்த இடத்தில் காயமோ, அந்தந்த இடத்தில் செருப்புக்கு பேண்ட் எய்டு போட்டு விட்டேன். செருப்பு வாய் திறக்க முடியாமல், கடிப்பதையே நிறுத்திக் கொண்டது!

- எச். ரியாஜ் சுல்த்தானா, கீழக்கரை.





தயாரிப்பாளருக்கு ஒரு யோசனை!

சுகந்தமான ஊதுவத்திகளைச் செருகப் பயன்படுத்தும் 'ஸ்டாண்டு'களை இரண்டு பாகமாகத் திருகுவது போல் செய்வதால் எளிதாகத் திறந்து சுத்தப்படுத்த முடியுமே!

- சரோஜா ராவ், பெங்களூர்.

ரெய்கி கிராண்ட் மாஸ்டர்

டாக்டர் பி.எஸ். லலிதா

பதிலளிக்கிறார்...



உங்கள் கேள்விகளை அஞ்சலட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்க.

கடைசித் தேதி 15.11.06

வழி உண்டு.

எல்லாப் பயிற்சிகளுமே ஓய்வான நிலையில் - படுத்துக் கொண்டே செய்யக் கூடியவை.

வகுப்பில் சேர்ந்த முதல் வாரத்தில் உடல் இலேசான மாதிரி தெரியும். இருபது முப்பது நாட்களில் எடைக் குறைப்பு வெளிப்படையாகக் கணிசமாகத் தெரியும்.

குறிப்பாக, எவ்வளவு எடை குறையு மென்பது ஒவ்வொருவருக்கும் மாறுபட வாய்ப்பு உண்டு. எத்தனை வருடங் களாகச் சேர்ந்த கொழுப்பு; தைராய்டு, மாதவிலக்கு போன்றவற்றில் சிக்கல் உண்டா என்பதைப் பொருத்தது இது. எதை வேண்டுமானாலும் சாப்பிடுங்கள். ஆனால் அந்தக் கொழுப்பை 'எரித்துவிட வேண்டும்' என்பதுதான் முக்கியம்.

நாற்பது வயதைத் தாண்டிய பலருக் கும் முகத்தில் சுருக்கம் விழுகிறதே என்ற கவலை. இந்தச் சரும சுருக்கங்களை நீக்கவும், சருமத்துக்கு மினுமினுப்பு தரவும் வழிசெய்கிறோம்.

ஒரு தம்பதிக்கிடையே கசப்பு! மனைவி மிகப் பருமன் என்பதால் விலகி, கருவுறா மலே போய் விவாகரத்து வரை சென்று விட்டது. அந்தப் பெண் வருத்தத்துடன் எங்கள் மையத்துக்கு வந்தார். இரண்டு மாதங்களில் அவர் உடல் நன்கு இளைத் துப் பொலிவு பெற்றதில் அந்தத் தம் பதிக்கு இப்போது ஒரு குழந்தை இருக் கிறது.

இதய நோய் கொண்டவர்களை அனுமதிப்பதில்லை. அவர்களது டாக்டர் கள் பரிந்துரைத்து அதை எழுத்து மூலம் அளித்தால் மட்டுமே அனுமதிப்போம். கருத்தரித்த பெண்களுக்கும் பிரசவமாகி சில மாதங்களுக்கும் பயிற்சி அளிப்ப தில்லை.

கைனகாலஜிஸ்டுகள் கூட இங்கு பயிற்சி பெறுகின்றனர். இங்கு பயிற்சி எடுத்துக் கொள்ளும் மணமாகாத பெண் களுக்கு விரைவில் திருமணமாகிறது என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது. எல்லாம் கடவுள் அருள்!" என்றபோது ரிஷிதாவின் குரலில் பரவசம்!

- குல்லூ

டி.வி. தக்ஷ்ணா, அம்பர்நாத் (மகாராஷ்ட்ரா)

மங்கையர் மலர் செப்டெம்பர் இதழில், வடநாட்டுக் கோயில்களில் ஆஞ்சநேயர் ஆரஞ்சு நிறமாக இருப்பதற்கு விளக்கம் அளித்திருந்தீர்கள். அது போல விநாயகரும் ஆரஞ்சு நிறமாக இருப்பது ஏன்?

சிவபெருமான் செந்தழல் நிறம் கொண்டவர். 'தீ வண்ணனே!' என்கிறது தேவாரம். அபிராமியை, 'மாதுளம் பூ நிறத்தாளே!' என்று வர்ணிக்கிறார் அபிராமிபட்டர். அப்பாவும் சிவப்பு, அம்மாவும் சிவப்பு... அதுதான் பிள்ளையும் செக்கச் செவேல் என பிறந்திருக்கிறது. ''ஸ்ரீகணநாதா, சிந்தூர வர்ணா!'' என்றுதானே ஸ்ரீபுரந்தரதாஸரே பிள்ளையாரைப் போற்றுகிறார்!

பி. கமலா, கல்பாக்கம்.

நல்ல கதை, கட்டுரை, கவிதை எல்லாம் எழுதுவதற்கு திறமை தேவையா? கற்பனை தேவையா? அனுபவம் தேவையா? அறிவு தேவையா?



ஒரு நல்ல காப்பியைத் தயாரிக்க, பால் தேவையா? டிகாக்ஷன் தேவையா? சர்க்கரைத் தேவையா? கைப்பக்குவம் தேவையா. இதுக்கு நீங்க பதில் சொல்லுங்க. உங்க கேள்விக்கு நான் பதில் சொல்றேன்.

பத்மினி நடிப்பு



பின்குறிப்பு 1 : காப்பி பிரேக்கில் எழுதப்பட்ட பதில் இது!

பின்குறிப்பு 2 : நிறைய எழுதுறீங்க முதல்ல, உங்க பெயர், கமலாவா கோமளாவான்னு தயவுசெய்து தெரியப்படுத்தவும். ஆங்கிலக் கையொப்பம் புரியவில்லை.

நெ. பிரஜோற்பத்திகலை, பெருமாத்தூர்

மனிதன் தங்கப் பாத்திரங்களைப் பயன்படுத்திய காலக்கட்டத்தில், தங்க நாணயங்கள் புழங்கின. வெள்ளிப் பாத்திரங்களைப் பயன்படுத்திய போது, வெள்ளி நாணயங்களும், செம்பு, பித்தளைப் பாத்திரங்களைப் பயன்படுத்திய போது, செம்பு, பித்தளைக் காசுகளும் வழக்கத்துக்கு வந்தன. அதன் பிறகு நிக்கல், அலுமினியம் பயன்படுத்தப்பட்டன. தற்போது எவர்சில்வர் நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன. 21ம் நூற்றண்டில் மக்கள் பிளாஸ்டிக்கைதானே அதிகம் பயன்படுத்துகின்றனர். பணம் மட்டும் ஏன் பிளாஸ்டிக்கில் இல்லை?

ஏடிஎம்., கிரெடிட் கார்டுகள் போன்றவை பிளாஸ்டிக் அல்லாமல் வேறென்னவாம்?



நடித்தது எது?

எம். சொர்ணலதா, மயிலாடுதுறை.

மறைந்த நடிகை நாட்டியப் பேரொளி பத்மினி நடித்த படங்களில் உங்களைக் கவர்ந்தது எது?

'பத்மினி' என்றதுமே தில்லானா மோகனாம்பாளும், 'வியட்நாம் வீடு'ம் சட்' என்று நினைவுக்கு வந்தாலும், சிக்கல் சண்முகத்தின் காதலியை, மிஸஸ் பிரெஸ்டிஜ் பத்மனாபன் ஓவர் டேக் செய்து விடுகிறார். முதுகு போர்த்திய அந்த மடிசாரை லாகவமாக இழுத்து விட்டுக் கொண்டே, இலேசான ஆங்கிலம் கலந்த பிராம்மண மொழி பேசி, நவரசம் காட்டிய அந்தப் பாலக்காட்டு அம்மாமி சாவித்திரியை (சிவாஜியின் உச்சரிப்பில் 'ஷாட்ரே!') மறக்க முடியுமோ?

எம். ஜெயந்தி சுகுமார், விருத்தாசலம்.

அனுஷா, நீங்க பக்தி மானோ?

மானெல்லாம் கிடையாது! பக்தி பூனை!

இந்தக் குரங்குக் குட்டியிருக்கே, தாய்க்குரங்கு எங்கே ஏறினாலும், தாவினாலும், எவ்வளவு வேகமா ஓடினாலும், பிடிச்சப் பிடியை விடாது தாயைக் கெட்டியா பிடிச்சுக்கும். அதுவே... பூனைக் குட்டியைப் பார்த்திருக்கீங்களா? தாய்ப்பூனை வலிக்காமல் கவ்விக்கிட்டுப் போகும். இதுபாட்டுக்கு ஜாலியா ஒரு விசாரமும் இல்லாமல் இருக்கும்!

"பகவானே... நீதான் சகலமும்"னு சரணாகதியாகி, கடவுளோட பாதங்களை விடாமல் கெட்டியா பிடிச்சுருக்கிறது குரங்குக் குட்டி பக்தி!

"தோ... பாருப்பா... நான் உன்னோட குழந்தை. என் மேலே உனக்கு அக்கறையிருந்தா, நீயே என்னை வழி



-அனுஷா நடராஜன்

நடத்து'ன்னு கடவுள் மேல பாரத்தைப் போட்டுட்டு, அமைதியா இருக்கிறது பூனைக்குட்டி பக்தி!

நீங்க குரங்கா... பூனையா?

பெயர் வெளியிட விரும்பாத வாசகி.

எங்களது அடிப்படைத் தேவைகளைக் கூட தியாகம் செய்து, கண்ணாக வளர்த்த பிள்ளைகள் இன்று எங்களைக் கண்டுகொள்வதே இல்லை. "வாடா... போடா!" என்று அழைக்கும் மனைவிகள் பின்னால் குழைந்து கொண்டு ஓடுகிறார்கள். அதைப் பார்க்கவே மனசு கஷ்டப்படுகிறது.

கண்ணீரில் கரைந்திருக்கும் உங்கள் கடிதத்தை முழுமையாகப் படித்தேன்.

பிரம்மதேவன் படைப்புத் தொழிலில் பிஸியாக இருந்த சமயம், ஒவ்வொரு உயிரினமாகப் படைத்து முடித்ததும், தனது சக்திகளையெல்லாம் திரட்டி குறையே இல்லாத ஒரு தாயைப் படைத்தாராம்.

சில காலம் கழித்து, தனது தேவியுடன் பூலோகம் வந்த பிரம்மன், குறையே இல்லாத தாயைச் சந்தித்தார்.

"சாமி... எனக்கு இன்னும் இரண்டு கைகள் இரண்டு கால்கள் கொடுத்தால், என் பிள்ளைகளுக்கு இன்னும் சிறப்பாகச் சேவை செய்வேனே!" என்றாளாம்.

"ஆகட்டும். அப்படியே தருகிறேன்!" என்று வரமருளினார் கடவுள்.

இன்னும் சில காலம் கழிந்தது. தன்னுடைய அபூர்வப் படைப்பைப் பார்க்க மீண்டும் வந்தார் பிரம்ம தேவன்.

அந்தத் தாயோ, வயோதிகம் அடைந்து, வறுமையில் தனியாக அழுது கொண்டிருந்தார்.

"இதென்ன சுவாமி... அதிகமாகக் கைகள், கால்கள் தந்த நீங்கள், கண்ணீரையும் தந்து விட்டீர்களே!' என்றாளாம் தேவி.

"தேவி... கைகளைத் தந்தது நான் தான்... கால்களைக் கொடுத்தது நான் தான். ஆனால் கண்ணீரை நான் கொடுக்கவில்லை. அதை அவளது பாசம் தந்து விட்டது!" என்றாராம்.

பிரம்மதேவனின் அபூர்வப் படைப்புக்கே இந்த அவஸ்தை என்றால், சாதாரண அம்மாக்களுக்கு ஆறுதல் சொல்ல ஏதாவது வார்த்தைகள் உண்டா என்ன?



வெந்தயக் கீரையை மைக்ரோவேவில் சூடாக்கி மொறுமொறுப்பாக காய்ந்ததும் டப்பாவில் வைத்துக் கொண்டால், வடநாட்டு சப்ஜிகளில் 'கசூரிமேத்தி'யாக உபயோகிக்கலாம். சுவையும், மணமும், சத்தும் அதிகம்தான்.

- எல்.கே. பாக்யலக்ஷ்மி, சென்னை.



பாட்டிலில் உள்ள கெட்சப் சுலபமாக வராவிட்டால் ஸ்ட்ராவை கெட்சப்புக்குள் செருகவும். சுலபமாக வெளிவரும் கெட்சப்.

- ஹேமப்ரியா, வளசரவாக்கம்.



தைலத்தில் தா...தை...

விடுகதை

அ. அஞ்சு விரல் அமர்ந்தாட
பத்து விரல் பந்தாட
சூரியனுடன் வாதாட
எமனுடன் போராட
அது என்ன?

ஆ. தலைக்கு மேல் தாவும் பூ
தண்டோடு இருக்கும் பூ
வெயிலுக்கும் மழைக்கும்
விரிந்து கொடுக்கும் பூ
என்ன பூ ?

இ. காடு வெள்ளக் காடு
கானம் கருத்த கானம்
கையால விதைத்து
கண்ணால பொறுக்கணும்
அது என்ன?

ஈ. ஓயாது இரையும் இயந்திரமல்ல
உருண்டோடி வரும் பந்துமல்ல
அது என்ன?

உ. ஏரிக்கரை உயர்ந்திருக்கும்
எட்டிப் பழம் சிவந்திருக்கும்
காகம் கறுத்திருக்கும்
காக்கைக் குஞ்சு வெளுத்திருக்கும்

ஊ. வீடு இரண்டு விடுதி பதினான்கு
ஆடும் பெண்கள் எழுபது பேர்
ஆட்டி வைப்பவர் இரண்டு பேர்.



எ. தவழும் போது ஒரு பெயர்
விழும் போது மறுபெயர்
உருளும் போது வேறு பெயர்

ஏ. தவறினால் ஓடிடுவாள்
தடுத்தால் நின்றிடுவாள்
தைலத்தில் நின்று
'தா' 'தை' என்று
ஆடிடுவாள்! அவள் யார்?

- பா. செண்பகவல்லி,
எண்ணூர்.


அ. வரட்டி ஆ. குடை இ. எழுத்து ஈ. கடல்
உ. அடுப்பு, நெருப்பு, கரி, சாம்பல்.
ஊ. பல்லாங்குழி எ. மேகம், மழை, நீர் ஏ. கடுகு

கேன்ஸர் நோயா?

கவலை வேண்டாம்!

புற்றுநோய்க்கு புதிய அணுகுமுறை!





Dr. K. Sri Sridar

குருபாலா கிளினிக்கின்

HERBAL ONCOLOGY™

சிகிச்சை

மகிழ்ச்சியை மீண்டும் உங்களுக்கு கொண்டு வருகிறது


CA. ESOPHAGUS

Liver Mets
Before Treatment

Hypodense space occupying leison in the left lobe of Liver.

சேலத்தை சேர்ந்த 37 வயதுள்ள பெண்மணிக்கு உணவுக்குழாய் புற்று லிவரில் பரவிட்டதை காட்டும் CT ஸ்கேன் ரிபோர்ட்.

CT SCAN
Date: 21.03.2006




Liver is normal Liver shows homogenous. Parenchymal tissue density On contrast.

நான்குமாத ஹெர்பல் ஆன்காலஜி சிகிச்சைக்கு பிறகு லிவரில் இருந்த புற்றுநோய் மறைந்து விட்டதை காட்டும் CT ஸ்கேன் படம்.

After Herbal Oncology

CT SCAN
Date: 26.07.2006





ஆஸ்துமா நோயாளிகளின் கவனத்திற்கு!

- விடியற்காலை மூன்று மணி முதல் ஐந்து மணி வரை வீசிங் வருகிறதா?
- இரவில் தூங்கும்பொழுது வீசிங் வருகிறதா?
- தாளிக்கும் வாசனையும், ஊதுவத்தி வாசனையும் கூட அலர்ஜியாகி விடுகிறதா?

டாக்டர் கே.ஸ்ரீ. ஸ்ரீதர் வடிவமைத்த ஹோலிஸ்டிக் முறையிலான 40 நாள் மருந்து நோயாளிகளின் தன்மைக்கேற்ப வழங்கப்படுகிறது. நீண்ட நாள் ஆஸ்துமா கூட கட்டுப்படுகிறது.

நம்பிக்கையோடு வாருங்கள்! ஆரோக்கியமாக வாழுங்கள்!!

கை விடப்பட்ட கேன்ஸரா ? கவலை வேண்டாம்

எல்லாவித புற்று நோய்க்கும் சிகிச்சை உண்டு. நோயாளி நேரில் வர வேண்டியது இல்லை. முழுமையாக எல்லா ரிப்போர்ட்டுகளையும் அனுப்பி வைக்கவும். Herbal Oncology™ சிகிச்சை என்பது டாக்டர் கே. ஸ்ரீ ஸ்ரீதர் வடிவமைத்த அற்புத முறையாகும். பத்தியம் இல்லை. மற்ற மருந்துகளோடும் சேர்த்து சாப்பிடலாம். வாழும் போது நோய் தொந்தரவு குறைந்து நிம்மதியாக சந்தோஷமாக வாழலாம். அவர்களின் வாழ்நாள் 40% அதிகரிக்க முயற்சிக்கலாம். இதற்கு Herbal Oncology™ சிகிச்சை பயனுள்ளதாக அமைகிறது. டாக்டர்களால் கைவிடப்பட்ட நோயாளிக்கும் உடனே நன்மை அளிக்கிறது.


Royale Apartment, 6, Mannar Reddy Street,
(Opp. Street to T.Nagar Bus Terminus)
T.Nagar, (Next to Krishnaveni Theatre), Chennai - 600 017.
Weekdays : 10.00 am to 5.30 pm, **Sunday Holiday**
Clinic: Ph: 044-24339596, 24363835 Cell: 99400 58809

Gurubalaa™ Clinic™

Speciality Clinic For Herbal Oncology and Asthma. Treatment given by Qualified & Experienced Doctors.

நேரில் வரமுடியாதவர்கள் தங்கள் நோயின் விவரத்தை எழுதி அனுப்பினால் கூரியர் மூலம் மருந்துகள் அனுப்பி வைக்கப்படும்.

E-mail : drherbaloncology@yahoo.co.in



globus®
FASHION FOR A CHANGING WORLD
MENS WEAR • LADIES WEAR • KIDS WEAR
CHENNAI – T Nagar: 113/114 Sir Theyagaraya Road, Meena Kampala Arcade. Tel: 28155058
Adyar: 36, Lattice Bridge Road, Adyar. Tel: 2446 6274
BANGALORE – Koramangala: Salarpuria Towers II, Lusker Hosur Road, Koramangala. Tel: 6667 0802
Richmond Road: Prestige Corniche, 62/1 Richmond Road. Tel: 6661 0123

Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN / CC (S) DN / 170 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 103 / 06 - 06* Registered as a Newspaper in Srilanka




என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
திருமண மலர்
நவம்பர் 2006
புத்தகம்-2
உள்ளே:
மளிகை மாளிகை
ரெடிமேட் மளிகை லிஸ்ட்
பார்த்த முதல் நாளே!



அருமையான திருமணப் பரிசு!

திருமணத்துக்குப் போகிறவர்கள் மணமக்களுக்குப் பரிசு கொடுப்பார்கள். அல்லது மொய் எழுதுவார்கள். ஆனால், ஒரு திருமணத்துக்கு வந்தவர்கள் இரத்த தானம் செய்தார்கள்!

இந்தத் திருமணம் மைசூரில் நடந்தது. மணமகன், கிரண்குமார் இரத்த சேமிப்பு வங்கியில் மேலாளராகப் பணியாற்று கிறார். இதுவரை 38 முறை இரத்ததானம் செய்திருக்கிறார்.

இரத்ததானம் செய்யும் பெண்தான் தனக்கு மனைவியாக வரவேண்டும் என்று குமார் தேட, அவருக்கு சவிதா என்கிற பெண் கிடைத்தார். சவிதாவும் இதுவரை 11 முறை இரத்த தானம் செய்திருக்கிறார்.

'திருமணத்துக்கு வருபவர்கள் இரத்த தானம் செய்ய வேண்டும்! இதுவே மணமக்களுக்குக் கொடுக்கும் திருமணப் பரிசு' என்று அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தார்கள்! இரத்தம் எடுக்க ஒரு மருத்துவரும், உதவியாளர்களும் தயாராக இருக்க, 85 பேர் இரத்த தானம் செய்தார்களாம்!


இம்முறையை நாமும் பின்பற்றினால் பல நோயாளிகளின் வாழ்வில் ஆரோக்கியம் மலருமே!

- ஜி. ஜெயலெட்சுமி,
சென்னை - 64.



ராஜயோக அதிர்ஷ்ட மகா நியூமராலஜி வெள்ளி மோதிரம்

ராஜயோக அதிர்ஷ்ட மகா நியூமராலஜி வெள்ளி மோதிரத்தை அணிந்தால் தடைகள் தவிடுபொடியாகும். இம் மோதிரம் உங்களைச் சுற்றி அபூர்வ அதிர்வலைகளைத் தோற்றுவிப்பதால் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் குதூகலமாக இருக்கலாம். இம்மோதிரம் அற்புத உயிராற்றலையும், உயிர் மின்காந்த அலைகளையும், உருவாக்குவதால் ஆரோக்கியம் அதிகமாகும். நோய்கள் உங்கள் உடலை விட்டுப் போய்விடும். இம்மோதிரம் அதிர்ஷ்ட நியூமராலஜி எண்களை மோதிரத்தின் உட்பாகம் எழுதி 21 நாட்கள் பூஜையில் வைத்து உருவேற்றப்பட்டது. பஞ்சபூதங்களின் ஆற்றலை மந்திரங்களாக மாற்றியும் இதில் உருவேற்றி இருப்பதால், அதை அணிபவர்களுக்கு பஞ்ச பூதங்கள், நவக்கிரகங்கள், எண் திசைகள் போன்றவைகள் சாதகமாக அமையும். மேலும், இல்வாழ்க்கை உயர்வு, காதல் கைகூடுதல், கடன் பிரச்னைகளுக்குத் தீர்வு, வியாபார அபிவிருத்தி, படிப்பில் உயர்வு, உத்தியோக உயர்வு, தொழில் வெற்றி, குடும்பத்தில் மகிழ்ச்சி, காரியம் கைகூடுதல், பதவிகள் தானாகத் தேடி வருதல் போன்ற நன்மைகளும் உண்டாகும். ஆன்மீக ஆய்வாளர், சமூக விஞ்ஞானி, நியூமராலஜி வாழ்வியல் நிபுணர் 52 வருட அனுபவம் மிக்க ஜோதிஷ்ய விபூஷணா குருஜி ஆர் என் ராஜா ஐயாவின் அரிய படைப்பு இது.



இந்த மோதிரத்தை வாங்குபவர்களின் பெயர், ராசி, பிறந்த தினம், மாதம், வருடம் போன்றவற்றை கணித்து, அதற்கேற்ப ஸ்லோகத்தை வழங்குகிறோம். பிறந்த தினம், மாதம், வருடம் போன்ற குறிப்புகள் இல்லாதவர்களுக்கு பிரசன்ன ஜோதிட முறையில் கணித்து அதற்கேற்ப ஸ்லோகத்தை வழங்குகிறோம். இந்த ஸ்லோகத்தை ஜெபித்து வந்தால், சகல நன்மையும் உண்டாகும்.


ராஜயோக தன வசீகர யந்திரம்,
மந்திர தாயத்துக்கள் மகிமையால்தான்!

தனவசீகர யந்திரமும், மந்திர தாயத்துக்களும் கிரகங்கள் கூடும் சூட்சும காலத்தில் சுபயோகத்தில் சித்தர் விதித்தப்படி பூஜை செய்து சக்தியூட்டப்பட்டது. தன வசீகர யந்திரத்தை உங்கள் இல்லத்தில் அல்லது தொழில்கூடத்தில் வைத்தால் பண மழையில் திளைக்கலாம். வியாபாரத்தில் விருத்தி அடையலாம்.




ஆசைப்பட்டதை அடைய,பகை நீங்க, திருமணம் உடனடியாக நடக்க, கணவர் மனைவி உறவு பலப்பட புத்திர பாக்கியம் கிடைக்க, பதவி உயர்வை பெற, குழந்தைகள் படிப்பில் கெட்டிக்காரர்களாக விளங்க இந்த யந்திரம் உதவும். ஏழரைச்சனி, வியாபார நஷ்டம், மனநோய், வழக்குகள், விபத்துக்கள், தீராத நோய்கள் நீங்கும். 21 நாட்கள் பூஜையறையில் வைத்து உருவேற்றப்பட்ட இந்த மந்திர தாயத்துக்களை அணிந்துகொண்டால் உங்கள் எதிரிகள் நீங்குவார்கள். யானை பலம் வந்த மாதிரி நீங்கள் உணருவீர்கள். மனோபலம் கூடி எடுத்த காரியம் வெற்றி பெறும். மாணவ மாணவிகள் இண்டர்வியூவிற்கோ, பரீட்சைக்கோ தாயத்தைக் கட்டிச் சென்றால் வெற்றி பெறலாம்.

சாஸ்திர, மந்திர, யந்திர விதிகளின்படி 52 வருடம், ஆன்மீக ஆராய்ச்சி அனுபவம் மிக்க சமூக விஞ்ஞானி ஜோதிஷ்ய விபூஷணா குருஜி ஆர்என் ராஜா ஐயா அவர்களின் கண்டுபிடிப்பால் தயாரிக்கப்படும் யந்திரங்கள், தாயத்துக்கள், தெய்வீகம், செல்வயோகம் உடையவை. இந்தத் தாயத்தை வாங்குபவர்களின் பெயர், ராசி, பிறந்த தினம், மாதம், வருடம் போன்றவற்றை கணித்து, அதற்கேற்ப ஸ்லோகத்தை வழங்குகிறோம். பிறந்த தினம், மாதம், வருடம் போன்ற குறிப்புகள் இல்லாதவர்களுக்கு பிரசன்ன ஜோதிட முறையில் கணித்து அதற்கேற்ப ஸ்லோகத்தை வழங்குகிறோம். இந்த ஸ்லோகத்தை ஜெபித்து வந்தால் சகல நன்மையும் உண்டாகும்.



தாயத்து (சுப்ரீம் பவர்),
தாயத்து (சூப்பர் பவர்),
தாயத்து (ஸ்பெஷல் பவர்)



சக்தியூட்டப்பட்ட சர்வகாரிய மஹா சித்தி ராஜயோக வசிய தாயத்து
(இதை ஸ்பெஷல் ஆர்டரின் பேரில் பெற்றுக்கொள்ளலாம்)

குழப்பப் பந்தி!

ஒரு திருமண வீடு. வந்தவர்கள் எல்லோருக்குமே சாப்பாட்டைச் சீக்கிரம் முடித்துக் கிளம்ப வேண்டுமென்ற அவசரம். ஒரு பந்தியில் ஒரு இடத்தில் நாலு பேர், இன்னொரு மூலையில் நாலு பேர் என்று ஆளுக்காள் அழைத்துப் போய் உட்கார வைத்துப் பரிமாறச் சொல்லி விட்டார்கள். இந்த கோடிக்கும் அந்த கோடிக்குமாக வேண்டியதைக் கொண்டு போய் பரிமாற பரிசாரகர்கள் இறைப் போனார்கள். சாப்பிட்டவர்களுக்கோ, "ஒவ்வொன்றுக்கும் காத்திருந்து காத்திருந்து கேட்டுக் கேட்டு வாங்கினோம், சரியான கவனிப்பு இல்லை" என்ற குறை. விருந்து கொடுத்தவர்களுக்கும் திருப்தியாக உபசரிக்க முடியவில்லையே என்ற வருத்தம்.



பல திருமண வீடுகளில் குழப்பமான பந்திதான் அமைந்து விடுகிறது. இதைத் தவிர்க்க ஒரு பந்தி முழுதாக முடிந்தபின் அடுத்த பந்திக்குக் கூப்பிட்டு உட்கார வைத்து வரிசையாகப் பரிமாறினால் சிறப்பாக இருக்குமே!

- நா. ராஜேஸ்வரி, மதுரை - 14.

கல்யாண



• தோரண வாயில்

சென்னை மாநகரின் தென் மேற்குப் பகுதியில், பல்லாவரம், பம்மலுக்கு அருகிலுள்ள குன்றத்தூருக்கு இரண்டு சிறப்புகள் உண்டு. ஒன்று, குன்றின் மேல் உள்ள குமரன் கோயில்; மற்றொன்று திருத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாற்றை, வனப்பமான தமிழில் 'பெரிய புராணம்' என்ற பெயரில் பக்தி உலகத்துக்கு வழங்கிய பெரும் புலவர் சேக்கிழார் பிறந்த ஊர். இவை தவிர சாந்நித்யமுள்ள திருநாகேஸ்வரன் கோயில், பொன்னி அம்மன் கோயில், திருஊரகப் பெருமான் கோவில், சேக்கிழார் கோயில் என்று நிறைய கோயில்கள் நிறைந்திருப்பதால் 'கோயில் ஊர்' என்று சுற்று வட்டார மக்கள் குறிப்பிடும், இத்தகைய செல்வமலி குன்றத்தூரில் இன்னொரு கோயிலும் சமீபகாலமாக பிரசித்தி அடைந்து வருகிறது.

குன்றத்தூர் முருகன் கோயிலுக்குக் கிழக்கில், மிக அருகில், திருநீர்மலை செல்லும் சாலையில் ஸ்ரீ காத்யாயனி அம்மன் கோயில் 'சக்தி கோயில்' என்ற பெயருடன் அமைந்துள்ளது.

சுமார் இரண்டு கிரவுண்ட் பரப்பளவு நிலத்தில், அமைந்திருக்கும் இந்தக் கோயில், பல்லவர் காலத்தைச் சேர்ந்தது என்று கூறப்பட்டாலும், அதற்கான சான்றே இல்லாதபடி, சமீபத்தில் நடந்த திருப்பணிகளால், ஜீர்ணோத்தாரணம் செய்யப் பெற்று, வண்ணக் கலவைகளால் தீட்டப்பட்ட புதிய சிற்பங்களுடன், கோயிலும், விமானங்களும், புதுப் பொலிவு பெற்று பழைய கோயில் என்பதையே மறைத்து விட்டன.



• அம்மன் சன்னிதி



• அலங்காரத்தில் அம்மன்

கோயிலின் தோரண வாயிலுக்குள் நுழைந்தவுடன் தென்படுவது மகாமண்டபத்துடன் கூடிய சிறிய சன்னிதி. அங்கு மூன்றுகட்ட ஏகதள விமானக் கருவறையில், ஸ்ரீ மங்களமாரி அம்மனும், ஸ்ரீ கிருஷ்ணமாரி அம்மனும் தரிசனம் தருகிறார்கள். ஆறடி உயர மங்கள மாரியம்மன் சுதை சிற்பமாகவும், ஸ்ரீ கிருஷ்ண மாரியம்மன் பஞ்சலோக வடிவத்திலும்



• ஸ்ரீ காத்யாயனி தேவி

திருமணத்தலம்

நீண்டகால, மகப்பேறு இல்லாதவர்களுக்கு ஹோம பிரசாதத்துடன் 'கிரி நிம்ப மூலிகை' (மலை வேம்பு) கலவையைப் பிரசாதமாகக் கொடுக்கிறார்கள்.

அடுத்து முக்கியமான காத்யாயனி தேவி சன்னிதிக்கு வருகிறோம். முகப்பில் மண்டபம்; மேலே பத்ம தள விமானம். கீழே கர்ப்பக்கிரஹத்தில் காத்யாயினி தேவி கருணை தேவியாக காட்சி அளிக்கிறாள்.

பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்கள்.

இவர்களைத் தரிசனம் செய்து கொண்டு பிரதட்சிணமாக வந்தால்

காத்யாயனி!

சன்னிதிக்கு பின்புறம் 'நிம்ப விருட்சத்'துக்குப் பாவாடை சாற்றி பூஜை செய்கிறார்கள் பெண்கள். 'நிம்ப விருட்சம்' என்பது வேப்பமரத்தைக் குறிக்கிறது.

இந்தக் கோயிலில் பிரதி மாதமும் பவுர்ணமி அன்று, ஹோமங்கள் செய்து,

வல மேற்கரத்தில் டமருகம் ஏந்தி, இட மேற்கரத்தில் அங்குசம் பிடித்து, வலக் கையில் தாமரைப்பூவைத் தழுவி, இடக் கையில் பேழையுடன் பத்மாசனத்தில் தேவி காத்யாயனி வீற்றிருக்கிறாள் பிரதான சக்தியாக.

• நிம்ப விருட்ச பூஜை



எப்படிச் செல்லலாம்?

சென்னை பிராட்வேயிலிருந்து மாநகரப் பேருந்துகள் 60ஈ, 60ஏ, 88சி, 88கே. தி. நகரிலிருந்து 88 எல்.
தாம்பரம் - பூந்தமல்லி வழித் தடத்தில் பஸ். நெ. 66
வடபழனியிலிருந்து எம். 88
இதில் 60ஏ, 88 சி - குன்றத்தூர் முருகன் கோயில் வரை செல்கின்றன.
குன்றத்தூர் பஸ் ஸ்டாண்டிலிருந்து சுமார் 1½ கி.மீ. தூரம்.
ஆட்டோக்கள் செல்கின்றன. சக்தி கோயில் என்று கேட்க வேண்டும்.
கோயில் திறப்பு : காலை 8 மணி முதல் 12 மணி வரை
மாலை 5 மணி முதல் 8 மணி வரை.
விசேஷ நாட்களில் மாறுதலுக்குட்பட்டது.

கல்யாண வரம் வேண்டி வருபவர்கள் காத்யாயனி சன்னிதிக்கு மூன்று கிழமைகள் வந்து செல்ல வேண்டும்.

முதல் வாரத்தில், அம்மனுக்கு மாலை அணிவித்து, அர்ச்சனை செய்து, நாக தோஷம், நவக்ரஹ தோஷம் விலகிட வேண்டுதல் செய்ய வேண்டும்.

இரண்டாவது வாரம், ரிஷி, முனிவர்கள் உருவிலுள்ள விசேஷ விருச்சங்களுக்கு விருப்பங்கள் நிறைவேற பூஜை செய்ய வேண்டும். சன்னிதிக்குள் புன்னை மரக்கன்று வளர்க்கிறார்கள். இதற்குத்தான் திருமண பூஜை நடக்கிறது.

"மூன்றாவது வாரம், ஜென்ம பத்ரிகா பூஜை செய்கிறார்கள். அதாவது வரனுடைய ஜாதகத்தை வைத்து, களத்ர தோஷம் நீங்கவும், அனைத்துக் கிரஹங்களும் அனுகூலமான பலன்களைக் கொடுக்கவும், பூஜை செய்கிறார்கள். இப்படி பூஜை செய்து திருமணமானவர்கள் நிறைய பேர் இருக்கின்றார்கள்" என்கிறார் ஸ்ரீ குமார சிவாசாரியார்.

"நாங்கள் தெரிந்தவர்கள் மூலம் இந்த ஆலயத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு, மூன்று வாரங்கள் தரிசனம் செய்து, மூன்றாவது வாரத்திலேயே திருமண பாக்யத்தை அடைந்தோம்'' என்று தெரிவிக்கிறார், போரூரைச் சேர்ந்த மங்கையர் மலர் வாசகி டி. காயத்ரிதேவி.

தனியாரால் நிர்வகிக்கப்படும் இந்தக் கோயிலில் வெள்ளி, சனி, ஞாயிறு, செவ்வாய், அமாவாசை, பௌர்ணமி ஆகிய தினங்களில்தான் விசேஷ பூஜைகள் செய்கிறார்கள்.

கோபியர்கள் கண்ணனைக் கணவனாக அடைவதற்காக, காத்யாயனி பூஜை செய்ததாக ஸ்ரீமத் பாகவதத்தில் குறிப்பு உள்ளது. கேரள தேசத்தில்தான் காத்யாயனி தேவி பூஜை மிகவும் பிரசித்தமானது. வயது வந்த பெண் இருந்தால், "கல்யாணங் கழிஞ்சாச்சோ அம்மே?" என்று பெண்ணின் தாயைப் பார்த்துக் கேட்பார்களாம். "இன்னும் ஆகலே" என்று தாய் சொன்னால் "கல்யாணம் சீக்கிரம் கழிக்க காத்யாயனி பூஜை செய்யுங்கோ" என்பாராம் நம்பூதிரிகள்.

இப்படி மணப்பேறும், பின்னர் மகப்பேறும் மனமுவந்து அளிக்கும் காத்யாயனி தேவியை, பூஜை செய்து, கல்யாணமாலை வழங்க அருள்புரியும்படி கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி வணங்குவோமாக!

- கோழியாலம் நந்தகுமார்



• ஸ்ரீ கிருஷ்ணமாரி சன்னிதி

மணமகள் தேவை

◆ Nattu Kottai Chettiar, 41, Teacher, Uthirattadhi, 15,000 per month, seeks graduate broadminded girl. Simple marriage. Box No. 12960

◆ Iyer, Srivatsam, Vadamal, 1976, Pooratathi 4th padam, B.Com., Asst. Manager, Insurance firm, Madurai 2.60 lakhs per annum, seeks employed/ unemployed qualified bride. Contact (044) 24331372 Box No. 12961

◆ Iyer, Ashtasahasram, Vathoolam, Pooradam, 31/182/10,000 working in Ashok Leyland, Chennai, seeks suitable bride. Subsect no bar. Box No. 12962

◆ Iyer, Vadamal, Uthram, Lohitha, Nov. 72/6.1', Specialised in Maya (Dipl. in 3D Animation) Running a software firm in Kochi seeking alliance from respectable family. (Annual Income around 5 Lakhs). email: rajaramsriram@hotmail. com Box No. 12963

◆ Kannada Madhwa Boy, Sownaka Gothram, Uthiram, fair, 30.3.80/5.10', Rs. 28,000/- p.m. prefer employed graduate girl. Ph : 044-25521785. Box No. 12964

◆ Iyer, Brahacharanam, Bharatwajam, Uthiradam, 29/162 HCL Chennai, PL 6 Lac. seeks professionally qualified bride, lakshminarayanan2006@gmail.com Tamilmatri.M656102 Ph : 0424-2431248 Box No. 12965

◆ Iyer, Vadamal, Koundinyam, Rohini (1st padam) 46/167/9 lacs, Legal divorcee, Charismatic, well-settled Tax Consultant Solicits beautiful girl. No dowry. Simple marriage. Divorcees/ widows need not apply. Cell: 9444191969 Phone : 044-22420308 Send BHP to Box No. 12966

◆ Vadama, Koundinya, Pooradam, 31, 170cm, B.Sc., NIIT Language Trainer Sutherland Global Services, Chennai ambitious, fair, 2.2 lacs p.a. needs fair graduate/PG employed girl from decent family. Phone 2670 5325. Box No. 12967

◆ வடமாள், கௌசிகம், மகம், 29 வயது, (எம்.சி.ஏ.) 6.2' உயரம், 55000, துபாயில் வேலை பார்க்கும் பையனுக்கு, டிகிரி, 5.5' உயரத்திற்கு மேல், லக்னத் திற்கு 2ல் கேதுவுள்ள குடும்பப்பாங் கான பெண் தேவை. உட்பிரிவு சம் மதம். தொலைபேசி : 24719206 (அ) 9444921123. பெட்டி எண் : 12969

◆ US based Iyer, Vadamal, Kousikam, Bharani, very fair, affluent, Religious, Post-graduate, Engineer, Pursuing Doctorate, 30 years old, 6 feet, widower, without issue, seeks well educated, home loving Iyer girl. Contact with horoscope, divorcees, widows excuse. Box No. 12970

◆ Redmond Wa, based Iyer, Vadamal, Kousikam, Kiruthigai (Rishaba Rasi), fair, affluent, Religious, 27 years, 6 feet, Graduate Software Engineer with clean habits, seeks suitable well educated Iyer girl. Contact with horoscope. Box No. 12971

◆ Iyer, Ashtasahasram, Athreya, Pooram, 32, 5.8', DME, employed International Call Centre, Chennai, Salary above 30,000 seeks good looking bride from respectable family. Contact Parvathi, Mother 044-2244 7114 Box No. 12972

◆ N.A. Dt., Iyer, Vadamal Boy, Kausika, Punarvasu, 1973, B.Sc., 73", 16,000/- p.m., self employed seeks bride. 64" graduate to settle at Tuticorin: Ph:

0461-2347032 Box No. 12973

◆ Iyer, Vadamal, Kaundinya, Pooram, 35, M.Sc., 160 cms, self employed, clean habits, financially sound seeks good-looking graduate girl. Religious and attached to family. Subsect no bar. Boy's elder brother married in other caste and well settled. Mobile No. 098472 27325. Send BHP to Box No. 12974

◆ Wanted educated homely tall slim bride for a Tamil Hindu Boy B.E., 35/ 180cm, Govt. employee, Legally separated. Ph : 0821-6450143 Cell : 94421 06301Box No. 12975

◆ ஐயர், அஷ்டசஹஸ்ரம், ஆத்ரேய, திருவோணம், வயது 30, எம்.ஏ., எம்.ஃபில்., தமிழ் ஆசிரியர், சம்பளம் ரூ. 4500/- சொந்த வீடு, அப்பா, அம்மா - அரசுப் பணி, குடும்ப வருமானம் ரூ. 30,000/- படித்த நல்ல மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். செல்: 9840571519 பெட்டி எண் : 12976

◆ Saiva Pillai, Barani, 25, 5.8', B.Com., M.F.M., Rs. 10,000 p.m. clean habits, seeks educated and employed good looking girl. Contact : 080-32954452, 080-4167 6237. Box No. 12977

◆ Iyer, Bharadwaja, Vathima, July 1964, Poosam, 168cm, B.E., (REC Trichy) Senior Management Position in a large Public Limited Company at Chennai, propertied and financially very affluent, legal divorcee living with 12 year old son, only child. Solicits home loving suitable match. Any Brahmin Spinster/Divorcee without encumbrances. Reply horoscope, Bio-data to Box No. 12979

◆ Iyer, Vadamal, Koundinyam, Sadhayam, 79/166. B.E. (REC.) SWE/ MNC Singapore, Seeks Prof. Qualified girl from good family background. Cell : 94439-85079 Box No. 12980

◆ Telugu Brahmin, Velanadu, Bharadwaja, Makam, 45/168, B.Sc., Computer Dip. employed Govt. Insurance Co., Rs. 20,000/- seeks suitable Tamil/Telugu Brahmin bride preferably graduate employed/ unemployed. Reply horoscope biodata. Ph : 080-2310 7476 Box No. 12981

◆ **Kerala Iyer, Vadamal, Bharadwajam, Karthikai, 172 cms, B.E. Mech., Executive Larsen Toubro, seeks bride, good looking, professionally qualified, Kerala/Tamil Brahmin, Decent family. Subsect no bar. Contact with BHP to Box No. 12982**

◆ தென்கலை, கௌசிகம், திருவோணம், பி.ஈ., 27, 178, Teetotaller, மாத வருமானம், 10,000/ - தனியார் நிறுவனம், வங்கி, எல்.ஐ.சி., ரயில்வே, அரசுப் பணியில் உள்ள குடும்பப்பாங்கான பெண் தேவை. பிராமணரில் எப்பிரிவும் சம்மதம். Brahmin intercaste also welcome. ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 12983

◆ Iyengar, 54 years, widower Central Govt. Gazetted Officer, 22,000 p.m. + properties teetotaler, very healthy staying alone needs healthy life partner Brahmins only call 09343 489013 after 6 p.m. Box No. 12984

◆ Iyer, Vadamal, Haritha, Pooradam-2, 36, 7th place Kethu, Lagnam Rahu, well settled, no responsibilities, Own Business, seeks suitable bride, willing to settle in Tanjore Distt, Subsect no bar. Contact : 944494 6543. Box No. 12985

◆ **ஐயர், அஷ்டசகஸ்ரம், வாதூல கோத்திரம், உத்திராடம், 28, பி.காம்., எம்.சி.ஏ., சிஸ்டம்ஸ் என்ஜினியர், H.P. பெங்களூர், வரனுக்கு படித்த மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். போன்: 044-2372 0921. பெட்டி எண் : 12986**

◆ வடமாள், கௌதம, விசாகம், 1973, 180 செ.மீ., சிகப்பு நிறம், பி.காம். (சி.ஏ. இன்டர்), வியாபாரம், மாத வருமானம், ரூ. 20,000/- சொந்த வீடு உள்ளது, நல்ல குடும்பப்பாங்கான பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். போன்:(04175) 224715 பெட்டி எண் : 12987

◆ Iyengar, Vadagalai, Gargiya, Pooram-2, 1969/165, B.A., (ACS & ICWA) Own Business, Legal Divorcee, Owned 3 Houses seeks educated girl age 29-33. Subsect no bar. Contact : 04362-248061, 98945-11171. Box No. 12988

◆ Iyer, Vadamal, Bharadwajam, Visakam 4th padam, 7.4.1977, 5.8', wheatish, B.Com., Computer, Diploma Rs. 30,000 p.m., Southerland Globel Service in Madras seeks girl. Employed/unemployed preferable. Contact : 0484-2311299 Box No. 12989

◆ Iyer, Vadamal, Bharadwajam, Bharani, 34/176, B.Com., employed in Ltd., Company, Chennai Earning Rs. 20,000/- seeks educated, employed girl. Contact : Ph. No. 044-22651725 Box No. 12990

◆ Iyer, Brahacharanam, Bharadwaja, Uttirattathi II, 31 years, 5.9', M. Pharm Ph.D., Lecturer BITS Pilani seeks well qualified home loving girl. Subsect no bar. Contact : 044-2362 2847. Box No. 12991

◆ Iyer, Brahacharanam, Kousigam, Thiruvadirai, 29/177, B.Com., very fair, Handsome, Sr. Executive, Chennai based 2.75 Lakhs p.a. seeks fair, good-looking, Tamil Brahmin graduate bride. 24-26, 160-165. Subsect acceptable. Phone : 23760754 Box No. 12992

◆ ஐயர், அஷ்டசஹஸ்ரம், கௌண்டின்ய கோத்திரம், மகம், 32, 175, எம்.எஸ்ஸி., சாஃப்ட்வேர் கம்பெனி பையனுக்கு குடும்பப்பாங்கான பட்டதாரி மணப்பெண் தேவை. அனுகவும். 044-22230330. பெட்டி எண் : 12993

◆ Smartha Kannada, Kashyapa, Bharani-2, Mesham, 37/170, Software Engineer at Bangalore Rs. 35,000/- seeks bride from Kannada Brahmins. Subsect no bar. Reply with horoscope to Box No. 12994

◆ Madhwa Desastha, Kasyapa, Makam, 33/158, D.E.C.E. (B.B.A.) employed in MNC, Seeks educated, preferably employed girl. Subsect no bar. Box No. 12995

◆ Iyer, Ashtasahasram, Baradwaja, Revathi, 33/180, ICWA (Inter), MBA, Employed in MNC, 6 Lacs p.a. seeks educated, Good-looking girl. Subsect no bar. Box No. 12996

◆ Iyer, Vadamal, Haritham, Kettai, 46/5.5', MA, B.Ed., BSNL, 13,000/- p.m. seeks educated bride. Divorcee without encumberence also acceptable. Contact Cell No. 9444833379, 9841103341 Box No. 12997

◆ ஐயர், வடமாள், ஆத்ரேயம், திருவோணம், 38, பி.ஏ., டி.சி.ஏ., 5.8', 13,000 சென்னையில் மத்திய அரசு உத்தியோகம், வேலைக்குப் போகும்/போகாத, பட்டதாரி/பட்டதாரி அல்லாத பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். எளிய திருமணம். சொந்த வீடு உண்டு. ஃபோன் : (044-65641552) பெட்டி எண் : 12998

◆ Alliance invited from beautiful, slim, educated, well-cultured Iyer bride below 24 for handsome, Chennai based Telugu Brahmin groom following Tamil Customs, Bharadwajam, Thiruvadhirai, 26/5.9'; BE Civil Own Income from family construction Business Rs. 5.00 Lakhs per annum, having Own Flat/Car. Tamil Matrimony ID:M598003

email:adityabwj@yahoo.com Mobile :98402 99014 Box No. 12999

◆ **Iyer, Brahacharanam, Koundinyam, Kettai, 32/174cm, 25,000/- p.m. MA/D.E.E. Senior Design Engineer working in Bangalore for a Chennai based company seeks graduate girl preferably working in a transferable job. Subsect no bar. Box No. 13000**

◆ Iyer, Vadamal, Kousikam, Punarpoosam-1, Feb. 76/5.5', DEEE, Senior System Administrator, Chennai, Rs. 16,500/- p.m. seeks fair, graduate employed girl. Subsect no bar. Contact : 044-2624 5590, 94441-92231 Box No. 13001

◆ ஐயர், ஸ்ரீவத்ஸ, திருவாதிரை, வடமாள், வயது 25, 5¾ அடி, பி.காம்., எம்.பி.ஏ., எம்.என்.சி., 20,000 பையனுக்கு அழகுள்ள குடும்பப்பாங்கான வேலைக்குச் செல்லும் பெண் தேவை. ஃபோன்: 2658 1102 பெட்டி எண் : 13002

◆ Balija Naidu, 38/165/ Thiruvonam, fair, B.Com., PGDCA, 12,000/- p.m. employed in Ltd Co., Chennai. Seeks graduate good-looking bride. Ph.No. 040-27221561, email: bhanu45@gmail.com Box No. 13003

◆ Vadama, Iyer, Bharatwajam, 44 years, Bachelor, Pvt. Sector, Rs. 20,000/- p.m., seeks suitable Brahmin bride simple marriage also acceptable. Reply with horoscope to Box No. 13004

◆ ஐயர், அஷ்டசகஸ்ரம், கபி, பூரட்டாதி-2, 1978, டிஎம்ஈ, ஜூனியர் டிசைன் என்ஜினியர், அபுதாபி, ரூ. 50,000/- மாத வருமானம் உள்ள மணமகனுக்கு பட்டதாரி பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். போன்:94434 93760 பெட்டி எண் : 13005

